கோகுலம்

GOKULAM

மே 84 ரூ 2





ரவீந்திரநாத தாகூர்

பிறந்த தேதி:மே 7



கோகுலம்

மலர்—2 இதழ்—4 1984 மே மாத இதழ்

கௌரவ ஆசிரியர்:

அழ. வள்ளியப்பா

தனிப்பிரதி ரூ 2/- ஆண்டுச் சந்தா ரூ. 24/-

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
- பாரதியார்

கோகுலம்

அன்புள்ள சிறுவர் சிறுமியர்க்கு...

வண்ணப் படக்கதை,
'கருணை' விழிகள்' தொடர்கதை
-இந்த இரண்டும் உங்கள் உள்ளத்தை மிகவும் கவர்ந்துள்ளன. தினந்தோறும் எங்களுக்கு வரும் ஏராளமான கடிதங்களிலிருந்து இதைத் தெரிந்து கொள்கிறோம்.

சென்ற இதழில் வெளிவந்த பிருந்தாவனக் கவியரங்கத்தைப் பாராட்டி உங்களில் பலர் எழுதியிருக்கிறீர்கள். இந்த இதழில், பிருந்தாவனக் கதையரங்கத்திற்குள் நுழைந்து களிப்பிலே மூழ்கப் போகிறீர்கள். அடுத்த இதழில்...? பிருந்தாவனக் கதையரங்கத்துடன் பிருந்தாவனக் கவியரங்கமும் இடம்பெறும்! உங்கள் கைவண்ணத்தையும், கற்பனைத் திறமையையும் வெளிப்படுத்த இது நல்லதொரு வாய்ப்பு அல்லவா?

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினரில் சிலர், பிருந்தாவனம் பகுதிக்கு எழுதி அனுப்பும்போது, தங்கள் பெயர்களையும் உறுப்பினர் எண்களையும் குறிப்பிடுகிறார்கள். முகவரியைக் குறிப்பிடாதிருக்கிறார்கள். இன்னும் சிலர், உறுப்பினர் எண்களை மட்டுமே கொடுக்கின்றனர்! 'எங்கள பெயர்களைக் கண்டுபிடியுங்கள், பார்க்கலாம்' என்பது போலிருக்கிறது இது. உடனே, நாங்கள் அவர்கள் அனுப்பிய உறுப்பினர் மனுவை எடுத்துப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது! எதை எழுதி அனுப்பினாலும், அதில் பெயர், உறுப்பினர் எண், சரியான முகவரி(பின் கோடு உட்பட)இருந்தால் நல்லது. அப்போதுதான் உறுப்பினர் ஒருவர் எழுதியது கோகுலத்தில் வெளி வந்ததும், இதழ் அனுப்பவும் சன்மானம் அனுப்பவும் எங்களுக்கு வசதியாக இருக்கும்.

விடுமுறையில் உங்களுக்கு எப்படிப் பொழுது போகிறது. நல்ல நல்ல புத்தகங்களைப் படியுங்கள். அறிவையும் பண்பையும் வளர்த்துக் கொள்ளுங்கள்.


எழுதுவதில் ஆர்வமுடையவர்கள் கோகுலத்திற்கு கதை, கவிதை, கட்டுரை, நகைச்சுவை, துணுக்கு எழுதி அனுப்புங்கள். எதுவும் உங்கள் சொந்தமாக இருக்கட்டும். 'அறிவியல் துணுக்கு' என்றால், ஆதாரம் எதுவென்று குறிப்பிடுங்கள்.

அழ. வள்ளியப்பா






திருக்குறள் புதிர்




மேலேயுள்ள ஒவ்வொரு படமும் ஒரு திருக்குறளை நினைவூட்டும். எந்தெந்தத் திருக்குறள் எனக் கண்டுபிடித்து, தனித்தாளில் எழுதுங்கள். பிறகு 30-ஆம் பக்கத்தைப் புரட்டிப் பாருங்கள்.



தமிழ்ப்பித்தன்



பொன்மடலை சம்பத்



ஆ. சோடன்




ஆர். சிதம்பரம்



என். சீதாலெட்சுமி



அ. கலைச் செல்வன்



கு. குமார்



ப. குமரவேல்

இந்த இதழ் எழுத்தாளர்கள்



கௌரவ ஆசிரியருக்குப் பாராட்டு

கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கம் தனது வெள்ளி விழாவை யும், அகில இந்திய தமிழ் எழுத் தாளர் மாநாட்டையும் மார்ச் மாதம் கோலாகலமாகக் கொண்டாடியது.

அப்போது, பிறமொழி எழுத் தாளர் அறுவருக்கும், தமிழ் எழுத் தாளர் அறுவருக்கும் குத்து விளக்கு களை வழங்கிப் பாராட்டியது. மேற்கு வங்கப் பொதுப் பணித் துறை அமைச்சர் ஜதின் சக்ரவர்த்தியவர்கள் 'கோகுலம்' கௌரவ ஆசிரியருக்குச் சிறப்புச் செய்வதைப் படத்தில் காண லாம்.

கௌரவிக்கப்பட்ட மற்ற எழுத்தாளர்கள்: டாக்டர் லட்சுமி, திருவாளர்கள் நாரண துரைக்கண்ணன், கு. ராஜவேலு, விக்கிரமன், சிதம்பர ரகுநாதன்.

முகப்பு வண்ணப்படம்: திலீப் பானர்ஜி
பின்புற அட்டை-புகைப்படம்: எம். நடராஜன்

காலும் தோலும்

பழைய கதை;
புதிய பாடல்

✽ குழந்தைக் கவிஞர் ✽

அரசர் ஒருவர் அமைச்ச ரோடு
நடந்து சென்றனர்;
''ஐயோ!'' என்று கதறிக் கொண்டே
கீழே குனிந்தனர்;

நெருஞ்சி முள்ளைக் காலில் இருந்து
பிடுங்கி எடுத்தனர்;
நெருங்கி வந்த அமைச்ச ரிடத்தில்
அதனைக் காட்டினர்.

''செல்லு கின்ற இடத்தி லெல்லாம்
முள்ளுக் குத்தினால்,
சிரமம் எனக்கே அதிக மாகும்.
ஆத லாலே நீர்
எல்லா இடமும் மாட்டுத் தோலைப்
பரப்பச் சொல்லுவீர்''
எமது ஆணை'' என்றே அரசர்
உடனே கூறினார்.

''அரசே, தங்கள் ஆணைப் படியே
செய்வேன்; ஆயினும்
அதிக மான சிரமத் தோடு
செலவும் ஆகுமே!
தரையில் எங்கும் தோலைப் பரப்ப்
வைப்ப தைவிடத்
தங்கள் காலில் தோலை அணிந்து
கொள்ளலா மன்றோ?

''காலில் தோலை அணிந்து கொண்டு
தாங்கள் நடந்திடின்,
கல்லோ, முள்ளோ, சூடோ எதுவும்
தொல்லை கொடுக்குமோ?
நாளை யேநான் தோலி னாலே
அணிகள் செய்திட
நடவ டிக்கை எடுப்பேன் ''என்றே
அமைச்சர் கூறினார்.

அடுத்த நாளே செருப்பை அணிந்து
அரசர் நடந்திட,
அவரைப் பார்த்து நாட்டு மக்கள்
அணியத் தொடங்கினர்.
'உடுப்பைப் போலக் காலில் அணியச்
செருப்பும் தேவையே!'
உலகம் முழுதும் இதனை நன்கு
உணர்ந்து கொண்டதே!





சிறிய வயதிலே பிரதாப முதலியார்

[தமிழிலே முதல் முதலாக நாவல் எழுதியவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளையவர்கள். நாவலின் பெயர்: பிரதாப முதலியார் சரித்திரம். 105 ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்தது. இந்த நாவலில் செல்வக் குடும்பத்திலே பிறந்த பிரதாப முதலியார், தம் இளமைப் பருவத்தில் நடந்த சுவையான நிகழ்ச்சிகளைக் கூறுகிறார். ஒவ்வொரு நிகழ்ச்சியும் நம்மைச் சிரிக்க வைக்கிறது; சிந்திக்கவும் வைக்கிறது!]

ஓர் உபாத்தியாயர் குடும்ப சகிதமாய் எங்கள் வீட்டில் இருந்து கொண்டு, எனக்கும் அவருடைய பிள்ளை கனகசபை என்பவனுக்கும் பாடம் சொல்லிக் கொண்டுவந்தார்.

ஒருநாள் என் பாட்டியார், உபாத்தியாயரைப் பார்த்து, "நம்முடைய பிள்ளையாண்டான் படித்துப் படித்துத் தொண்டை வறண்டு போகிறதே! இனிமேல் உம்முடைய மகன் கனகசபை பாடம் படிக்கட்டும். அவன் படிக்கிறதைக் கேட்டு, என் பேரன் கல்வி கற்றுக் கொள்ளட்டும். பிற்பாடு என் பேராண்டிக்குப் பாடம் தெரியாவிட்டால், அவனுக்குப் பயம் உண்டாவதற்காகக் கனகசபையைப் பலமாக அடியும்" என்றார்கள்.

உபாத்தியாயருடைய வயிற்றுக் கொடுமையினால், இந்த அநியாயமான நிபந்தனைக்கும் சம்மதித்தார். எனக்குப் பாடம் தெரியாத போதெல்லாம் உபாத்தியாயர் கனகசபையை அடிப்பார். அவன் இல்லாத போது உபாத்தியாயர் தம் முதுகிலும் அடித்துக் கொள்வார். நான் பாடத்தைச் சரியாய்ப் படித்த நேரமும் இல்லை; கனகசபை அடிபடாத நேரமும் இல்லை...

ஒருநாள் உபாத்தியாயர் கனகசபையை முதுகில் அடித்தபோது, அவன் அழுது கொண்டு, "ஐயா! என் முதுகு ஒரு அபராதமும் செய்யவில்லையே! இவ்வளவு பாடும் வயிற்றுப் பிழைப்புக்காகத்தானே! ஆகையால், வயிற்றில் அடியுங்கள்" என்றான். அதைக் கேட்டவுடனே எனக்கு இரக்கம் உண்டாகி, என் கண்ணில் ஜலம் ததும்ப ஆரம்பித்தது.

நான் ஒரு அட்சரம் கற்றுக்கொள்வதற்குக் கனகசபை அநேகம் அடிபடுவான். இப்படியானால், தமிழ் நெடுங்கணக்கு முழுவதும் எனக்குப் பாடம் ஆவதற்கு முன், அவன் எத்தனை அடி பட்டிருப்பானென்று புத்திமான்கள் கணக்கிட்டுத் தெரிந்து கொள்ளப் பிரார்த்திக்கிறேன். அவன் உயிருக்கும், உடலுக்கும் அபாயம் வரும்படியாக, அவனுக்கு அடிவாங்கிக் கொடுத்த அட்சரங்களுக்கு உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து என்று பெயர் வைத்தது பொருத்தமல்லவா?

* * *

என் வீட்டில் என்னைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் சுரத்தி

னாலும், அம்மையினாலும் உபாதைப் பட்டார்கள். அவர்களைப் பல பேர் வந்து விசாரிக்கிறதும், உபசாரம் செய்கிறதுமாயிருந்தார்கள். என்னை ஒருவரும் விசாரிக்காதபடியால், நான் ஒரு மூலையில் அழுது கொண்டிருந்தேன். எல்லோரும் ஓடிவந்து, ''ஏன் அப்பா அழுகிறாய்?'' என்று கேட்டார்கள். ''எனக்கு சுரமாவது அம்மையாவது வரவில்லையே!'' என்று தேம்பித் தேம்பி அழுதேன்.

* * *

எந்த வேலையிலும் சோம்பலாயிருக்கக் கூடாதென்றும், தொட்ட காரியத்தை உடனே முடித்துவிட வேண்டுமே தவிர, நாளைக்கென்று நிறுத்தி வைக்கக் கூடாதென்றும் என் தாயார் எனக்கு அடிக்கடி புத்தி சொல்லி வருவார்கள். நான் அந்தப் புத்தியை, பட்சண விஷயங்களில் உபயோகப்படுத்தி, எத்தனை பட்சணங்கள் அகப்பட்டாலும், நாளைக்கென்று வையாமல், உடனே சாப்பிட்டு, மந்தப்பட்டு, வைத்தியர்களுக்கு ஓயாத வேலை கொடுத்து வந்தேன்!

* * *

எங்கள் வீட்டில் ஒரு பெரியவருக்கு நோய் மிகவும் முற்றிப் போய்விட்டது. வைத்தியர்களும் கைவிட்டுவிட்டார்கள். எமன் வந்து உயிரைக் கொண்டு போவானென்று நான் கேள்விப்பட்டிருந்தபடியால், கதவை மூடி வைத்திருந்தால், எமன் எந்த வழியாய் வருவான் என்று நினைத்து, அந்தப் பெரியவர் படுத்திருந்த அறையின் கதவை மூடி, துவாரங்களையெல்லாம் துணியால் அடைத்துவிட்டேன்; அப்படிச் செய்தும் அந்தக் துஷ்ட யமன் எந்த வழியாகவோ வந்து பிராணனைக் கொண்டுபோய் விட்டான்!

* * *

ஒரு பிரசித்தமான பொய்யன், என்னிடத்தில் வந்து, தன்னுடைய ஆயுசு முழுமையும், தான் ஒரு நிஜம் சொன்னதில்லை என்றான்.

''நீ ஒரு நிஜம் சொல்லியிருக்கிறாய்'' என்று நான் சொல்ல, அவன், ''இல்லை! இல்லை!!'' என்றான்.

''ஆயுசு முழுவதும் நிஜம் சொன்னதில்லையென்று நீ சொல்வது நிஜம் அல்லவா?'' என்றேன். அவன் சரி என்று ஒப்புக்கொண்டு என்னைப் பார்த்து, ''நீ ஒரு பொய் சொல்ல வேண்டும்'' என்றான். நான் உடனே, ''நீ யோக்கியன்'' என்றேன்.

* * *

ஒருநாள் இராத்திரி, நான் தங்கக் காப்புகளும் கொலுசுகளும் போட்டுக் கொண்டு நித்திரை செய்தேன். ஒரு திருடன் எவ்விதமாகவோ உள்ளே நுழைந்து, எல்லோரும் தூங்குகிற சமயத்தில், என்னுடைய ஒரு கை காப்பையும், கொலுசையும் கழற்றிக்கொண்டு ஓடினான். நான், உடனே, ''திருடரே! திருடரே! இன்னொரு கைக்காப்பையும், கொலுசையும் மறந்து விட்டீரே!'' என்று கூவினேன். அந்த அரவம் கேட்டு, எல்லோரும் விழித்துக் கொண்டார்கள்; திருடனும் அகப்பட்டுக் கொண்டுவிட்டான்!

* * *

நானும் சில பிள்ளைகளும், குதிரைப் பந்தயம் விட்டபோது, என் குதிரை எல்லோருடைய குதிரைகளுக்கும் பிந்திப் போய் விட்டதால், எல்லோரும் என்னைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்தார்கள். நான்,









''என்னுடைய குதிரை எல்லோருடைய குதிரைகளையும் துரத்துகிறது'' என்று கூறி, அவர்களுக்கு மேல் அதிகமாகச் சிரித்தேன்.

❋ ❋ ❋

என் தாயார் உத்தரவுப்படி நானும் கனகசபையும் என் அம்மானுகிய சம்பந்த முதலியார் வீட்டுக்குப்போய், அவருடைய மகளாகிய ஞானம்பாளின் உபாத்தியாயரிடத்திலே கல்வி கற்க ஆரம்பித்தோம். எங்களுடைய படிப்பைப் பரிசோதிப்பதற்காக, அந்த உபாத்தியாயர் எங்களைப் பார்த்து, ''உயிரெழுத்து எத்தனை? மெய்யெழுத்து எத்தனை?'' என்று கேட்டார். அதற்குப் பதில் கூறத் தெரியாமல், நான் கனகசபை முகத்தைப் பார்த்தேன். அவன் ஆகாசத்தைப் பார்த்தான். பிற்பாடு, ஏதாவது சொல்லித் தொலைக்க வேண்டுமே என்று நினைத்து. ''உயிரெழுத்து 50, மெய்யெழுத்து 100'' என்றேன்.

உடனே வாத்தியார் அதிகாரம் செய்து. ''நீ சொல்வது சரியல்ல; ஞானம்பாளை அழைத்து வா'' என்று உத்தரவு கொடுத்தார்.

நான் ஞானம்பாளிடத்திலே போய், ''உயிரெழுத்து எத்தனை? மெய்யெழுத்து எத்தனை?'' என்று கேட்க, அவள், ''உயிரெழுத்துப் பன்னிரண்டு; மெய்யெழுத்துப் பதினெட்டு'' என்று சொன்னுள்.

''நான், உயிரெழுத்து ஐம்பது, மெய்யெழுத்து நூறு என்று அவ்வளவு அதிகமாகச் சொல்லியும் உபாத்தியாயர் ஒப்புக் கொள்ளவில்லையே! நீ குறைத்துச் சொல்கிறதை அவர் ஒப்புவாரா?'' என்று சொல்லி அவளை அழைத்துக்கொண்டு போய் உபாத்தியாயர் முன்பாக விட்டேன். அவள், அவரிடத்தில் முன்சொன்னபடியே சொன்னுள். உபாத்தியாயர் அவள் சொன்னதுதான் சரி என்று எங்களுக்குத் தெரிவித்தார்.

❋ ❋ ❋

ஒருநாள், நாங்கள் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருக்கும்போது ஒரு மரத்தில் அபூர்வமாய்ப் பழுத்திருந்த இரண்டு பழங்களை, ஞானம்பாள் பறித்துக் கொண்டு வந்து, என் முன்பாகவும், கனகசபை முன்பாகவும் வைத்துப் புசிக்கும்படி சொன்னுள்.

நான் கணக்கில் என் வல்லமையைக் காட்டுவதற்காக அவளைப் பார்த்து, ''இவை எத்தனை பழங்கள்?'' என்றேன். ''அவள் இரண்டு பழம்'' என்றுள். நான், ''மூன்று பழம்'' என்றேன்.

அவள் எப்படி என்று கேட்க, அந்தப் பழங்களை வரிசையாய் வைத்து, எண்ணும்படி சொன்னேன். அவள், ''ஒன்று, இரண்டு'' என்று எண்ணினுள்.

நான் உடனே, ''ஒன்றும் இரண்டும் மூன்றல்லவா?'' என்றேன்.

''அவள், ''ஆம், ஆம்'' என்று கனகசபையைப் பார்த்து, ''அண்ணு, நீங்கள் ஒரு பழம் தின்னுங்கள். நான் ஒரு பழம் எடுத்துக் கொள்கிறேன். அத்தான் ஒரு பழம் அருந்தட்டும்'' என்று சொல்லி, அவள் ஒரு பழத்தைத் தின்று விட்டாள்; கனகசபை ஒரு பழத்தை விழுங்கி விட்டான். நான் ஒன்றுமில்லாமல் வெறும் வாயைச் சப்பினேன். இவ்வகையாக என் கணக்கின்சாமர்த்தியத்தைக் காட்டப்போய்க் கனியை இழந்து ஏமாறினேன்.

தொகுப்பு: நம்பி

நன்றி: வே. ஞா. ச. இருதயநாதன் (வேதநாயகம் பிள்ளை மகன் பேரர்.)



மோகனுக்காகவே வள்ளுவர் பாடினாரோ!

● 'ஸ்ரீ ஹர்ஷ சரிதம்' பத்தேதப. கருங் கிய சொற்களால் பெரிய சரிதத்தை வண்ணப் படங்களுடன் விளங்க வைத்துள் ளார்கள்.

—ம. பூங்கோதை, திருமயம்.

● 'ஸ்ரீ ஹர்ஷ சரிதம்' சர்க்கரையாக இனித்தது. இதுபோன்ற கதைகளைத் தொடர்ந்து வெளியிடுங்கள்.

க. நடராஜன் (5500), ஈரோடு-2.

● 'கருணை விழிகள்' மோகனை நினைக்கும் போது, வள்ளுவர் மோகனுக்காகவே,

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை

இகழ்வார்ப் பொறுத்தல் தலை

என்னும் குறளை இயற்றியிருப்பாரோ என்று எண்ணத் தோன்றுகிறது

—அ. அன்சர் அலி (2843), விருத்தாசலம்

● 'மாலியும் ஜாலியும்' ஆரம்பமே வெகு ஜோர். வண்ணத்தில் வெளியிட்டிருக்க லாமே!

—சவிதா பத்மநாபன், செகந்திராபாத்

● ஒருநாள் சிறை வாசம் படித்து நானும் பிராணிகளைத் துன்புறுத்துவதை விட்டு விட்டேன்

—வி. ஞானஸ்கந்தன் (2377), செருகளத்தூர்

● பிருந்தாவனக் கவியரங்கத்தில் இடம் பெற்ற அனைத்துக் கவிதைகளுமே வெகு ஜோர்!

—என். சந்திரன் (4785), பாவட்டக்குடி.

● அடுத்த இதழில் வெளிவரும் பிருந்தா வனக் கதையரங்கத்தை ஆவலுடன் எதிர் பார்க்கிறோம்.

—ம. தனலட்சுமி (5458), சேலம்—5.

● கோகுலத்தைக் கையில் எடுத்துப் படிக்கத் தொடங்கி விட்டால், வேறு எந்த வேலை யிலும் மனம் ஈடுபட மாட்டேன் என்கிறது.

—பி. சௌந்திரராஜன், கருப்பூர்.

● குடியரசுத் தலைவரிடம் பரிசு பெற்ற குளித்தலை மாணவன் டி. வி. பாலகிருஷ்ண னும், அன்புத் தொண்டாற்றிய என். சீதா ராமனும் உண்மையிலே மாணவ நன் மணிகள்!

—திருச்சி முத்தமிழன்பன், திருச்சி—23.

● 'காவல் காத்த குரங்கு' என்ற மின் மினிக் கதையில் மனிதக் குரங்கு என்று சொல்லிவிட்டு வாலுள்ள குரங்குப்படத்தைப் போட்டு விட்டீர்களே! மனிதக் குரங்குக்கு வால் ஏது ஐயா?

—அ. சேஷசாயி, மேட்டூர் அணை—1.

● 'இளமையில் இவர்கள்' அப்புசாமி, குப்புசாமி' திரும்பவும் வெளிவரவே மாட் டாதா?

—செ. குணசேகரன், மாத்தூர்.

● பிருந்தாவனம் பகுதி ஆரம்பிக்காமல் இருந்தால் இத்தனை பேருடைய திறமை யையும் அறிய முடியாமல் போயிருக்குமே! கோகுலமே, உனக்கு நன்றிகள் பல கோடி!

—இரா. ஓம்பிரகாஷ், குன்னூர்.

● என் அண்ணன் மகன் போட்டி போட்டுக் கொண்டு ஸ்ரீஹர்ஷ சரிதத்தை இரண்டு மூன்று முறை படிக்க, என் அண் ணன் மகள் 'நானும் படிக்க வேண்டும்' என்று அழ, இந்த மாதம் எங்கள் வீட்டில் இரண்டு கோகுலம் வாங்கும்படி ஆயிற்று!

—எம். ஏ. பாஷா ரபீக், சின்னசேலம்—1.

● மின்மினிக் கதைகள் வண்ணத்தில் மின்னு விட்டாலும் தரத்தில் மின்னி விட்டன. விஞ்ஞான விளையாட்டு மிக அருமை!

—எஸ். மன்சூர் அலிகான் அயூப்கான் (5542) நெய்வேலி.

● 'இளமையில் இவர்கள்' பகுதியை ஏன் நிறுத்தி விட்டீர்கள்? இனிமேலாவது நிறுத்தாமல் வெளியிடுங்கள், சார்.


—ஜி ரமேஷ் (3510), கோவை—18.

● உலகப் புகழ்பெற்ற சிறுவர் கதைகளை யெல்லாம் சேர்த்து பைண்ட் பண்ணி வைக்கப் போகிறேன். கோடை விடுமுறை யில் திரும்பத் திரும்பப் படிப்பேன்; நண்பர் களுக்கும் கொடுப்பேன்.

—என். ராமச்சந்திரன், மேலூர்.

● பிழையில்லாமல் எழுதக் கற்றுக் கொடுக்கும் தனிகை உலகநாதருக்கு நன்றி. பழைய கதை; புதிய பாடல் அருமை!

—மு. அப்பாவு, அனிச்சம்பாளையம்.



விண்வெளியில் ஓர் இந்தியரை அனுப்புவதென்று 1981 டிசம்பர் மாதம் முடிவெடுக்கப்பட்டது! அந்த மாதத்திலேயே கிட்டத்தட்ட 150 பேர் விண்வெளிப் பயணத்துக்குத் தகுதியுள்ளவர்கள்தானா என்று தீவிரமாகப் பரிசோதிக்கப்பட்டனர். விமானப் படைத் தலைமையகத்தில் நடைபெற்ற இந்தப் பரிசோதனையில் முதலில் இருபது பேர் தேர்ந்தெடுக்கப்பெற்று, கடைசியில் இருவரே பரிபூரணத் தேர்வுக்குரியவர்களானார்கள். அவர்கள்தான் ராகேஷ் சர்மாவும், ரவீஷ் மல்ஹோத்ராவும்!

இந்திய விமானப் படை அதிகாரிகளான ர்ராகேஷும், மல்ஹோத்ராவும் விண்வெளிப் பயிற்சிக்காக மாஸ்கோவிலுள்ள பிரச்னேவ் நட்சத்திர நகருக்குச் சென்றனர். 1983–ம் வருஷம் விண்வெளிப் பயணத்துக்கான ஆரம்பப் பயிற்சிக் கட்டம் தொடங்கியது. அவர்கள் பயிற்சிக்கு வந்ததும் ரஷ்ய மொழி அவர்களுக்குப் போதிக்கப்பட்டது. இரண்டு மாதத்துக்கொரு முறை இவ்விரு இளைஞர்களுக்கும் வைத்தியப் பரிசோதனை நடந்தது. அவர்கள் பயிற்சிக்கு ஈடுகொடுக்கிறார்களா என்று!

இவ்விரு இளைஞர்களும் விண்வெளிப் பயணத்துக்குத் தயாரானதற்கான நோக்கம், விண்வெளியில் விஞ்ஞானப் பரிசோதனைகளைச் செய்வதோடு, விண்வெளிப் பயணத்தில் மனித உடலுக்கு ஏற்படும் விளைவுகளைக் கண்டறிவதுமாகும். முதல் விண்வெளிப் பயணத்துக்காக ரஷ்ய விண்வெளி வீரர்கள் இருவரோடு ராகேஷ் சர்மா தேர்ந்தெடுக்கப்பட்ட போது, ராகேஷ் சர்மாவின் மனைவி மதுவும் புதல்வன் கபிலும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர். ராகேஷ் சர்மா விண்வெளிப் பயணத்தின் போது யோகாசனப் பயிற்சிகள் செய்து உடலை நோய்த் தாக்குதலிலிருந்து காப்பாற்றிக் கொள்ளப் போவதாகத் தெரிவித்தார்.

ராகேஷ் சர்மா இந்திய விமானப் படையின் ஸ்குவாட்ரன் லீடர். அவர் 1949–ம் வருஷம் ஜனவரி 13–ந்தேதி பஞ்சாபிலுள்ள பாடியாலாவில் பிறந்தார். 1966-ம் வருஷம் ராகேஷ் சர்மா நிஜாம் கல்லூரியில் தம் பட்டப் படிப்பைத் தொடர்ந்து கொண்டிருந்த போது, தேசிய ராணுவ அகாடமியில் சேருவதற்காக, அதை விட்டுவிட்டு இந்த ர்ராணுவப் படிப்பில் கவனம் செலுத்தினார். கரக்வாஸ்லாவில் உள்ள தேசிய ராணுவ அகாடமியில் விமானப் படைப் பயிற்சியாளராகச் சேர்ந்தார். இந்தப் பயிற்சி முகாமில் நாலரை வருஷங்கள் கடுமையாகப் பயிற்சி பெற்றார். 1970–ம் வருஷம் ஜனவரி 13–ந்தேதி இந்திய விமானப் படையில் எடுத்துக் கொள்ளப்பட்டார். விமானப் படையின் பல்வேறு பகுதிகளிலும் பணியாற்றித் தேர்ந்தார்.

1971–ம் வருஷம் நடைபெற்ற பாகிஸ்தான் போரின்போது 'மிக்' விமானத்தில் இவர் ஆற்றிய சாதனைகள் பிரமிக்கத் தக்கவை. பெங்களூரிலுள்ள விமானிகள் பயிற்சி முகா

நாட்டுக்குப் பெருமை தரும் ராகேஷ்



மில் பயிற்சிகளை முடித்துவிட்டு அங்கே சில காலம் பணியாற்றினார். இங்கிருந்துதான் சரித்திரப் பிரசித்தமான விண்வெளிப் பயணத்தை மேற்கொள்ள ரஷ்யாவுக்குப் புறப்பட்டார்! இவர் பல்வகை விமானங்களையும் ஓட்டிச் செல்லும் வல்லமை பெற்றவர். ராகேஷ் சர்மாவுக்குப் பொழுது போக்கு விளையாட்டுக்கள்: கிரிக்கெட், ஸ்குவாஷ், டென்னிஸ் சங்கீதம். புத்தகம் படிப்பதிலும் ஆர்வம் உண்டு.

ராகேஷ் சர்மா மதுவை மணம் புரிந்து கொண்டார். இந்தத் தம்பதிக்கு 1975–ம் வருஷம் ஜனவரி 18–ந்தேதி கபில் என்ற புதல்வன் பிறந்தான். கபில் இன்று பள்ளியில் மாணவனாகத் திகழ்கிறான். தந்தையின் அதியற்புத சாதனையைக் கண்டு புதல்வன் கபில் பூரித்துப் போயிருக்கிறான். ராகேஷின் மனைவி மது அலங்காரக் கலை நிபுணராகப் பெங்களூரில் பணியாற்றியிருக்கிறார். இவரும் தம் கணவர் ராகேஷோடு ரஷ்யாவுக்கு அவரது சாதனையைக் கண்டு களிக்கச் சென்றார்.

ராகேஷ் சர்மாவோடு தேர்ந்தெடுக்கப்பட்ட மல்ஹோத்ரா இந்தியவிமானப் படையில் விங் கமாண்டர். இவர் பாகிஸ்தானிலுள்ள லாகூரில் 1943-ம் வருஷம் டிசம்பர் 25–ம் தேதி பிறந்தவர். இவரும் தேசிய ராணுவ அகாடமியில் பயிற்சி பெற்று விமானப் படையில் பணியாற்ற வந்தவர். இவரது மனைவி மீரா. இவருக்குப் பத்து வயதில் ராக்கி என்ற மகளும் எட்டு வயதில் ரோஹித் என்ற மகனும் உள்ளனர்.

இந்திய சோவியத் விண்வெளிப் பயணத்துக்கு இந்திய சர்க்காரும் சோவியத் சர்க்காரும் உடன்பட்டு இந்த இணைந்த பயணத்தை 1984 முதல் ஆறு மாதங்களுக்குள் நடத்துவதாக ஒப்பந்தம் செய்து கொண்டனர். இந்த விண்வெளிப் பயணத்தின் கால கட்டம் எட்டு நாட்கள்.

மல்ஹோத்ராவும் ராகேஷ் சர்மாவும் பிரஷ்னேவ் நட்சத்திர நகரில் ஒன்றரை வருஷம் யூரி காகரின் முகாமில் பயிற்சி பெற்றனர். இந்த முகாமில் விண்வெளிப் பயணத்தில் ஏற்படும் அத்தனை மாறுதல்களுக்கும் ஏற்பக் கடுமையான பயிற்சிகளைப் பெற்றனர். விண்வெளி லாபரேட்டரியில், பூஜ்ய புவி ஈர்ப்பு சக்தியில் பயணப்படும் விண்வெளிக் கப்பலில் உடற்பயிற்சிகள் செய்தனர். இவை அவர்களைக் கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தின. மாஸ்கோவில் 'சோயுஸ்' 'சல்யூட்' விண்வெளிக் கப்பல்களிலும் இவர்களுக்குப் பயிற்சிகள் தொடர்ந்தன. கடைசியில் விண்வெளிப் பயணத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ராகேஷ் சர்மா, இவரோடு சேர்ந்து விண்வெளியில் பயணப்பட்டவர்கள் ரஷ்ய விண்வெளி வீரர்கள். யூரி மாலிஷேவ், கென்னடி ஸ்தெரகாலோவ்.

காகரின் சொன்ன உண்மை பலித்துவிட்டது. 1961 ஏப்ரல் 2–ந் தேதி அவர் சொன்னார்: ''விண்வெளிக் குடும்பம் இந்திய விண்வெளி வீரரோடு சேர்ந்து பணியாற்றும்!'' ஏப்ரல் 5–ந் தேதி விண்வெளி வீரர் ராகேஷ் சர்மாவோடு பாரதப் பிரதமர் இந்திரா காந்தி உரையாடியது கேட்டு இந்திய மக்கள் பூரிப்படைந்தனர்.

ரஷ்ய விண்வெளி வீரர் இருவரோடு ராகேஷ் சர்மா, சோயுஸ் டி–11–ல் ஏப்ரல் 3–ந் தேதி விண்வெளிப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு பத்திரமாக சோவியத் மண்ணில் இறங்கியது இமாலய சாதனை! ராகேஷ் சர்மா, விண்வெளியில் பதின்மூன்று பரிசோதனைகளை நிகழ்த்தி, இந்திய மண்ணினைப் படம் பிடித்துக்கொண்டு திரும்பியிருக்கிறார். அதோடு யோகாசனப் பயிற்சிகளையும் விண்வெளியில் செய்து பார்த்திருக்கிறார். ராகேஷ் சர்மாவுக்குப் பல உன்னத விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. ரஷ்யாவிலுள்ள உக்ரேனியனிலுள்ள ஜனம் பனேங்கா கிராமத்தில் ஒரு தெருவுக்கு ராகேஷ் சர்மா தெரு என்றுபெயர் சூட்டியிருக்கிறார்கள்! இந்தியா திரும்பும் ராகேஷுக்கு மாபெரும் வரவேற்பு காத்திருக்கிறது.

—பி. எஸ். எம்.

ஜெர்மன் தேசத்துக் குட்டிக் கதைகள்

தேவி

இரு சித்திரக் குள்ளர்கள்!

ஓர் ஊரில் ஒரு செருப்புத் தொழிலாளி இருந்தான். அவன் மிகவும் நல்லவன்; நேர்மையானவன்; பிறருக்கு உதவுபவன். ஆனாலும், பரம ஏழை;

அன்று இரவு அவன் கையில் ஒரு ஜோடி செருப்புத் தைப்பதற்கான தோல்தான் இருந்தது. இரவிலே அதை வெட்டி வைத்துவிட்டுப் படுத்துக் கொண்டான். காலையில் எழுந்ததும், செருப்புத் தைக்க நினைத்தான்.

காலையில் எழுந்து பார்த்த போது, தோல் இருந்த இடத்தில் அழகான ஒரு ஜோடி செருப்பு இருந்தது! அதைக் கண்டு அவனும், அவன் மனைவியும் வியப்படைந்தார்கள்.

அந்தச் செருப்புக்கள் மிகவும் அழகாக இருந்ததால், நல்ல விலைக்கு விற்றான். விற்ற பணத்தில் இரண்டு ஜோடி செருப்புத் தைப்பதற்கான தோலை வாங்க முடிந்தது. இரவிலே அந்தத் தோலை வெட்டி வைத்தான். காலையில் எழுந்து பார்த்தால், தோல் இருந்த இடத்தில் பளபளப்பான இரண்டு ஜோடி செருப்புக்கள் இருந்தன! அவற்றை விற்ற பணத்தில் நான்கு ஜோடி செருப்புக்கான தோலை வாங்கினான். அவையும் முன் போல் செருப்புக்களாயின.



இப்படியே தினமும் நடந்து வந்தது. விரைவில் அவனிடம் நிறையப் பணம் சேர்ந்தது.

''இப்படியெல்லாம் நமக்கு உதவுகிறார்களே, அவர்கள யார் என்றே தெரியவில்லையே! அவர்களைக் கண்டு பிடித்துப் பதிலுக்கு உதவ வேண்டாமா?'' என்றாள் அவன் மனைவி.

அன்று இரவு தூங்காமல் கணவனும், மனைவியும் திரைக்குப் பின்னால் ஒளிந்திருந்து பார்த்தார்கள். நடு இரவில் இரு சித்திரக் குள்ளர்கள் வந்து, அங்கிருந்த தோலை எடுத்து மிகவும் சுறுசுறுப்பாக வேலை செய்தார்கள். அழகான செருப்புக்களைத் தயார் செய்து அங்கே வைத்துவிட்டு மறைந்தார்கள்.

''நாளை இரவு வரும்போது அவர்களுக்கு நாம் வேலை கொடுக்கக் கூடாது. பரிசு கொடுக்க வேண்டும். வெறும் கால் சட்டை மட்டுமே போட்டிருக்கும் அவர்களுக்கு, ஆளுக்கு ஒரு பட்டுச் சட்டை, பூப்போட்ட தொப்பி, கோட்டு, ஒரு ஜோடி அழகான பூட்ஸ் பரிசாகக் கொடுக்க வேண்டும்'' என்றாள் அவன் மனைவி. அப்படியே அவற்றை அறையில் வைத்து விட்டு அவர்கள் ஒளிந்திருந்தார்கள்

சித்திரக் குள்ளர்கள் அவற்றையெல்லாம் கண்டதும் ஆனந்தம் அடைந்தார்கள்; எடுத்து அணிந்து கொண்டார்கள். ஆடினார்கள்; பாடினார்கள்; ஆடிப் பாடிக்கொண்டே மறைந்து விட்டார்கள.

கணவனும், மனைவியும் அந்தக் காட்சியைக் கண்டு களித்தார்கள். அதன் பிறகு, அவர்களுக்கு எந்தக் குறையுமே இல்லை!

பூனையும் எலியும்!

முன் ஒரு காலத்தில் எலியும், பூனையும் மிக நெருங்கிய நண்பர்களாயிருந்தன. பூனையும் எலியும் சேர்ந்து கோடைக் காலத்தில் கொழுப்புக் கலந்த ஒரு குழம்பைத் தயார் செய்தன. மிகவும் ருசியாக இருந்த அதை ஒரு ஜாடியிலே ஊற்றி நன்றாக மூடின. உணவு தேட முடியாத மழைக் காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக அதைக் குடிக்கலாம் என்று நினைத்தன.

ஜாடியில் இருப்பதை யாராவது திருடிக் குடித்து விட்டால்...?

''சிறிது தூரத்தில்தானே இருக்கிறது மாதா கோவில்! அங்கே இசைக் கருவிகள் வைக்கும் அறைக்குள் ஜாடியை வைத்து விடலாம். மாதா கோவிலில் யாரும் திருடமாட்டார்கள். மழைக்காலம் வந்ததும் எடுத்து வந்து குடிக்கலாம்'' என்றது பூனை. 'சரி' என்றது எலி. இரண்டும் சேர்ந்து இரவிலே அந்த ஜாடியைக் கொண்டுபோய் மாதா கோவிலில் வைத்துவிட்டுத் திரும்பின.

இரண்டு நாட்கள் சென்றன. பூனை எலியிடம் வந்து, ''இன்று என் மாமா மகனுக்குப் பெயர் வைக்க வேண்டுமாம். என்னை அழைத்திருக்கிறார்கள். போய் வருகிறேன். சாயங்காலமே திரும்பி விடுவேன்'' என்று கூறிவிட்டுக் காலையில் புறப்பட்டது.

மாலையில் திரும்பி வந்ததும், ''பையனுக்கு என்ன பெயர் வைத்தீர்கள்?'' என்று கேட்டது எலி.

''கால்காலி என்று பெயர் வைத்தோம்.''

''அடடே, வேடிக்கையான பெயராக இருக்கிறதே!''

மேலும் இரண்டு நாட்கள் சென்றன. ''என் தம்பி பையனுக்குப் பெயர் வைக்க வேண்டுமாம். போய் வருகிறேன்'' என்று புறப்பட்டது பூனை

இரவு நேரத்தில் திரும்பி வந்தது. ''இந்தப் பையனுக்கு என்ன பெயர்?'' என்று கேட்டது எலி.

''அரைக்காலி'' என்றது பூனை.

மூன்றும் தடவையும் இப்படியே போய் வந்து, ''இந்தப் பிள்ளையாண்டனுக்கு 'முழுக்காலி' என்று பெயர் வைத்தோம்'' என்றது பூனை.

மழைக்காலம் வந்ததும், இரண்டும் மாதா கோவிலுக்குச் சென்றன. ஜாடி வைத்த அறைக்குள் நுழைந்தன. ஜாடி பத்திரமாகத்தான் இருந்தது. எலி மிகவும் ஆவலாக மூடியை விலக்கி உள்ளே பார்த்தது. திகிலுடன் ''என்ன! இதில் ஒரு சொட்டுக்கூட இல்லையே!'' என்றது.

''யார் குடித்திருப்பார்கள்?'' என்று கேட்டது பூனை.

எலி சிறிது நேரம் யோசனை செய்தது. ''உம்... கால்காலி, அரைக்காலி, முழுக்காலி ... புரிந்தது. எல்லாவற்றையும் காலி செய்தது நீதான்! நீயேதான்!' என்று குற்றம் சாட்டியது எலி.

'நாம் செய்த திருட்டைக் கண்டு பிடித்து விட்டதே இந்த எலி!' என்ற ஆத்திரத்தில், ''ஆம், நான்தான் குடித்தேன். என்னை உன்னால் என்ன செய்ய முடியும்? ஏதேனும் பேசினாயோ, உன்னைப் பிடித்துத் தின்று விடுவேன்'' என்று கூறி எலி மேல் பாயப் போனது பூனை.

எலி அப்புறமும் அங்கே நிற்குமா?



மூன்று பிள்ளைகள்

மிகவும் வயதான ஒருவர், தம்முடைய மூன்று மகன்களையும் அழைத்து, ''எனக்கோ வயதாகி விட்டது. உங்களுக்குக் கொடுப்பதற்கு இந்த மூன்றைத் தவிர வேறு எதுவும் இல்லை'' என்று கூறி மூத்த மகனிடம் ஒரு சேவலையும், இரண்டாவது மகனிடம் ஒரு கருக்கரிவாளையும், மூன்றாவது மகனிடம் ஒரு பூனையையும் கொடுத்தார். ''இவற்றை எடுத்துக் கொண்டு ஊர் ஊராய்ப் போய் ஏதேனும் சம்பாதிக்க முடியுமா என்று பாருங்கள்'' என்றார்.

மூத்த மகன் பல ஊர்களைச் சுற்றி விட்டுக் கடைசியாக ஒரு தீவுக்கு வந்தான். அங்கேயிருந்தவர்கள் சேவலை அதற்கு முன் பார்த்ததே இல்லை. ''சூரியன் வரப் போவதை இது முன்

கூட்டியே கூறி, எல்லோரையும் எழுப்பிவிடும்'' என்றான்.

''அடடே, அப்படியா! எங்களுக்கு எப்போது விடியும் என்று தெரியாததால், அர்த்த ராத்திரியிலே எழுந்து அவதிப்படுகிறோம்!'' என்றார்கள் அவர்கள்.

மறுநாள் அதிகாலையில் சேவல் கூவுவதைக் கேட்டு எல்லோரும் விழித்துக் கொண்டார்கள். சிறிது நேரத்தில் பொழுது விடிந்தது. ''இந்தச் சேவலை எங்களுக்கு விலைக்குக் கொடுக்கிறாயா?' என்று கேட்டார்கள் அத்தீவில் இருந்தவர்கள்.

''ஒரு கழுதை சுமக்கிற அளவுக்குத் தங்கம் தந்தால், கொடுப்பேன்'' என்றான் மூத்தமகன்.

அவன் கேட்டபடி தங்கம் கொடுத்து சேவலை வாங்கிக் கொண்டார்கள்.

இரண்டாவது மகன் ஒரு தீவுக்குச் சென்றான். அங்கே வயலிலே முற்றியிருந்த கதிர்களைக் கைகளாலே இழுத்துப் பறித்துக் கொண்டிருந்தார்கள், அத்தீவிலிருந்த மக்கள்.

''இதோ பாருங்கள். ஒரு நொடியில் அறுத்துத் தருகிறேன்'' என்று கூறி, கருக்கரிவாளால் கதிர்களை விரைவாக அறுத்து அறுத்துக் கொடுத்தான் இரண்டாவது மகன்...

அதற்கு முன்பு அவர்கள் கருக்கரிவாளைப் பார்த்ததே இல்லை! ''மிகவும் உபயோகமாக இருக்கிறதே! இதை விலைக்குத் தருகிறாயா? என்ன விலை?'' என்று கேட்டார்கள்.

''ஒரு குதிரை சுமக்கிற அளவுக்குத் தங்கம் தருவீர்களா?'' என்று கேட்டான் அவன்.

அவ்வாறே அவர்கள் தங்கம் கொடுத்து அரிவாளை வாங்கிக்கொண்டார்கள்.

மூன்றாவது மகன் ஒரு தீவுக்குத் தன் பூனையுடன் சென்றான். அங்கு எலிகளின் தொல்லை அதிகம். பகல், இரவு பாராமல் தொல்லை கொடுத்து வந்தன. அரசரிடம் மக்கள் முறையிட்டனர். அரசர் ஏதேதோ செய்து பார்த்தும், எலித் தொல்லையை ஒழிக்க முடியவில்லை. பூனையை அந்தத் தீவு மக்கள் பார்த்ததே இல்லை! எலிக்குப் பகை பூனை என்பதும் அவர்களுக்குத் தெரியாது.

இதை அறிந்த மூன்றாவது மகன் பூனையை எடுத்துக்கொண்டு அரண்மனைக்குச் சென்றான். அரசரைக் கண்டான். ''இத்தீவில் எலித் தொல்லை அதிகமென்று கேள்விப்பட்டேன். இதோ நான் கொண்டு வந்திருக்கும் பிராணி



எலிகளைத் தின்று இன்னல்களைப் போக்கும்'' என்றான்.

அரசர் அதைக் கேட்டு மகிழ்ந்தார். அவனுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தார். ஒரு வாரத்தில் அரண்மனையில் ஓர் எலிகூடத் தென்படவில்லை; எல்லாவற்றையும் பிடித்துத் தின்று ஏப்பம் விட்டு விட்டது பூனை.

''இனி, இந்தத் தீவிலிருக்கும் எலிகளையெல்லாம் ஒழிப்பதற்கு இந்தப் பிராணியின் உதவி தேவை. என்ன விலை கேட்டாலும் தருகிறோம். தயவு செய்து இதை எமக்குக் கொடுத்து விடு'' என்றார் அரசர்.

''ஒரு யானை சுமக்கிற அளவு தங்கம் வந்தால்...!''

முடிக்கக் கூட இல்லை! ''இதோ தரச் சொல்கிறேன்'' என்றார் அரசர்.

பூனையைக் கொடுத்து, யானை நிறையத் தங்கத்துடன் திரும்பினான் மூன்றாவது மகன்!

---

1. தை மாதம் வருவது ——கல்
2. வீடு கட்ட உதவுவது ——கல்
3. கொடியில் காய்ப்பது ——கல்
4. கார்த்திகையில் ஏற்றுவது ——கல்
5. சிலை செய்ய உதவுவது ——கல்
6 கணக்கிலே வருவது ——கல்
7. முருகன் குடிகொண்ட ஊர் ——கல்
8. கதிரவன் உலவுவது ——கல்
9. இடையூறு வருவது ——கல்
10. அடைக்கலம் நாடுவது ——கல்

—எஸ். பாலாஜி, சென்னை—4.

விடைகள்: 1. பொங்கல், 2. செங்கல், 3. பாகல், 4. அகல், 5. கருங்கல், 6 பெருக்கல், 7 சிக்கல், 8 பகல், 9. தடங்கல், 10. புகல்.



மாவட்ட வினா-விடை

கேள்வி கேட்பவர்: **கலாவதி குலசேகரன்**

பங்கு கொள்வோர்; **கே. சித்ரா, டி. கோகுலகிருஷ்ணன், சி. தேவானந்தன்**

கலாவதி: சென்ற மாதம் இராமநாதபுரம் மாவட்டத்தைப் பற்றிப் பல பயனுள்ள செய்திகளை வினா—விடை நிகழ்ச்சி மூலம் அறிந்து கொண்டோம். இப்போது நமது செங்கற்பட்டு மாவட்டத்தைப் பற்றி நீங்கள் எவ்வளவு தூரம் தெரிந்து வைத்திருக்கிறீர்கள் என்று பார்க்கலாமா முதல் வினா. செங்கற்பட்டு என்ற பெயர் எப்படி வந்தது?

கோகுலகிருஷ்ணன்: முன்பெல்லாம் இங்குள்ள குளம் குட்டைகளிலெல்லாம், செங்கழுநீர்ப் பூக்கள் நிறைய இருக்குமாம். அதனால் செங்கழுநீர்ப்பட்டு என்று பெயர் வைத்தார்களாம். அதுதான் இப்போது செங்கற்பட்டாகி விட்டதாம்.

கலா: சரி, இந்த மாவட்டத்தின் தலைநகராக இப்போது காஞ்சிபுரம் இருக்கிறது. முற்காலத்தில் இதைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்தவர்கள் யார் என்று தெரியுமா?

தேவானந்தன்: ஓ, தெரியுமே! பல்லவ மன்னர்கள்.

கலா: பல்லவர்கள் ஆண்ட காலத்தில் காஞ்சிபுரம் மிகவும் புகழ்பெற்று இருந்தது. ஆனால், பல்லவர்களுக்கு மட்டுமல்ல; சோழர்களுக்கும் விஜய நகர ராயர்களுக்கும் இது தலைநகராக இருந்தது... இந்த மாவட்டத்தைச் சேர்ந்த இருவர் தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். அவர்கள் பெயர்களைக் கூற முடியுமா?

சித்ரா: நான் கூறுகிறேன். திரு.பக்தவத்சலம், அறிஞர் அண்ணா.

கலா: சரி, முன்னாள் மத்திய அமைச்சராக இருந்தார் இந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர். இப்போது அவர் செங்கற்பட்டில் இருக்கிறார். யார் என்று சொல்லுங்கள், பார்ப்போம்.

கோகுல: திரு. ஓ. வி. அளகேசன்.

கலா: சரியான விடை. இந்த மாவட்டத்துக்கு ஒரு சிறப்புப் பெயர் உண்டு. அது என்ன?

தேவா: ஏரி மாவட்டம்.

கலா: ஏரி மாவட்டம் என்று ஏன் சொல்லுகிறார்கள்?

சித்ரா: செம்பரம்பாக்கம் ஏரி, செங்கற்பட்டு ஏரி, மதுராந்தகம் ஏரி என்று பெரிய ஏரிகள் இங்கே பல இருப்பதால்தான் அப்படிச் சொல்லுகிறார்கள்.

கலா: அவற்றுடன் உத்தரமேரூர், நாகலாபுரம், ஸ்ரீபெரும்புதூரிலுள்ள ஏரிகளும் குறிப்பிடத்தக்கவை. சென்னை நகர மக்களுக்கு இங்குள்ள எந்த ஏரிகளிலிருந்து குடி தண்ணீர் கிடைக்கிறது?

கோகுல: புழலேரி... இன்னொன்று சோழவரம் ஏரி.

கலா: ஆம். இந்த மாவட்டத்துக்கு உலகின் பல பாகங்களிலிருந்தும் பல விதமான பறவைகள் வருகின்றன. அவை எங்கே வருகின்றன என்று தெரியுமா?

தேவா: வேடந்தாங்கலில் உள்ள பறவைகள் சரணாலயத்துக்கு.

கலா: சரி, அந்த வேடந்தாங்கல் ஏரியில் உள்ள மரங்கள் பல ஆண்டுகள் நீரில் நின்றாலுங்கூட அழுகாமல் இருக்கின்றன. அந்த மரங்களின் பெயர் தெரியுமா?

சித்ரா: கடம்ப மரங்கள்.

கலா: சரியாகச் சொன்னாய். சர்வ தேச விமான நிலையம் ஒன்று நமது மாவட்டத்தில் உள்ளது. எங்கு என்று கூறுங்கள், பார்க்கலாம்.

தேவா: மீனம்பாக்கம்.

கலா: சரியான விடை. மீனம்பாக்கத்தில் பயணிகள் விமான நிலையமும், தாம்பரத்தில் விமானப் படையினரின் பயிற்சி நிலையமும் இருக்கின்றன. முருகனது அறுபடை வீடுகளில் ஒன்று நமது மாவட்டத்தில் உள்ளதே. அது எது என்று தெரியுமா?



சீ.தேவானந்தன்



கே.சித்ரா



டி.கோகுல கிருஷ்ணன்

கோகுல: திருத்தணி.

கலா: திருத்தணிகை என்பதுதான் சரியான பெயர். இந்தப் பெயர் எப்படி வந்தது, தெரியுமா?

மூவரும்: (மௌனம்)

கலா: முருகப்பெருமான் சூரபன்மன் என்னும் அரக்கனை வென்ற கதை உங்களுக்குத் தெரியும். பிறகு கோபம் தணிந்து வள்ளி தெய்வானையுடன் முருகன் இந்த மலையில் வீற்றிருந்தாராம். கோபம் தணிந்த இடமாதலால் தணிகை என்று பெயர் பெற்றது... இந்த ஊருக்கு இன்னும் ஒரு சிறப்பும் உண்டு. அது என்ன?

சித்ரா: நம்முடைய ஜனாதிபதியாக இருந்தாரே டாக்டர் இராதா கிருஷ்ணன், அவர் பிறந்தது இந்த ஊரில்தானே!

கலா: ஆம். சரியாகச் சொன்னாய். அனல் மின்சக்தி, அணுமின் சக்தி இரண்டும் இம்மாவட்டத்திலிருந்து எடுக்கப் படுகின்றன. எங்கெங்கே என்று கூற முடியுமா?

தேவா: கல்பாக்கத்தில் அணுமின் சக்தியும் எண்ணூரில் அனல் மின் சக்தியும் எடுக்கப்படுகின்றன.

கலா: ஆம். தொழுநோய் மருத்துவமனை காச நோய் மருத்துவமனை இரண்டும் எங்கே உள்ளன?

சித்ரா: திருமணியில் தொழுநோய் மருத்துவமனை, தாம்பரத்தில் காச நோய் மருத்துவமனை.

கலா: சரியாகச் சொன்னாய். கல்பாக்கம் அணுமின் நிலைய இயக்குநர் டாக்டர் ராவ் அவர்களுக்கும், தொழுநோய் மருத்துவமனை டாக்டர் ஹரிசீனிவாசன் அவர்களுக்கும் மத்திய அரசு இந்த ஆண்டு பத்மஸ்ரீ விருது வழங்கியது நமக்கெல்லாம் பெருமை. கல்வித் துறையில் பல சாதனைகளைச் செய்து பல ஆண்டுகளுக்கு முன்பே பத்மஸ்ரீ விருது பெற்றாரே நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் அவர் பிறந்ததும் இந்த மாவட்டத்தில்தான். எந்த ஊரில் என்று தெரியுமா?

கோகுல: நெய்யாடுபாக்கம்.

கலா: சரியான விடை. பொன் விளைந்த களத்தூரில் வெண்பாப் புலவர் ஒருவர் பிறந்தார். அவர் பெயர் தெரியுமா?

கோகுல: புகழேந்தி!

கலா: அடடே, சரியாகச் சொல்லிவிட்டாயே! 'நளவெண்பா'வை இயற்றியவர் புகழேந்திப் புலவர்தான். சமீபத்தில் இவ்வூரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு, தமிழக அரசு அவர் பெயரைச் சூட்டியிருக்கிறது. இந்த ஊரில் வேறு இரு புலவர்களும் பிறந்திருக்கிறார்கள். ஒருவர்: தொண்டை மண்டல சதகம் பாடிய படிக்காசுப் புலவர். மற்றொருவர்: கண் பார்வையில்லாது போனாலும் சுவையான பாடல்களைப் பாடிய அந்தகக் கவி வீரராகவ முதலியார்... பெரிய புராணத்தை இயற்றியவர் யார்?

சித்ரா: சேக்கிழார்.

கோகலேயும் கணக்கும்!



கோபால கிருஷ்ண கோகலே மாணவராயிருந்த போது, பள்ளி ஆசிரியர் ஒரு கணக்கைக் கொடுத்து, ''பிள்ளைகளே, நாளை வரும்போது இந்தக் கணக்கைப் போட்டுக்கொண்டு வர வேண்டும். சரியாகப் போட்டுக் கொண்டு வராதவர்களைத் தண்டிப்பேன்'' என்று எச்சரித்திருந்தார்.

மறுநாள் மாணவர்கள் அனைவரும் கணக்கைப் போட்டுக்கொண்டு வந்தார்கள். ஆனால், அவர்களிலே கோகலேயைத் தவிர எல்லோருமே தவறாகப் போட்டிருந்தார்கள்.

உடனே ஆசிரியர் அவர்களைப் பார்த்து, ''நீங்கள் எல்லோருமே சுத்த மண்டுகள். கோகலே ஒருவன் தான் இந்த வகுப்பிலே கெட்டிக்காரன்'' என்று கூறினார்.

இதைக் கேட்டதும், கோகலே ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தாரா? இல்லை. அவரது முகத்தில் ஆனந்தத்தின் அறிகுறியாவது தெரிந்ததா? அதுவும் இல்லை. அப்படியானால், அவர் என்னதான் செய்தார்? அழ ஆரம்பித்து விட்டார்! தேம்பித் தேம்பி அழுதார்! கண்களிலே கண்ணீர் மளமளவென்று பொங்கி வழிந்தது.

இதைக் கண்ட ஆசிரியருக்கு ஒன்றும் புரியவில்லை. ''கோகலே, ஏனப்பா கண்ணீர் விடுகிறாய்?'' என்று திகிலுடன் கேட்டார்.

''என்னை நீங்கள் கெட்டிக்காரன் என்கிறீர்கள். ஆனால், இந்தக் கணக்கை நானாகப் போடவில்லை; எனக்குத் தெரிந்த ஒருவனுடன் சேர்ந்துதான் போட்டேன்'' என்று கூறி மேலும் அழுதார்.

அவர் உண்மை பேசியதைக் கேட்டு ஆசிரியர் வியந்தார். மற்ற மாணவர்களும் வியந்தார்கள்.

கலா: அவர் பிறந்ததும் இந்த மாவட்டத்தில்தான்! எந்த ஊர் என்று தெரியுமா?

தேவா: குன்றத்தூர்.

கலா: ஆம், குன்றத்தூரில் பிறந்து இரண்டாம் குலோத்துங்க சோழனின் அமைச்சராக இருந்தவர் சேக்கிழார். திருக்கழுக்குன்றம் போயிருப்பீர்கள். திருக்கழுக்குன்றம் என்று பெயர் வரக் காரணம் என்ன?

கோகுல: இரண்டு கழுகுகள் தினமும் பகலிலே அந்த மலைக் கோயிலுக்கு வந்துகுருக்கள்தரும்சர்க்கரைப்பொங்கலையும், நெய்யையும் உண்டு செல்கின்றன. அதனால் அப்பெயர் வந்தது.

கலா: இப்படி இன்றல்ல; நேற்றல்ல; பல ஆண்டுகளாகக் கழுகுகள் வந்து உணவு சாப்பிடுகின்றனவாம்! திருவிளையாடல் புராணத்தில்கூட இதுபற்றிக் கூறப்பட்டிருக்கிறது... ஆமாம், நமது மாவட்டத்திலுள்ள புகழ்பெற்ற மகாபலி புரத்திற்குப் பல நாட்டினரும் வந்து பார்க்கிறார்களே, அப்படி என்ன அதிசயம் அங்கு இருக்கிறது?

தேவா: அங்கே ஏராளமான சிற்பங்கள் இருக்கின்றன. ஒரே கல்லில் குடையப்பெற்ற ஏழுகோயில்கள், யானை, அர்ச்சுனன் தவம், பேன் பார்க்கும் குரங்கு இப்படிப் பல.

கலா: மிகவும் சரி. ஒரே கல்லில் குடையப் பெற்ற அந்த ஏழுகோயில்களையும் கண்ட ஆங்கிலேயர் அந்த ஊருக்கு 'ஏழு கோயில்கள்' (Seven Pagodas) என்று பெயர் வைத்து விட்டார்கள்! இன்னும் அந்த ஊரில் கலங்கரை விளக்கம் இருக்கிறது. சிற்பக் கல்லூரியும் இருக்கிறது... நமது மாவட்டம் சென்னை நகருக்கு அருகில் இருப்பதால், முக்கியமான தொழிற்சாலைகள் பல இருக்கின்றன. அவற்றில் சில வற்றைக் கூற முடியுமா?

சித்ரா: ஆவடி டாங்கித் தொழிற்சாலை, மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, குரோம்பேட்டை தோல் பதனிடும் தொழிற்சாலை, படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலை..

கோகுல: ...எண்ணூரிலுள்ள அசோக் லேலண்டு தொழிற்சாலை, திருவொற்றியூர் என்பீல்டு மோட்டார் சைக்கிள் தொழிற்சாலை...

தேவா: வண்டலூரில்கூட ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை இருக்கிறது.

கலா: இன்னும் திருவொற்றியூரிலுள்ள கார்பொராண்டாம் யூனிவர்சல், என்னூர் சூப்பர் பாஸ்பேட் தொழிற்சாலை, டிராக்டர் தொழிற்சாலை, புழலேரி பைலட் பவுண்டன்பென் கம்பெனி, அம்பத்தூர் டன்லப் டயர் பாக்டரி... இப்படி இன்னும் எத்தனை எத்தனையோ!... சரி, காஞ்சிபுரம் என்றதும் உங்கள் நினைவுக்கு வருவது எது?

தேவா: அங்கேயிருக்கும் நூற்றுக்கு மேலான கோயில்கள்.

சித்ரா: அங்கே தயாராகும் பட்டுச் சேலைகள்.


கோகுல: சங்கரர் ஏற்படுத்திய 'காஞ்சி காமகோடி பீடம்'

கலா: இன்னொன்றை மறந்து விட்டீர்களே?


கோகுல: என்ன அது?

கலா: அதுதான் காஞ்சிபுரம் இட்லி!

மூவரும்: (சிரிக்கிறார்கள்.)



தாகூரும் பல்லக்கும்



ரவீந்திரநாத தாகூர், அவருடைய பெற்றோருக்குப் பதினான்காவது குழந்தையாகப் பிறந்தார். கடைசிக் குழந்தையும் அவரே.

தாகூர் சிறுவராயிருந்த போது, அவர் வீட்டுத் தாழ்வாரத்தில் ஒரு பல்லக்கு இருந்தது. அது பாட்டி காலத்துப் பல்லக்கு! தாகூர் ஓடிப் போய் அந்தப் பல்லக்கில் அடிக்கடி உட்கார்ந்து கொள்வார்.

நகராத அந்தப் பல்லக்கில் அவர் உட்கார்ந்ததும், அது நகர ஆரம்பித்துவிடும்! 'விர்'ரென்று வானத்தில் பறக்கும்; திடீரென்று ஒரு தீவில் போய் இறங்கும்; அங்கிருந்து ஒரு அழகான ஊருக்குள்ளே புகுந்துவிடும்; போகும் வழியிலெல்லாம் அவர் பல வீரதீரச் செயல்களைச் செய்து கொண்டே போவார் — இப்படியெல்லாம் நடப்பதாக அவர் கற்பனை செய்து கொள்வார்!

நாள் ஆக ஆக அவருடைய கற்பனை வளர்ந்தது. அந்தக் கற்பனை அருமையான கவிதைகளையும், கதைகளையும் எழுத அவருக்கு உதவியது.

தாகூருக்கு எட்டு வயதாக இருந்த போது, பாட்டு எழுத வேண்டுமென்ற ஆசை பிறந்தது. அவ்வப்போது சில பாடல்களை எழுதி வந்தார். ஆயினும், அவர் பாட்டு எழுதுவார் என்பது அவருடைய பதினோராவது வயதில்தான் பலருக்கும் தெரிந்தது!


மாலியும் ஜூலியும் 2
என்னடா மாலி, இந்த ஜூலி தபால்காரர் கிட்டேயிருந்து கவரை வாங்கி வந்தி ருக்கு. நான் கேட்டால் தரமாட்டேங்குது!
1
நீ கேட்டால் கொடுக்காதம்மா! இதோ நான் கேட்கிறேன், பார். உடனே கொடுத்து விடும்!
2
ஏய், ஜூலி, அந்தக் கவரைக் கொடு... என்ன பேசாமல் இருக்கிறாய்?
3
அப்பாவுக்கு ஜூலியைக் கண்டாலே பிடிக்காதே! அவரிடத்திலே கொடுக்குதே!
4
என்னடா மாலி, உங்கப்பா கவரைப் பிரித்துப் பார்த்ததும் ஒரே கோபமாயிருக்கிறாரே!
5
அடச்சே! அது என் ப்ராக்ரஸ் ரிப்போர்ட்டம்மா! பார்த்ததும் எழுந்து என்கிட்டே வருகிறாரே!
6



ஜூடோ கலை

குண்டுமணி

ஜூடோ கலை 1870-ம் வருஷம் ஜூஜூட்சுவிலிருந்து ஆயுதமில்லாமல் சண்டையிட ஜப்பானியர் கற்றுத் தந்த கலையாகும். இந்த அரிய கலையைத் தோற்றுவிக்கக் காரணமானவர் டாக்டர் ஜூகு ரோகானே. இவர்தான் முதன் முதலில் கோமோகான் என்னும் பயிற்சிக் கூடத்தை 1882-ம் வருஷம் சிடியாவில் தொடங்கியவர். ஜூடோ மனத்துக்கும் உடலுக்கும் போஷாக்குத் தரும் கலை. இந்தச் சண்டைக் கலையில் முக்கியமாக எதிராளியை நிலையிழக்கச் செய்து அவனைக் கீழே வீழ்த்துவதாகும்.

ஜப்பானில் ஜூடோ 1880-ம் வருஷம் மிகப் பிராபல்யமாயிற்று. ஜப்பானியக் கல்வி இலாகா மந்திராலயம் ஒரு விளையாட்டு என்று ஜூடோவை அங்கீகரித்தது. ஜப்பானியப் போலீஸார் இந்தச் சண்டைக் கலையை ஆர்வமுடன் கற்றுக்கொண்டனர். 1885-ம் வருஷம் கானே பிரிட்டனுக்குச் சென்று இந்த ஜூடோ கலையைப் பரப்பப் பாடுபட்டார். அவரது சிஷ்யர் யமசிடா அமெரிக்காவில் பரப்பினார். பாரீஸ் போலீஸார் 1905-ம் வருஷம் ஜூடோக் கலையைப் பயிலத் தொடங்கினர்.

முதல் ஜூடோ சர்வதேசப் பந்தயம் புடோக்வாய்க்கும் ஜெர்மனி தேசியக் குழுவுக்கும் நடைபெற்றது. 1949-ம் வருஷம் பிரிட்டிஷ் ஜூடோக் கழகமும், ஐரோப்பிய ஜூடோ யூனியனும் தோன்றின. ஆனால் 1951-ம் வருஷம்தான் சர்வதேச ஜூடோ பெடரேஷன் உருவாகி அதன் தலைமையகம் லண்டனில் அமைந்தது.

லண்டனில் ராயல் ஆல்பர்ட் ஹாலில் நடைபெற்ற ஐரோப்பிய சாம்பியன் போட்டிகளில் பிரிட்டனும் ஹாலந்தும் முன்னணி சாம்பியன்களாகத் துலங்கின.


இரண்டாவது உலகப் போருக்குப் பின் ஜப்பானில் ஜூடோ தேசிய விளையாட்டாகப் பரிணமித்தது. 1964-ம் வருஷம் ஜூடோ ஒலிம்பிக் போட்டிகளில் இடம் பெறத் தொடங்கியது. ஜப்பானியர்களே ஒலிம்பிக் போட்டிகளில் இணையற்று விளங்கினார்கள்.

1972-ம் வருஷம் நடைபெற்ற மூனிக் ஒலிம்பிக்கில் மூன்றே பந்தயங்களில் ஜப்பானியர் வென்றபோது, ஜப்பானில் பயிற்சியாளர்கள் • நீக்கப்பட்டு, புதிய பயிற்சியாளர் ஜூஸரோ இக்காரேவிடம் தரப்பட்டது. இதன் விளைவாக 1973-ம் வருஷம் நடைபெற்ற உலக சாம்பியன் போட்டிகளில் ஜப்பானுக்கே வெற்றி.

ஜூடோ போட்டிகள் 9 மீட்டர் (30 அடி) சதுரமுள்ள பாய்களில் நடக்கும். பாயைச் சுற்றி 1 மீட்டர் பாதுகாப்புப் பிரதேசம் இருக்கும். ஜூடோ போட்டிகளை ஒரு ரிபரி மைதானத்துக்குள் நின்று நிர்வகிப்பார். அவருக்கு உறுதுணையாக இரு நீதிபதிகள் இருப்பார்கள்.

பாய்க்கு வெளியே ஜூடோ சண்டையாளர்கள் வந்து விட்டால், நடுவர் அவர்களை இழுத்துப் பாய்க்குக் கொணர்ந்து மறுபடி சண்டையைத் தொடரச் சொல்லுவார்.

ஜூடோ பயிற்சியாளர், ஜூடோகி என்னும் தொளதொளவென்று உள்ள வெள்ளை அங்கியை அணிவர். ஜாக்கெட்டை பெல்ட்டால் இறுகக் கட்டியிருப்பார். பெல்ட்டின் நிறம் அந்த



ஜூடோ போட்டியாளரின் திறமை யைத் துலக்கும்.

ஜூடோ பயிற்சியாளர் க்யூ(மாண வர்) டான் (டிக்ரி) என்று பிரிக்கப் படுவர். கற்றுக் கொள்ளும் பயிற்சி யாளர் வெள்ளை பெல்ட் அணிவார்.

போட்டி தொடங்குவதற்கு முன் ஜூடோ போட்டியாளர்கள் 4 மீட்டர் தூரத்தில் எதிரும் புதிருமாக நிற் பார்கள். அப்படியே முதலில் தலை வணங்கி விட்டுப் போட்டியைத் தொடங்குவார்கள். முடிக்கும் போதும் தலைவணங்கி விட்டுத்தான் பிரி வார்கள்.

ஒரு போட்டி 3 நிமிஷத்திலிருந்து 20 நிமிடம் வரை நடக்கும்.

'மாட்டி' என்று குறிப்பிட்டால் போட்டி சிறிது காலம் நிறுத்தி வைக்கப்படும். இத்தகைய நிறுத்தம், போட்டியாளர்கள் பாயை விட்டு வெளி வந்து விட்டாலோ, பௌல் செய்யப்பட்டாலோ, காயப்பட்டாலோ நிகழும்.

ஒரு போட்டியில் நிச்சயமான வெற்றி கிட்டி விட்டால் நீதிபதிகள் தங்களிடமுள்ள 'முடிவை' அறிவிப் பார்கள். ரிபரிக்குத்தான் முடிவான வோட்டுத் தர உரிமை உண்டு. போட்டியாளர் மொத்த பாயிண்ட் களாகட். பத்தை அடையப் பாடுபடு வார்கள்.

இந்தப் பாயிண்ட் கிடைப்பது அளவற்ற சக்தியுடன் ஒரு Throw நிகழ்ந்தால்; எதிரியைப் பாயிலிருந்து தோள் உயரத்துக்குத் தூக்கினால்; ஏதாவது பிடியில் எதிராளியை மடக்கி விட்டால், கொடுப்பார்கள்.

ரிப்ரிக்கு நான்கு பெனல்டிகள் தரும் உரிமை உண்டு. அந்த நான்கு பெனல்டிகள் ஷூடோ, சூயி, கையி கோகு, ஹான்ஸோகோ என்று வகைப் படும். கையி கோகு, ஹான்ஸோகோ தண்டனைகளுக்கு ரிபரி தம் இரு நீதிபதிகளையும் ஆலோசித்துப் பெரும் பான்மை பலத்தில் தீர்ப்பு வழங்கு வார். இந்த பெனல்டிகள் போட்டி யாளரின் வெற்றி வாய்ப்புக்களைப் பாதிக்கும்.

ஜூடோ தற்காப்புக் கலை. பொழுது போக்கு மட்டுமல்ல; உயிர்காக்கும் தோழனுகத் துணை புரியும். ஆசிய விளை யாட்டுப் போட்டிகளில் பெரும்பான்மை ரசிகர்களை ஈர்த்த போட்டி ஜூடோ வாகும்.

அடுத்த இதழில்:

பிருந்தாவனக் கவியரங்கமும் உண்டு
பிருந்தாவனக் கதையரங்கமும் உண்டு!

பிருந்தாவனம்



சொத்து மொத்தம்!

ஒருவர் தமது சொத்தில் அரைப் பங்கை மனைவிக்கும், மீதமுள்ளதில் 4/5 பாகத்தை மகனுக்கும், மீதம் உள்ளதில் 2/3 பாகத்தை மகளுக்கும், மீதம் உள்ளதைக் கோயிலுக்கும் எழுதி வைத்தார். கோயிலுக்கு எழுதி வைத்தது ரூ.1000/. அப்படியானால், அவருடைய மொத்தச் சொத்து எவ்வளவு?

விடை: ரூ. 30,000/-

—சி. கோபாலகிருஷ்ணன் (5055), சென்னை—88.

கையும், காலும்

''உள்ளூர் நண்பர்களுக்குக் கடிதங்கள் 'எழுதி எழுதி என் கால்கள் வலித்து விட்டன'' என்றாராம் ஒருவர்.

''கடிதங்கள் எழுதினால் கைதானே வலிக்கும்? கால்கள் ஏன் வலிக்கின்றன?'' என்று கேட்டார் அவருடைய நண்பர்.

''நான் நேரில் போய் அந்தக் கடிதங்களைப் படித்துச் சொல்ல வேண்டியிருக்கிறதே!'' என்றாராம், கையெழுத்துப் புரியாதபடி கடிதம் எழுதும் அந்த மனிதர்!

—பேபி காயத்ரி நடராஜன், திருப்பூர்—1





எண்களில் தெய்வம்

ஓர் எழுத்து மந்திரத்தை
ஓம் என்று சொல்லுவோம்.
ஈரெழுத்து மந்திரத்தை
ராமா என்று சொல்லுவோம்.
மூன்றெழுத்து மந்திரத்தை
முருகா என்று சொல்லுவோம்.
நான்கெழுத்து மந்திரத்தை
நாராயணா என்று சொல்லுவோம்.
ஐந்தெழுத்து மந்திரத்தை
நமசிவாய என்று சொல்லுவோம்
ஆறெழுத்து மந்திரத்தை
சரவணபவ என்று சொல்லுவோம்.
ஏழெழுத்து மந்திரத்தை
ஸ்ரீராம் ஜெயராம் என்று
சொல்லுவோம்.
எட்டெழுத்து மந்திரத்தை
குருவாயூரப்பன் என்றுசொல்லுவோம்

—எஸ். மதுசூதனன் (4892)சிதம்பரம்

வழிகாட்டிகள்

நேரு மாமா வந்தாரு;
நேர்மையை எடுத்துச் சொன்னாரு.

காந்தித் தாத்தா வந்தாரு;
கடமையை உணர்த்திச் சென்றாரு.

பாரதி யாரும் வந்தாரு;
பாரதம் உயிர்மூச்சு என்றாரு.

கவிமணித் தாத்தா வந்தாரு;
கனிவுடன் பேசச் சொன்னாரு.

வாழப் பிறந்தோம் நாமெல்லாம்.
வழி காட்டினரே அவரெல்லாம்.

—பி. காயத்ரி தேவி (4171), கவுந்தப் பாடி.





காய் வகை

1. விபத்தில் சிக்கிய காய் எது?
2. கிழமையுள்ள காய் எது?
3. வெட்டும் காய் எது?
4. கோழியுடன் தொடர்புடைய காய் எது?
5. தெய்வம் உள்ள காய் எது?
6. பெரிய துளையுடைய கனி எது?

விடை: 1. வெங்'காயம்', 2. பூ'சனி', 3. 'கத்தரி'க்காய், 4. 'முட்டை'க் கோஸ், 5. தக்'காளி', 6. 'மா'துளை.

—க. செந்தில்குமார் (2123), சென்னை-48

எதை ஓட்டத் தெரியும்?

''எனக்கு கார், பஸ், லாரி எல்லாம் ஓட்டத் தெரியும். உனக்கு எதை ஓட்டத் தெரியும்?''

''எனக்கு ஈ ஓட்டத் தெரியும்.''

—இரா. கார்த்திக் (1199) ஈரோடு-1

புதுமொழிகள்!

✻ ஆயிரம் பொய் சொல்லி
அட்மிஷன் வாங்குவதா?

✻ முற்பகலில் நன்கொடை;
பிற்பகலில் அட்மிஷன்!

✻ ஐந்து அட்மிஷன் வாங்கினால்
அரசனும் ஆண்டி ஆவான்!

—ஆர். பிரசன்னா, (3221), கரூர்.



கேள்விகள் 2: பதில் 1

1. தூறல் நின்னு போவதேன்?
துணியில் அழுக்கு போவதேன்?

2. பந்து மேலே செல்வதேன்?
பள்ளியில் மாணவன் அழுவதேன்?

3. பருமனாய் உடம்பு ஆவதேன்?
பலூன்கள் உடைந்து போவதேன்?

விடை: 1. வெளுப்பதால்.
2. உதைபட்டதால்.
3. ஊதுவதால்.

—க. பரணி (19), சென்னை—20.

க	ரு	ஆ	சி
ன்	ர	வே	ங்
மா	ங்	டி	க
கை	ரு	மா	ம்

6 மிருகங்கள்

இக்கட்டங்களில் உள்ள 6 மிருகங்களைக் கண்டு பிடி.

விடை: சிங்கம், ஆடு, மாடு மான், வேங்கை, கரடி

—ஆர். விஜயராகவன் (3211), புதுக்கோட்டை



பிய்ந்த கூரை

''ஏண்டா மணி, உங்க வீட்டுக்கூரை எப்பப் பார்த்தாலும் பிய்ந்தே கிடக்குதே ஏன்?

''கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்குமாம். அதனாலே, தெய்வத்துக்கு என்ன சிரமம் கொடுப்பானேன்னு நாங்களே பிய்த்து வைத்திருக்கோம்.''

-எஸ். கிருஷ்ணமூர்த்தி (2918), வேலூர்

எத்தனை பிரயாணிகள்?

திருச்சி ஜங்ஷனிலிருந்து மெயின் கார்ட் கேட் செல்லும் பேருந்தில் இருந்த பிரயாணிகளில் கால் பாகம் தென்னூரில் இறங்கிக் கொண்டனர். அங்கு 9 பேர் ஏறிக் கொண்டனர். பேருந்து தில்லை நகரில் நின்றபோது அதில் அப்போது இருந்த பிரயாணிகளில் மூன்றில் ஒரு பாகம் இறங்கிக் கொண்டனர். அங்கேயே 16 பேர் ஏறிக் கொண்டனர். இன்னும் 6 பேர் ஏறியிருந்தால், திருச்சி ஜங்ஷனிலிருந்து புறப்பட்ட போது இருந்த பிரயாணிகளின் எண்ணிக்கைக்குச் சமமாயிருந்திருக்கும். அப்படியானால், பேருந்து புறப்படும் போது, இருந்தவர்கள் எத்தனை பேர்?

விடை: 56 பிரயாணிகள்.

—ஆர். நாச்சியப்பன் (75) தென்னூர்



கவிதை பிறந்தது!

விடிய விடிய விழித்திருந்தும்
விழுங்காமல் உணவினை வைத்திருந்தும்
வைக்காமல் பேனாவைப் பிடித்திருந்தும்
வராமல் கவிதை இருந்திடவே
கவலை நெஞ்சை அழுத்திடவே
கடவுளை வேண்டி வணங்கிடவே
கணீரெனப் பிறந்தது கவிதையே!

—கி. அய்யம்பெருமாள் (4203) ஓசூர்—1

மூவர் வணக்கம்

கலைமகள் உன்னை வணங்குகிறோம்.
கல்விக் கண்கள் தந்தருள்வாய்.
அலைமகள் உன்னைப் போற்றுகிறோம்.
அனைத்துச் செல்வமும் சேர்த்தருள்வாய்.
மலைமகள் உன்னை வழுத்துகிறோம்.
மனத்தில் வலிமை கூட்டிடுவாய்.
தலைசிறந்தெங்கும் விளங்கிடவே.
தயவுடன் திருவருள் புரிந்திடுவீர்.

— த. பெ. சுந்தரவேல் முருகன் ஈரோடு-2 (173



எங்கே போனார்கள்?

''மாமி, பாமாவும் கிருஷ்ணுவும் எங்கே போயிருக்காங்க?''

''பாமாவும் கிருஷ்ணுவும் பாமாயிலும் கிருஷ்ணுயிலும் வாங்கப் போயிருக்காங்க.''

—ஆர்.பாக்கியலட்சுமி(3234), ஆத்தூர்



அயல் நாட்டுப் பழமொழிகள்

அதிர்ஷ்டம் உள்ளவன் வீட்டில் சேவல் கூட முட்டையிடும்.

—கிரீஸ்.

விற்பவனுக்கு இரு கண்கள் போதும்; வாங்குபவனுக்கு நூறு கண்கள் வேண்டும்.

—டச்சு.

நல்லது போனால் தெரியும்; கெட்டது வந்தால் தெரியும்.

—இத்தாலி.

பணம் பேச ஆரம்பிக்கும் போது நியாயம் மௌனமாகி விடுகிறது.

—ரஷ்யா.

ஆரோக்கியம் ஒரு கிரீடம்;
அது நோயாளிக்குத்தான் தெரியும்.

-எகிப்து

எம்.எஸ்.கோமதி (37) குமாரபுரம்.



அறுவை ஜோக்குகள்:

1. அர்ஜுனனுக்குப் பிடித்தமான பாட்டு எது?
2. இராவணனுக்குத் தெரியாத ராகம் எது?

[illegible]
[illegible]

—எம். பரமேஸ்வரன் (1961), சென்னை—28.

பழக்க வழக்கம்

என் நண்பன் என்னைப் பார்த்துக் கேட்டான்: ''பழக்க வழக்கத்தை மாற்ற முடியுமா?''

நான் உடனே ''முடியும்!'' என்று உறுதியாகச் சொன்னேன்.

''முடியாது'' என்று என் நண்பன் அடித்துக் கூறினான்.

''ஏன் முடியாது? காரணம் என்ன?'' என்று கேட்டேன்.

''வழக்க பழக்கம் என்று வேகமாகச் சொல்லிப் பார்'' என்றான்.

'வழக்க... பழக்கம்' — சொல்லிப் பார்த்தேன். சரியாகச் சொல்ல வரவில்லை.

''பார்த்தாயா மாற்ற முடியவில்லை'' என்றான் நண்பன்.

-மு.கா.நெடுமாறன் (660) காவேரிப்பட்டணம்.



விஞ்ஞான விளையாட்டு

ஆர்.பி.சாரதி

இங்கிலாந்தில் உலகக் கோப்பைக்கான கிரிக்கெட் பந்தயம் நடந்ததே, நினைவிருக்கிறதா? அந்தச் சமயம் எங்கள் உறவினர் வீட்டில் ஒரு திருமணம்... மணமகனின் நெருங்கிய நண்பன் சரியான கிரிக்கெட் பைத்தியம்! கிரிக்கெட் காமெண்ட்ரியும் கேட்க வேண்டும்... மணமகன் தோழனாகவும் பக்கத்திலே இருக்கவேண்டும். இருந்தான், கையில் டிரான்ஸிஸ்டரோடு... காதில் படத்தில் காட்டிய படி மைக்ரபோனுடன்! டிரான்ஸிஸ்டரின் மிக மெல்லிய ஒலி அடுத்தவர்க்குத் தொல்லை தராமல் அவன் காதுகளில் மட்டும் தெளிவாக, சற்று உரக்கக் கேட்டது. நானும் அதைச் சோதித்துப் பார்த்தேன்.

அதை நாமே செய்யலாம்... வேறொரு அமைப்பில்!


எப்படிச் செய்வது?

பயன்படுத்தி விட்டு எறிந்துவிட்ட இரண்டு பழைய மின்செல்களில் உள்ள கார்பன் உருளைகளை மட்டும் பிளந்து எடுத்துக் கொள்ள வேண்டும். சாதாரண இனிப்பு அட்டைப் பெட்டி அளவில் ஓர் அட்டைப் பெட்டி மூடியை எடுத்துக்கொண்டு மேற்பரப்பில் நடுவில் 5 செ. மீ. இடைவெளியில் இரு ஓட்டைகள் இட்டுக் கொள்வோம். பழைய செல் கார்பன் உருளைகள் அந்த ஓட்டைகள் வழியாகச் செல்லும் அளவில் அமைய வேண்டும். 10. செ. மீ. மின் கம்பித் துண்டு இரண்டு

20 செ. மீ. மின் கம்பித் துண்டு ஒன்று...

இத்துண்டுகளின் முனைகளில் சிறு வளையமாக மின் கம்பியை வளைத்துக் கொண்ட பிறகு, கம்பியை அட்டைகளின் ஓட்டைகள் வழியே, கீழிருந்து மேற்புறமாகக் கொண்டுவந்து, ஒவ்வொன்றையும் ஒரு கார்பன் உருளையில் (காயில் போலச்) சுற்ற வேண்டும். கம்பி சுற்றிய கார்பன் உருளைகள் ஒரு முனை ஓட்டை வழியே வளையங்களுடன் அடிப்புறமும், மறுமுனை மேற்புறமாகவும் அமையும். இரண்டு பென்சில்களிலிருந்து பிளந்து எடுக்கப்

மைக்ரபோன்



தெரிகிறதா இந்தியா? — அழகி



இந்தியர் ஒருவர் விண்வெளி வீரர்,
எத்தனை பெருமை யடா!
இந்நில உலகே வியந்து மலைக்கும்
மெத்தவும் மகிழ்ச்சி யடா!

இந்திரா காந்தி டில்லிமா நகரில்
இருந்தே ஃபோன் செய்ய,
விண்ணிலே சல்யூட், ஆய்வுசெய் கலத்தில்
ராகேஷ் ஃபோன் எடுக்க,

வாழ்த்துமே கூறி, ''ராகேஷ், உமக்கு
இந்தியா தெரிகிற தா?
பார்த்துமே கூறும் எப்படி என்றே!''
என்றார் பிரதம ரும்.

''தெரிந்தது தாயே, எத்தனை அழகு
இந்தியா இங்கிருந் தே!
சிறந்தது என்றன் தாய்த்திரு நாடே!''
என்றார் நம்ராகே ஷ்!

இந்தியத் தம்பி தங்கை மலர்களே!
இந்தியா தெரிகிற தா?
'விண்வரை அறிவு, மண்ணெலாம் அமைதி!'
இந்தியர் கொள்கை இதே!

பட்ட நல்ல கிராபைட்களை, அட்டைப் பெட்டி மீது இரண்டு கார்பன் உருளைகளையும் தொடுமாறு வைக்க வேண்டும்.

அட்டைப்பெட்டியின் அடியே உள்ள 10. செ. மீ. மின் கம்பி வளையத்திலிருந்து இணைக்கப்பட்ட இன்னொரு 10 செ. மீ. மின்கம்பி உயிருள்ள மின் சார செல் ஒன்றில் — முனையுடன் இணைய வேண்டும். இன்னொரு 10 செ. மீ. மின்கம்பி செல்லின் + முனையிலிருந்து சென்று கடையில் வாங்கிய இயர்போனின் ஒரு ஜாக்குடன் படத்தில் காட்டியபடி இணைய வேண்டும்.

இன்னும் இணைய வேண்டிய பகுதிகள் இயர் போனின் இன்னொரு ஜாக்கும், அட்டைப் பெட்டி அடியில் நாம் தொங்க விட்டிருக்கும் கார்பன் உருளையில் சுற்றி வரும் மின்கம்பி வளையும்தானே? அதை 20 செ. மீ. மின் கம்பியால் இணைத்து விடுவோமா?

இணைப்புக்கள் எல்லாம் முடிந்து விட்டனவா?

ஆம்!

இயர்போனைக் காதில் மாட்டிக் கொள்ளுங்கள்.

அட்டைப் பெட்டி கிராபைட் அருகே ஒரு ஓடும் கடியாரத்தைக் கொண்டு செல்லுங்கள்

டிக்... டிக்... டிக்...

எவ்வளவு தெளிவாகக் கேட்கிறது!

அப்படியேதான்... மிக மெல்லிய குரலில் பாட ஆன் செய்த டிரான்ஸிஸ்டரை எடுத்து கிராபைட் அருகில் கொண்டு போங்கள்!

டெலிபோனில் யாரோ காதுக் கருகில் பாடுவது போலிருக்கிறதா?

அவ்வளவுதான் மைக்ரோபோன்!

படித்து முடித்த பிறகு செய்து பார்க்கத் தேவை எவை என்று முழுவதும் மீண்டும் படிக்க வேண்டாம்...

இதோ பட்டியல்... விலை கடையில் கேட்டுக் கொள்ளுங்கள், ஓசியில் கிடைக்காதவைக்கு!

இயர்போன் ஒன்று.

அட்டைப்பெட்டி மூடி ஒன்று.

40 செ. மீ. மின்கம்பி. 20 + 10 + 10 என்று துண்டாக்க.

நல்ல கிராஃபைட் பென்சில் இரண்டு- பிளந்து பயன் படுத்த.

பழைய செல்கள் இரண்டு; புதிய செல் ஒன்று.

சரிதானா?

ஆரம்பியுங்கள் விளையாட்டை!

கிராபைட் அருகே கடிகார ஒலி, டிரான்சிஸ்டர் பாட்டு மட்டுந்தானா?

'மெல்லப் பேசிப் பார்க்கட்டுமா?' என்கிறீர்களா!

பேசியும்தான் பாருங்களேன்! நண்பர்கள் கேட்கட்டும், ஒவ்வொருவராக!



கோகுலத்தில் கொண்டாட்டம்!

கோகுலம் என்றாலே அது குழந்தைகள் இருக்குமிடமல்லவா? கோகுலம் என்றாலே பிருந்தாவனமும் இணைந்ததல்லவா அது! — என்றெல்லாம் தோன்றுகிறதல்லவா?

ஆம்! பழைய மாம்பலத்திலே ஒரு கோகுலம். அங்கு இருக்கும் பிருந்தாவனம் — ஒரு கல்விக் கூடம்! அறிவாலயம்! அந்தப் பிருந்தாவனம் சமீபத்தில் தனது பத்தாமாண்டு நிறைவை என்ன நேர்த்தியாகக் கொண்டாடியது, தெரியுமா?

ஒருசிறுமி தாமரையாம் — ஒரு சிறுமி மல்லிகையாம். வேறுபாடுகள் இல்லாமல் அனைவரும் இந்தியரே என்ற கோட்பாட்டை எவ்வளவு அழகாக ஆடிக் காட்டினர்! தேசிய ஒருமைப் பாட்டைச் சிறுவர்கள் என்ன எளிமையாக உணர்த்திவிட்டனர்!

கிருஷ்ணலீலா நாட்டியம், காளிங்க நர்த்தனம் — அப்பப்பா... அந்தப் பாம்பு படம் எடுத்து ஆடுவதும், நீரில் அலை மோதுவதும்... குழந்தைகளா இப்படியெல்லாம் ஆடிக் காட்டினர் என்று திகைத்தவர் பலர்.

இவ்வளவு திறமைகளை ஒளித்து வைத்திருக்கும் சிறுவர்களை வெளிக் கொணர்ந்தவர் யார்? அவர் எப்படிக் கண்டுபிடித்தார்?

முன்னாள் ராமகிருஷ்ணா மெயின் பள்ளித் தலைமையாசிரியர் திரு. ஓ. வி. கோபாலன் அவர்களைத்தான் சாரும் அந்தப் பெருமைகள்!

நாற்பதாண்டுகட்கு மேலாக ஆசிரியர் அனுபவம் பெற்ற அவர், முன்னாள் ஜனாதிபதி திரு. கிரியிடம் சிறந்த ஆசிரியருக்கான விருது பெற்றிருக்கிறார். பல புத்தகங்கள் எழுதியிருக்கிறார். சிறந்த ஓவியரும் கூட.

நிகழ்ச்சியைக் கண்டு களித்த நாம் அவரைச் சந்தித்துப் பேச விரும்பினோம். அப்போது அவர் சொன்னார்:

''1974-ல் ஓய்வு பெற்றபின் — நாற்பதாண்டு காலத் தொண்டுக்கும் பிறகு சும்மாயிருக்க முடியுமா? சாதாரணமாக ஏழு மாணவர்களுடன் துவங்கி இன்று அது ஒரு சிறிய அளவில் இருநூறு குழந்தைகளைக் கொண்ட ஓர் ஆரம்பப் பள்ளியாகியிருக்கிறது.''

இவர் அந்நாளில் பள்ளியில் கையெழுத்துப் பத்திரிகை நடத்தி வந்தபோது, அதில் இன்று பிரபலமாயிருக்கும் பலர் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள். அவற்றை இன்னும் பாதுகாத்து வைத்திருக்கிறார். நாற்பத்திரண்டு ஆண்டுகட்கு முன்னரே பள்ளியில் கையெழுத்துப் பத்திரிகையைத் துவங்கி நடத்திய முதல் நபர்!

—தி. ச. பூமா.



பள்ளியில் நடந்த வெள்ளி விழா



'எல்லாரும் இந்நாட்டு மன்னர்!' என்றார் பாரதியார். முன்பெல்லாம் பள்ளி வளர்ச்சி மகாநாடுகள் நடத்தும் போது, அரசாங்கப் பள்ளிகள் சார்பில் நன்கொடை தேடிச் செல்வந்தர்களிடம் சென்றால்கூட, ''அரசாங்கப் பள்ளிக்கு நாங்கள் ஏன் செய்யவேண்டும்? கவர்மெண்டே செய்யட்டுமே!'' என்பார்கள்.

இதற்கு ஒரு விதி விலக்கு....

பள்ளி ஏற்புத் திட்டத்தில் ஓர் அரசு உயர்நிலைப் பள்ளியை ஒரு தோல் நிறுவனம் ஏற்றுக்கொண்டு மரத்தடுப்புக்கள், மின் இணைப்பு, இரும்புச் சாமான்கள் என்று ஆண்டுதோறும் அளிக்கிறது. ஆம், அது புதுப்பாக்கத்தில் உள்ள போகியு தோல் நிறுவனம்தான்! இதுவரை அளித்துள்ள உதவி மதிப்பு ரூ.7,500!

வெள்ளி விழாத் திட்டம் என ஏழைச் சிறுவர் பயனடைய, புத்தக வங்கி செயல்பட ஆயிரம் ரூபாய் அள்ளித் தந்தது புதுப்பாக்கம் டாஃபே கே பண்ணை. விடுதலைப்போராட்ட வீரர் சர்தார் வேதரத்தினம் வழித்தோன்றல் எஸ். கே. எம். சுப்பையா பிள்ளை நிறுவனத்தைச் சார்ந்த இளைஞர் திரு. மாரியப்பன் ஏழைச் சிறுவரும், தந்தையற்ற சிறுவரும் சீருடை பெற அளித்தார் இன்னொரு ஆயிரம்!

மேனிலைத் தொட்டி அமைப்பா?

பெயர் வளைவு முகப்பா? விழாப் பந்தலா?

ஆசிரியர்கள், மாணவர்களுக்குப் பாராட்டுப் பரிசுகளா? இனிப்பு வழங்கலா?

ஊர் மக்கள் உறுதுணையாக நிற்கின்றனர், பெற்றோர் ஆசிரியர் கழகத்துக்கு! கோவளம் மாதா கோயில் பாதிரியார் அருள்மறை ஜோசப் அவர்கள், திருப்போரூர் திருமுருகன் ஆலய அறங்காவலர் அருட்திரு. சிதம்பர சிவஞான சுவாமிகள் இருவரும் பள்ளி வளர்ச்சிப் பணிக்கு நிறைய உதவுகிறார்கள்.

பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. ஆர். பி. சாரதியுடன் பேசிக் கொண்டிருக்கும் போது அவர் குறிப்பிட்டார்: ''நான் 25 ஆண்டுகளாகப் பல பள்ளிகளில் பணியாற்றியிருக்கிறேன். இப்படிப்பட்ட ஒத்துழைப்பை எங்குமே பெற்றதில்லை. நாம் கேட்காமலே உதவுவதற்கு இங்குள்ள நிறுவனங்களும், ஊர் மக்களும் தாராள மனத்துடன் முன் வருகிறார்கள். இப்படி ஒவ்வொரு ஊரிலுள்ள பள்ளிகளுக்கும் உதவி கிடைத்தால் எவ்வளவு சிறப்பாயிருக்கும்!'' என்று மனம் கசிந்து கூறினார்.

சமீபத்தில், 31.3.84—ல் நடைபெற்ற பள்ளியின் வெள்ளி விழாவில் இவர்களோடு சட்டமன்ற உறுப்பினர் திரு. இ. சொக்கலிங்கம், செங்கை மாவட்டக் கல்வி அலுவலர் திரு. ப. குலசேகரன் ஆகியோரும் வந்து மகிழ்ந்து வாழ்த்திச் சென்றார்கள்.


—நம்பி.

உதைக்காதது!

பால்காரர்: மகனே,இன்று முதல் உனக்குப் பால் கறக்கக் கற்றுக் கொடுக்கப் போகிறேன். வா, பசுவிடம் போகலாம்.

மகன்: பசு வேண்டாம்பா. அது உதைக்கும். கன்றுக் குட்டிக்கிட்டே கற்றுக் கொடுத்திடப்பா''

— பி. வேணுகோபால்





மாமா எழுதிய கடிதம்



தணிகை உலகநாதன்

வேணியும் வாணியும் ஒரே பள்ளியில் படித்து வந்தார்கள். இருவரும் இணைபிரியாத தோழிகள். படிப்பிலும், விளையாட்டிலும் இருவரும் சேர்ந்தே பழகுவார்கள்.

ஆடை அணிகள் அணிவதிலும் இருவரும் ஒன்றாகவே இருப்பார்கள். இருவரும் ஒரே மாதிரியான பின்னல் பின்னிக்கொண்டு பள்ளிக்கூடம் போவதைப் பார்த்தால், இரட்டைச் சகோதரிகள் போலவே இருப்பார்கள்.

யாருடைய கண் பட்டுவிட்டதோ, தெரியவில்லை. ஒருநாள் வாணி, வேணிக்குத் தெரியாமல் பக்கத்து வீட்டுப் பெண்ணுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். தன்னை அழைக்காமல் விளையாடியதற்காக வேணி கோபம் கொண்டாள். வாணியுடன் பேசுவதை விட்டுவிட்டாள். வேணி தனியாகவே பள்ளிக்கூடம் போனாள். வாணியைக் கண்டால், முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவர்கள் நட்புக் கலைந்தது. வாணியும் தனிப் பறவையாகவே பள்ளிக்குப் போய் வந்தாள். அவர்களைச் சேர்த்து வைப்பதற்காகத் தோழியர் பலர் முயன்றனர். ஒன்றும் பலன் இல்லை.

வேணியின் மாமா திருச்சியில் இருந்தார். மாமாவின் பேச்சை வேணி தட்ட மாட்டாள். வேணியும், வாணியும் பிரிந்திருக்கிறார்கள் என்ற செய்தி மாமாவுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அவர் உடனே வேணிக்கு ஒரு கடிதம் எழுதினார். 'கூடிப் பிரியேல்' என்னும் ஔவையாரின் அமுத மொழியை விளக்கிக் கூறினார். இருவர் பிரியாமல் வாழ்வதால் ஏற்படும் நன்மைகளையும், பிரிந்து வாழ்வதால் ஏற்படும் தீமைகளையும் உருக்கமாக எழுதினார்.

மாமாவின் உருக்கமான கடிதத்தைப் பார்த்த வேணிக்கு மனம் உருகியது. அவள் தானாகவே வாணியிடம் சென்று பேசினாள். முன்பு போல அன்புத் தோழியாகப் பழகினாள். வாணியும், வேணியும் முன்புபோல நல்ல தோழிகளாகப் பழகியதைக் கண்ட பலரும் பாராட்டினார்கள்.

வேணி, தான் வாணியுடன் சேர்ந்து பழகும் செய்தியை மாமாவுக்குத் தெரிவித்தாள். அக்கடிதத்தில்,

''அன்புள்ள மாமா,

வணக்கம். தங்கள் உருக்கமான கடிதம் வந்தது; மகிழ்ச்சி தந்தது. நான் மீண்டும் வாணியுடன் தோழியாகப் பழகி வருகிறேன். எனக்கு அவள் முன்பு இருந்ததைவிட நெறுங்கிய தோழியாகி விட்டாள். இருவரும் ஒன்றாகவே தேனீர் பருகுகிறோம். தோட்டத்தில் இருவரும் சேர்ந்து மலர் பரிப்போம். வாணி எனது இடது கையைப் பிடித்துக் கொள்வாள்; நான் அவளது வலது கையைப் பிடித்துக் கொள்வேன். இருவரும் கைகோர்த்தபடியே பள்ளி செல்வோம்.

நீங்கள் எப்போது சென்னைக்கு வருவீர்கள். உடனே எழுதுங்கள்.

அன்புள்ள,
வேணி.

பிரிந்தவர் கூடியதைக் கேட்ட மாமா பெருமகிழ்ச்சி அடைந்தார். ஆனாலும், அவள் கடிதத்தில் சில பிழைகளைக் கண்டு வருத்தமும் கொண்டார். அந்தப் பிழைகளைச் சுட்டிக்காட்டி வேணிக்கு ஒரு கடிதம் எழுதினார்:

அன்புள்ள வேணி,

உன் அன்புக் கடிதம் கண்டேன்; இன்பம் கொண்டேன்; மீண்டும் நீ வாணியின் தோழியாகப் பழகி வருவதைக் கேட்டு உன்னைப் பாராட்டுகிறேன்.

நீ கடிதம் எழுதும் முறை சிறப்பாகவே இருக்கிறது. ஆனாலும், அக்கடிதத்தில் உன்னையும் அறியாமல் சில பிழைகள் காணப்படுகின்றன. அவற்றை விளக்கிக் கூறினால், அன்போடு ஏற்றுக் கொள்வாய் என நம்புகிறேன்.

'நெறுங்கிய தோழி' என்று எழுதியுள்ளாய். 'நெறுங்கிய' என்றால் பொருளே இல்லை 'நெருங்கிய' என்றுதான் எழுதவேண்டும்.

தேணீர் என்றால் (தேன் + நீர்) தேனாகிய நீர் என்று பொருள். நீர் தேனாக இருப்பதில்லை. அதைத் தேநீர் என்றே எழுதவேண்டும்.

'பரிப்போம் என்பதற்குப் பாதுகாப்போம் என்பது பொருள். 'பறிப்போம் என்று எழுதினால் கிள்ளுவோம் என்று பொருள். மலர் பறிப்போம் என்றே எழுத வேண்டும். (பறித்தல் = கிள்ளுதல்)

வலது கை, இடது கை என்று எழுதக்கூடாது. **வலக்கை,** இடக்கை, வலப்பக்கம், இடப்பக்கம் என்று எழுதுவதே சரியான சொல்தொடர்கள்.

கோர்த்து என்பதும் தவறான சொல்லே. அதனைக் **கோத்து** என்று எழுதுவதே சரியான சொல்லாகும். இனிக் கடிதம் எழுதும் போது இவை போன்ற பிழைகள் இல்லாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

நான் கோடை விடுமுறையில் அங்கு வந்து உன்னைப் பார்த்து மகிழ்வேன்.

உன் அன்புள்ள,
மாமா.

மாமாவின் கடிதத்தைப் பார்த்ததும் வேணி தவறு இல்லாமல் எழுதப் பழகிக் கொண்டாள்.

திருக்குறள் புதிர்-விடை

புதிர்–21

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. **(495)**

நீர் நிறைந்த இடத்தில் வசிக்கும் முதலை, மற்ற உயிர்களை வென்று விடும். ஆனால், அந்த நீரைவிட்டு அது வெளிவருமானால், மற்ற உயிர்கள் அதை வென்றுவிடும்.

புதிர்–22

உரன்என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து. **(24)**

மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்தின் வழியாகத் தோன்றும் ஆசைகள் மதம் பிடித்த யானையைப் போன்றவை. அவற்றை மன உறுதி என்னும் அங்குசத்தால் அடக்கி ஆளத் தெரிந்தவன், மேல் உலகம் என்னும் நிலத்திற்கு விதையைப் போன்றவன்.



கோகுலம் சிறுவர் சங்கம் உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி

உறுப்பினர் எண், பெயர், முகவரி

1449. என். சி. நாகராஜன், 48—கே, சத்திரத்தெரு, சிவகாசி—626 123.
1450. ப. சு. ஸ்ரீராம், ஐ. ஏ பெருமாள்புரம், புதுகிராமம், தூத்துக்குடி
1451. க. ஜோதிகுரு, 362, மிஷின் ஹில், குன்னூர்.
1452. வி. சுஜாதா, 3, சுதர்சன் நகர், ஸ்ரீரங்கம், திருச்சி—6.
1453. ம. மணிஅரசன், 28, இரண்டாம் தெரு, காந்திபுரம், ஆத்தூர்—636 102.
1454. எஸ். தியாகராஜன், 21, அன்பு நாயகன் தெரு, விஜயலட்சுமிபுரம், அம்பத்தூர், சென்னை—53.
1455. பி. தனலெட்சுமி, 124, ஆசிரியர் விடுதி, இராஜபவனம், உதகமண்டலம்.
1456. சேலம் ப. இரவிப்பிரகாசம், 26, முஹம்மத் புராத் தெரு, சேலம்—1.
1457. எல். முத்துராமன், பிளாட் எண் 5, சிங்கராயர் காலனி, தெற்குத்தெரு விரிவு, மதுரை—2.
1458. எல். சுதா, பிளாட் எண் 5, சிங்கராயர் காலனி தெற்குத்தெருவ்ரிவு, மதுர்ரை—2.
1459. கோ. இராஜகோபால், 32, வடக்குத் தெரு சுந்தரபாண்டியபுரம், தென்காசி.
1460. க. சிவகாமி, 62, தேவாங்கர் கீழத்தெரு, மதுரை ரோடு, ஸ்ரீவில்லிப்புத்தூர்.
1461. கி. கண்ணன், 81—ஏ, வடக்கு வீதி, கீழையூர், திருக்கோவிலூர்.
1462. சு. புவனேஸ்வரி, 9—ஏ, புதுப்படி சந்து, வடக்கு ஆண்டார் வீதி, திருச்சி—2.
1463. நா. சாந்தி, ஏ. எல். 104, 11—வது மெயின் ரோடு, அண்ணாநகர், சென்னை—40.
1464. சௌ. மணிவண்ணன், முனுசாமி ரெட்டியார் காலனி, கொடுங்கையூர், சென்னை—51.
1465. எஸ். விஜயலட்சுமி, 108, தேரு காலனி, மகாலிங்கபுரம் பொள்ளாச்சி—2.
1466. சா. ஜெயக்கிருஷ்ணன், 143 பெட்டிக்கடை, திருச்சி ரோடு சிங்காநல்லூர் கோவை—5.
1467. ஆர். பிரபாவதி, பிளாட் எண்: 668, கே. கே. நகர், மதுரை—20.
1468. வி. அருண் ஜான்சன், 1, பாலு முதலி தெரு, சென்னை—17.
1469. J. Subramanian, C/o. S. Bharadwaj, 1/7/76, Ramdaspeth, Nagpur
1470. R. Chandra Mouli C/o. M. Baradwaj. Ramdaspeth, Nagpur (Mah)
1471. பி. ஸ்ரீராம், 9, முதல் குறுக்குத் தெரு, ஜவஹர்நகர், சென்னை—82.
1472. பி. ஸ்ரீகாந்த், 9, முதல் குறுக்குத் தெரு, ஜவஹர் நகர், சென்னை—82.
1473. ஆர். ஸ்ரீதர், 3, தண்டபாணி தெரு, சென்னை—17.
1474. ஜெ. கணேஷ், 1/44, வடக்குத் தெரு, கீழ ஆம்பூர்—627 418.
1475. பி. சத்ய கணேஷ், 11, பாலாஜி நகர், அனகாபுத்தூர், சென்னை—70.
1476. தி. முனியப்பன், 110 பி, மதுரை ரோடு, ஸ்ரீவில்லிப்புத்தூர்.
1477. ஆர். குமரன், 67, செந்தி விநாயகபுரம் முதல் தெரு, விருதுநகர்.
1478. பெ. சி. பா. சம்பத்குமார், 9—16/3—ஏ, நாடார் மேலத்தெரு, அருப்புக்கோட்டை
1479. இரா. மணிகண்டன் த/பெ. கு. சி. ராஜலிங்கம், புது வளவு, விஜயாபுரம்—638 606
148 . எஸ். விஜய் ஆனந்த், 69, மேட்டுத் தெரு, அயன்புரம், சென்னை—23.
1481. ஆ. நிக்கோதேமு, 3, குப்புசாமி தெரு, செங்கற்பட்டு—2.
1482. சி. சந்திரசேகரன், 12, ஹைரோடு, செங்கற்பட்டு—2.
1483. எஸ். பைசல் பீர் முகமது, த/பெ. பீ. ஷர்புதீன், கனரா பாங்க், துறையூர்—621 010.
1484. கா. சாமித்துரை, 57, பழைய போஸ்ட் ஆபீஸ் தெரு, கோவில்பட்டி.
1485. எஸ். ராஜேஷ், 22, சுரேஷ் நகர், வளசரவாக்கம், சென்னை—87.
1486. எம். அருள்மொழி, 7—சி, லட்சுமி இல்லம், நம்பர் 1 தெரு, சின்ன சுப்பண்ண கவுண்டர் வீதி, சாயிபாபா காலனி, கோவை—11.
1487. கே. முருகானந்தம், S/o. ஆர். கனகராஜ், ஆசிரியர், கிழக்கு வீதி, ஜக்கார் பாளையம்—638 202
1488. ஜெ. தர்மேந்தர், 42, பி. என். பி. ஆர். லேன், ஒயிட் ஹவுஸ் ரோடு, தேனி—626531.
1489. ஜெ. சைலேந்தர், 42—பி, என். பி. ஆர். லேன், ஒயிட் ஹவுஸ் ரோடு, தேனி
1490. சி. பார்த்தசாரதி, 883, திருச்சி ரோடு, சிங்காநல்லூர், கோவை—5.
1491. டி. பிரகாஷ், 47, மேற்கு சனாதன் ரோடு, ஆர். எஸ். ரோடு, கோவை—15.
1492. இரா. இராஜா இன்பசாகரன், த/பெ. இராபர்ட், சுகாதார ஆய்வாளர், குன்னத்தூர்—638 163.
1493. இரா. இரமேஷ், 26—ஏ—11, சாமராஜப்பேட்டை—636 451.
1494. எஸ். வி. கௌரி, ஏ/9, முனிசிபல் காலனி, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி—2.
1495. ப. ஸ்ரீவித்யா, சி—24, எல். ஐ. ஜி. காலனி, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி—2.
1476. க. மணிமாறன், 9/பி, ராமகிருஷ்ணாபுரம், 2—வது கிராஸ், கரூர்.
1497. S. Mageshwaran S/o. R. Saba, A.S.M. Malur, (Karnataka) 5631 30
1498. ஆர். ஆனந்த், பி. எல். 12, திருநகர் அனெக்ஸ், சென்னை—87.
1499. டி. எஸ். சுரேஷ், 12—டி, மகாதேவபுரம், நாடார் காலனி அருகில், மேட்டுப் பாளையம்—641 305



1500. டி. எஸ். ராஜேஷ், 12–டி, மகாதேவபுரம், நாடார் காலனி அருகில், மேட்டுப் பாளையம்–641 305.
1501. சி. கே. ரவிச்சந்திரன், எப்–75–ஏ, எஸ். பி. பி. காலனி, ஈரோடு–10.
1502. சி. தினேஷ், 16, 2–வது தெரு, ஆண்டாள் அவின்யு, சென்னை–82.
1503. க. பரணிதரன், டைப் 3 தெர்மல் காலனி–2 தூத்துக்குடி–628 004.
1504. எஸ். மங்களசுந்தரி D/o. சுப்பிரமணியன், ஆசிரியர், மேலரத வீதி, வாசுதேவ நல்லூர்.
1505. கு. கவிதா, 9, அனுமந்தபுரம் தெரு, தென்காசி–627 811
1506. சி. ரங்கராஜன், 3, வெங்கடாசல செட்டி தெரு, சென்னை–5.
1507. சி. சுந்தரராஜன், 3, வெங்கடாசல செட்டி தெரு, சென்னை–5.
1508. வி. ஆர். வெங்கடேச சரவணன், 106, முனியப்ப நாயக்கன் தெரு, சென்னை–11.
1509. பி. செந்தில்குமார், 2, அபிராமி தெரு, ராம்நகர், அம்பத்தூர், சென்னை–53.
1510. செ. கோ. முரளிதரன், 88, அம்மாப்பேட்டை மெயின் ரோடு, சேலம்–1.
1511. சி. டி. திலீப் குமார், அன்பு இல்லம், இந்தியன் பாங்க் அருகில், திருநின்றவூர்-ஆர்.எஸ்
1512. பி. கண்ணன், 1/1, நேதாஜி ரோடு, பா. நா. பாளையம், கோவை–37.
1513. B. Ganesh, S/o. Vt. Balakrishnan, Type IV A-60 HAL, Township, OZHAR, Nasik 422 207.
1514. மு. திருப்பதி S/o. தேனம்மாள், மஸ்தான் பள்ளி வாசல், தெரு, திருப்பத்தூர்–623 217.
1515. வெ. நிஷா, 9, பழைய எடப்பாடி ரோடு, சங்ககிரி–637 301.
1516. இரா. சதீஷ்குமார், டி. எஸ். 406, கன்னெடியன் சந்து, வடக்கு ஆஜாரம், தஞ்சை–9.
1517. எஸ். முத்துக்குமார் 8, சாந்தி நகர் மெயின் ரோடு, சென்னை–88.
1518. எஸ். ஷீலா, 8, சாந்திநகர் மெயின் ரோடு, சென்னை–88.
1519. சா. சரவணன், 29, பெ. சி. சிதம்பர நாடார் தெரு, விருதுநகர்.
1520. ஜி. சுரேஷ்குமார், 82 ஏ/5, செயிண்ட் மேரீஸ் தெரு, கீழ இராமன் புதூர், நாகர் கோவில்.
1521. ஆர். அகிலா, 8, சீனிவாசன் தெரு, ஜகதாம்பாள் காலனி, சென்னை–91
1522 த. கமலா 13/10, நாகநாதசாமி ஸ்டோர், நந்தி கோயில் தெரு, திருச்சி–2.
1523. சி. ஆர். ஸ்ரீதர், 121, வடக்கு ராஜ வீதி, பெரிய காஞ்சிபுரம்.
1524. சே. அனந்தேஷ், 60, துளசிங்க பெருமாள் கோயில் தெரு, சென்னை–5.
1525. எஸ். குமார், 15 நாட்டு முத்து குமரப்ப முதலி தெரு, சென்னை–1.
1526. கே. சி. ரவி, சி–45, ராஜாராம் நகர் சேலம்–7.
1527. ஆர். ஜமுனா, 9, பகவான் நகர், மீஞ்சூர் – 601 203.
1528. ஹ. சங்கர் பசுபதி கோவில் வீதி, தண்டாங்கோரை–614 206.
1529. பழ. முத்தப்பன், 2/63 மெயின் ரோடு, குருவிக் கொண்டான்பட்டி, புதுக் கோட்டை மாவட்டம்.
1530. எஸ். என். எஸ். நிஷா பிரியா, 158, 14–வது கிழக்குக் குறுக்குத் தெரு, மகாகவி பாரதிநகர், சென்னை–39.
1531. இரா. இராஜம், 8, பாரதி ரோடு, இராம் நகர், கோவை–9.
1532. வி. ஜெயப்பிரகாஷ், 87–பி, புஷ்பகிரி தெரு, சந்தவாசல்–606 905.
1533. எம். சீனு, 17, ஐயப்ப செட்டி தெரு, முதல் மாடி, மண்ணடி, சென்னை–1.
1534. Anuradha, C. D-311-III, P.O. Dhurwa, Ranchi. Bihar 834004
1535. ப. இசக்கிமுத்து, 23–58–சி, பனவிளை, துக்கலை–629 175.
1536. எஸ். துரைவேலன், 52, பாலார்ட் தெரு, ஜவஹர் நகர், சென்னை–82.
1537. ம. இளஞாயிறு, சி–90 திரு. வி. க. குடி, அண்ணா நகர், சென்னை–102.
1538. ஜே. எஸ். திவாகர், பிளாட் எண் 46, கலைஞர் தெரு, அண்ணாநகர், பம்மல், சென்னை–75
1530. ஆர். ராஜேஸ்வரி, கதவு எண்: 7/166–ஏ, பிளாட் எண்: 17–பி, அகத்தீஸ்வரர் கோயில் தெரு, பொளிச்சலூர், சென்னை–74.
1540. கே. தங்கராசு, கிருஷ்ணா ரைஸ் மில், பாண்டமங்கலம்–637 208.
1541. வெ. ஜெயராமன், ஆறும் வகுப்பு 'அ' பிரிவு, அரசுயர் பள்ளி, வெள்ளோடு–638 112.
1542. பி. பகவதி, 155, முதல் குமரன் தெரு, சேலம்–1.
1543. பி. சுப்பிரமணியன், 155, முதல் குமரன் தெரு, சேலம்–1.
1544. கோ. சரவணன், 3, கோபாலசாமி செட்டித் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்–2.
1545. ந. சங்கரி, 24, கோகுலம், லாயிட்ஸ் சாலை, சென்னை–5.
1546. கே. சோமசேகர், 139, பன்னீர் செல்வம் தெரு, காவேரிப்பட்டணம்–635 112.
1547. எஸ். பார்வதி, C/o. ஆர். சிவசுப்பிரமணியம், கார்டன் ஹாஸ்பிடல், சாம்ராஜ் எஸ்டேட், நீலகிரி.
1548. எஸ். கலைவாணன், 60, பெருமாள்புரம், திருநெல்வேலி–7.
1549. வ. ஜெகநாதன், 24/பி, சர் ராஜா அண்ணாமலை செட்டியார் தெரு, சாயிபாபா காலனி, கோவை–11.
1550. ஜெ. அர்ச்சனா, பிளாட் எண்: 96, கதவு எண்: 12, தேர் தெரு, சென்னை–87.

நிலாவுடன் போன மான்குட்டி



தங்கமணி

ஊருக்கு அப்பால் ஒரு காடு. அந்தக் காட்டுக்குள்ளே ஓர் ஆறு. அந்த ஆற்றுக்குப் பக்கத்திலே ஒரு மரம். வானளாவ உயர்ந்து, நாலைந்து காட்டானைகள் ஒன்று சேர்ந்தாற் போலப் பருத்துப் பெருத்த காட்டு மரம். அந்தக் காட்டு மரத்திற்கு அடியிலே, காட்டுச் செடிகள் அடர்ந்து செருமி மண்டிக் கிடந்தன. மலைப் பாறையில் குடைந்து எடுத்த மாதிரி, அடி மரத்தில் ஒரு பெரிய பொந்து. அந்த விசாலமான பொந்துக்குள்ளே, ஓர் அம்மா மான் படுத்துக் கொண்டிருந்தது. அந்த மானின் வயிற்றின் மீது தலையைச் சாய்த்துத் தூங்கிய குட்டி மான்—

கனவு கண்டதோ, என்னவோ...?

தூக்கம் கலைந்து, மெல்ல நெளிந்தது. தலையைத் தூக்கியது. அம்மாவைப் பார்த்தது. அது தூங்கிக் கொண்டிருந்தது.

ஓரிரு வினாடிகளுக்குப் பிறகு —

மான் குட்டி, உடலை அப்படியும் இப்படியுமாகப் புரட்டிக்கொண்டு எழுந்தது. பொந்துக்கு வெளியே எட்டிப் பார்த்தது.

முன்னிரவு.

நிலா வெளிச்சம் பளபளத்தது.

மறு விநாடி—

மான் குட்டி, பொந்துக்குள்ளிருந்து வெளியே வந்தது. மரத்தைச் சூழ்ந்துள்ள புதரைத் தாண்டிய சமயம்—

''அடேய்! இரவு நேரத்தில் ஏன் வெளியே போகிறாய்? உள்ளே வா!..'' என்று அதட்டினாற்போல் அழைத்தது, பொந்துக்குள்ளிருந்த அம்மா மான்.

''இல்லை அம்மா, வந்து.... தண்ணீர்த் தாகம் நாக்கை வறட்டுகிறது. குளத்திற்குப் போய், கொஞ்சம் தண்ணீர் குடித்துவிட்டு ஓடி வந்து விடுகிறேன்...'', என்றது மான்குட்டி.

தாய் மான், சற்றுக் கோபமாய்க் கூவியது: ''குளக்கரையில் மலைப்பாம்பு. ஓநாய் ஏதாவது பதுங்கியிருக்கும், மரியாதையாக உள்ளே வந்து படு!..''

அம்மாவின் பேச்சைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. துள்ளிக் குதித்துத் தாவியோடியது. அருகிலுள்ள குளக்கரைக்குப் பாய்ந்தோடிய மான்குட்டி, ஒரு நொடி தயங்கியது. குளக்கரையைச் சுற்றிக் கவனித்தது.

குளக்கரையில் —

மலைப்பாம்பையும் காணோம்: ஓநாயையும் காணோம்:

மான்குட்டி, குளத்துக்குப் போயிற்று. தலையைத் தாழ்த்தித் தண்ணீரை மடக் மடக்கெனப் பருகியது.

அடுத்த விநாடி —

மெல்லத் தலையை நிமிர்த்திய மான்குட்டி, நீர்ப் பரப்பைக் கவனித்தது. நீர்ப் பரப்பில், பளபளவெனப் பிரகாசிக்கும் நிலா வட்டத்தின் பிம்பத்தை வியப்புடன் பார்த்தது.

அப்புறம்—

மான்குட்டி, தலையை நிமிர்த்தியது. வானத்தைப் பார்த்தது. வானத்தில், மெல்ல மெல்ல நகர்ந்து செல்லும் வெண்ணிற மேகங்களுக்கிடையே அழகிய வெண்ணிலாவைக் கண்டது.

மான்குட்டியின் பார்வைக்கு நிலாவும் மெல்ல ஓடுவது போல் காட்சி அளித்தது. மான் குட்டி, நிலாவையே பார்த்தது. பார்த்துப் பார்த்து ரசித்தது. ரசித்துக் கொண்டே பாடியது:

''நிலா, நிலா, ஓடி வா
நீயும் நானும் பாடலாம்;
குளுகு ளுக்க நிலவிலே
கூடிப் பாடி ஆடலாம்...''

மான்குட்டி, சந்தோஷமாகப் பாடிய வாறே நிலாவைப் பார்த்து ரசித்துக் கொண்டே துள்ளித் துள்ளி ஓடியது... ஓடியது... ஓடியது...

வெகு தூரம் ஓடியது...! நிலாவும் ஓடிக் கொண்டிருப்பதைக் கண்டது.

காட்டு மரப்பொந்தை விட்டுவிட்டு, காட்டு மரப்பொந்தில் படுத்திருக்கும் அம்மாவை விட்டுப் பிரிந்து ரொம்ப ரொம்ப தூரம் ஓடிவிட்டது!

நேரம், சிறுகச் சிறுக நகர்ந்து நழுவி—

நள்ளிரவாயிற்று!

மான்குட்டி, தயங்கி நின்றது.

திடீரென்று —

வானில் இருந்த அழகிய நிலாவைக் குப்பெனக் கவ்வி விழுங்கலாயின மேகங்கள்!

கன்னங்கரிய மேகங்கள்!

உடனே—

வானமெல்லாம் கறுத்தது. வையகமெல்லாம் இருள் சூழ்ந்தது.

இருளைக் கண்டதும்—

மான் குட்டி மிரண்டது.

அந்தச் சமயத்தில்—

சற்றுத் தூரத்திலுள்ள மலையடிவாரத்திலிருந்து ஒரு வேங்கைப் புலி, பயங்கரமாக உறுமியது!

இன்னொரு பக்கத்திலிருந்து ஓர் ஓநாய், பசி வேட்கையுடன் ஊளையிட்டுப் புலம்பியது!

அடுத்த நொடி —

பயம்! பயம்! பயம்!...

திகில்! திகில்! திகில்!...

மான் குட்டி, அஞ்சி நடுங்கித் தவித்தது! சுற்றிச் சூழ்ந்திருக்கும் கருக் இருளைப் பார்த்துப் பார்த்து முழித்தது!...

'அய்யோ...!...'

இந்தப் பயங்கரக் காட்டில்
நடுநிசி நேரத்தில்,
பாழும் இருளில்,
புலி உறுமுகிறதே!
ஓநாய் ஊளையிடுகிறதே...!...

அந்தக் காட்டு மரப்பொந்து, எந்தப் பக்கத்தில் இருக்கிறது என்றே புரியவில்லையே! என் அம்மா எங்கே இருக்கிறாள் என்றே தெரியவில்லையே! காட்டு மரப் பொந்துக்கு நான் எப்படிப் போவேன்...? என் அம்மாவை எப்படிச் சந்திப்பேன்...?

ஓ... அம்மா!

உன்னுடைய பேச்சைக் கேட்காமல் வந்து, இந்த மோசக்கார நிலவின் அழகில் புத்தி கெட்டுப் போய்—

நடுக்காட்டில்
நடுநிசி நேரத்தில்
கருக்கிருளில்
வந்து சிக்கிக்கொண்டு, வழி தெரியாமல் மருண்டு மிரண்டு தவிக்கிறேனே! அம்மா! அம்மா!... என்று ஏதேதோ எண்ணி அழுதது! தேம்பித் தேம்பி அழுதது!

அருகில்—

ஓர் அத்தி மரம். அந்த அத்தி மரக் கிளையில், ஒரு பொந்து. அந்தப் பொந்துக்குள், தூங்காமல் விழித்துக் கொண்டிருந்தது, ஒரு கிழ ஆந்தை. அது, மான் குட்டியின் அழு குரலைக் கேட்டது. கேட்டதும், தலையை நீட்டி வெளியே கவனித்தது.

நடுக்காட்டில்—

தைரியநாத சுவாமி




இத்தாலியில் பிறந்து இந்தியாவுக்குச் சமயத் தொண்டு செய்ய வந்தார் கொன்ஸ்டான்ஸ் ஜோசப் பெஷி என்பவர். தமிழ்நாட்டுக்கு வந்த அவர் தமிழ் மொழியைக் கற்றார்; நல்ல புலமை பெற்றார்.

'பரமார்த்த குருகதை' உங்களுக்கெல்லாம் தெரியும். அந்த வேடிக்கைக் கதையை எழுதியவர் அவர்தான்.

'தேம்பாவணி' என்ற காப்பியத்தை இயற்றினார்; 'சதுர் அகராதி' என்ற அகராதியை எழுதி, அகராதி எழுதுபவர்களுக்கு வழிகாட்டினார்.

அவர் தம்முடைய பெயரைத் 'தைரியநாத சுவாமி' என்று வைத்துக் கொண்டார். அந்தப் பெயரை 'வீரமா முனிவர்' என்று அப்போதிருந்த தமிழ்ச் சங்கத்தார் மாற்றி அமைத்து விட்டார்கள்!



நடுநிசியில்—

தன்னந்தனியே நின்று தேம்பித் தேம்பி அழுது கொண்டிருக்கும் மான் குட்டியைப் பார்த்தது. ''அய்யோ, பாவம்! வழி தவறி வந்து மிரண்டு தவிக்கிறதோ, என்னவோ...?'' என்று பரிதாபத்துடன் முனகியவாறே பொந்துக்குள்ளிருந்து பாய்ந்து பறந்தது. மான்குட்டிக்கு எதிரில், ஒரு பாறுங் கல்லின் மீது வந்து அமர்ந்தது. ''கர்ர்ர்... குர்ர்ர்... ஸ்ஸ்ஸ்....''என்று மான்குட்டியைக் கனிவுடன் விசாரித்தது, கிழ ஆந்தை.

''மான் குட்டியே, ஏன் அழுகிருய்...?'' என்று கேட்டது.

மான் குட்டி, ஆந்தையைப் பார்த்தது. தேம்பியது. தேம்பிக்கொண்டே சொன்னது: ''இரவில் வெளியே போகாதே என்று என்னுடைய அம்மா சொன்னுள். அவளது சொல்லேத் தட்டி விட்டு, நிலாவின் அழகில் புத்தி கெட்டுப் போய் இவ்வளவு தூரம் வந்து... என் அம்மா தூங்கிக் கொண்டிருக்கிற காட்டு மரப் பொந்துக்குப் போவதற்கு வழி தெரியாமல் திகைத்து நிற்கிறேன்...!''

''அய்யோ, பாவம்!...'' என்று ரொம்ப வருத்தப்பட்டது, கிழ ஆந்தை. மான்குட்டி, ''அழாதே. சில மாதங்களுக்கு முன்னே, நீ குறிப்பிடுகிற அந்தக் காட்டு மரத்தில்தான் நான் வசித்து வந்தேன். அங்கே காக்கைகளின் தொந்தரவைத் தாங்க முடியவில்லே. அதனுல், இங்கே வந்து விட்டேன்...'' என்றது.

''அந்தக் காட்டு மரத்திற்குப் போவதற்கு உனக்கு வழி தெரியுமா...?'' என்று ஆவலுடன் கேட்டது, மான்குட்டி.

''ஓ... தெரியும்!'' என்ற கிழ ஆந்தை, மான் குட்டியைப் பார்த்துப் பரிவுடன் கூறியது: ''அதோ...இந்தப் பக்கமாக நாலேந்து ஈச்ச மரங்கள் தெரிகின்றன, பார். அந்த ஈச்ச மரங்களுக்குப் பக்கத்திலே, ஒரு காட்டாறு ஓடுகிறது. அந்தக் காட்டாற்றின் கரையோரமாகவே கிழக்குத் திசையில் போனுல், உன் அம்மா இருக்கும் காட்டு மரத்தை அடைந்து விடலாம்...''

உடனே—

''ரொம்ப நன்றி, தாத்தா!...'' என்று கூறிவிட்டுத் துள்ளிக் குதித்தோடியது, மான்குட்டி. சில விநாடிகளுக்குள் ஈச்ச மரங்களுக்கு அருகில் காணும் காட்டாற்றங்கரைக்கு வந்தது. பார்த்தது.

காட்டாற்றில்—

வெள்ளம் புரண்டோடியது.

உருண்டு, திரண்டு, அலை ததும்பத் தாவிச் செல்லும் ஆற்று வெள்ளத்தைப் பராக்குப் பார்த்தபடியே, மான்குட்டி நடந்தது. ஆற்றங்கரை யோரமாகவே நடந்தது... நடந்தது. நடந்துகொண்டிருக்கையில்—

செடி, கொடிகள் அசைந்தன....

என்னவோ தாவிக் குதித்து....

மான் குட்டி திடுக்கிட்டு நின்று, தபதபவென ஓடி வரும் சப்தத்தைக் கவனித்தது. சுற்றுமுற்றும் பரபரப்புடன் கூர்ந்து பார்த்தது.

குரல் கேட்கும் தூரத்திலிருந்து—

படுவேகமாகப் பாய்ந்து வரும் காட்டு நரியைக் கண்டதும் பகீரென்றது!

மறுவிநாடி, மான்குட்டி மிகுந்த பயத்துடன் தாவிக் குதித்து ஓடியது! ஆற்றங்கரை யோரமாகவே காற்றைப் போல் கலக்கத்துடன் விரைந்து ஓடியது.

நரி....?

அது, கடந்த இரண்டு இரவுகளாகப் பசிக்குத் தீனி ஏதும் கிடைக்காமல் காடெல்லாம் அலைந்து திரிந்து கொண்டிருக்கும் வெறி பிடித்த நரியாயிற்றே....!

கண்ணில் பட்ட மான்குட்டியை விடுமா...? அது, மான்குட்டியைப் படுவேகமாகத் துரத்திக்கொண்டு வந்தது....!

மான்குட்டி,

உயிரைக் காக்க ஓடியது!

நரி,

வயிற்றை நிரப்ப ஓடியது!

இன்னும்...

ஒரு தென்னை மரக்கிடை தூரந்தான்...

அந்தச் சமயத்தில்—

காட்டாற்று வெள்ளத்தின் நடுவில், ஒரு பெரிய காட்டு மரம் மிதந்து போயிற்று.

அதைக் கண்டவுடனே—

ஒரே தாவல்!

கரையிலிருந்து வெள்ளத்தில் மிதந்து போகும் காட்டு மரத்திற்குப் பாய்ந்து தாவிக் குதித்து நின்றது, மான்குட்டி. கொழுத்துப் பருத்த ஒரு காட்டெருமையைக்கூட அனுவசியமாகச் சுமந்து செல்லக் கூடியது அந்தக் காட்டுமரம். சின்னஞ்சிறு மான் குட்டியை அது பூப்போல ஏந்திக்கொண்டு மிதந்தோடியது!...

நரி—

அது விடவில்லை. மரத்தோடு மிதந்து போகும் மான் குட்டியைப் பார்த்துக்கொண்டு, கரையோரமாகவே ஓடியது. ஓடியது. ஓடிக்கொண்டிருக்கையில்—

காட்டாற்றங் கரையோரமாக ஒரு பெரிய மலைப்பாறை. அந்தப் பாறைக்கு அருகில், உடலை ஆற்று நீரிலும், தலையை மலைப்பாறைக்கு அடியிலும் மறைத்துக் கொண்டு, இரையை எதிர்பார்த்துக் காத்திருந்தது—

ஒரு முதலை!...

மறுவிநாடி —

தன்னைத் தாண்டியோடும் நரியைக் கண்டதும் ஒரே... பாய்ச்சல்!

கப்ப்ப்!...

மான்குட்டியைத் துரத்திவந்த காட்டு நரியைப் பிளந்த வாயில் கவ்விப் பிடித்து இறுக்கி இடுக்கிக்

நாடக ஆசிரியரான நடிகர்!



உலகப் புகழ்பெற்ற ஆங்கில நாடக ஆசிரியராகிய வில்லியம் ஷேக்ஸ்பியர் ஒரு நடிகராகத்தான் வாழ்க்கையைத் துவக்கினார். நடிகராக என்றால் கதாநாயகராக அல்ல; சிறு சிறு வேடங்களில் சிறிது நேரமே மேடைகளில் வந்து போவார்.


அப்போது நாடகங்கள் எழுத வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு ஏற்பட்டது. சில நாடகங்களை எழுதினார். பிறகு, சில நடிகர்களை ஒன்றுசேர்த்து அவரே ஒரு நாடகசபை அமைத்தார். விரைவிலே, அந்த நாடகசபையின் முழுச்சொந்தக்காரராகி உலகம் புகழும் 37 நாடகங்களை எழுதினார்!

கொண்டு வெள்ளத்திற்குள் நழுவி விழுந்தது
ரணவாய் முதலை...!
அப்புறம்—
வெள்ளத்தில் மிதந்து போகும் காட்டு மரத்தில் நின்றபடியே பயணம் செய்யும் மான் குட்டிக்கு உயிரெல்லாம் படபடத்தது! உள்ளமெல்லாம் பதைபதைத்தது! அது, 'அம்மா! அம்மா...!' என்று ஓயாமல் அழுது கொண்டிருந்தது.
வெகு நேரமாயிற்று.
பையப் பையக் கிழக்கு அடிவானம் வெளுத்தது. சூழ்ந்து கவ்விய இருள், கருமை கரைந்து வெளிறியது. காட்டுப் பறவைகள் வானமெங்கும் கிரீச்சிட்டுப் பறந்து உலாவின.
சிறிது நேரத்திற்குப் பிறகு —
ஆற்று வெள்ளத்தில் மிதந்தோடும் காட்டு மரத்தில் நின்றபடியே, ஆற்றின் இருபுறமும் பார்த்துக்கொண்டே வந்த மான்குட்டி, திடீரென்று கத்தியது: ''அதோ! அதோ!... அதுதான் நாங்கள் வசிக்கும் காட்டுமரம்!''
அடுத்த விநாடி—
மான்குட்டி, ஆவலுடன் தாவியது. மரத்திலிருந்து கரைக்குத் தாவிக் குதித்தது. ''அம்மா! அம்மா...!'' என்று அன்பும் ஆசையுமாகக் கூவியவாறே ஓடியது. காட்டு மரத்தை அணுகியது.

அங்கே, மரத்தடிப் புதரில் அலங்கோலமாக விழுந்து கிடந்த அம்மா மான், சட்டெனத் துள்ளி எழுந்தது. மான் குட்டியைக் கண்டதும், ''அட, என் மகனே! திரும்பி வந்து விட்டாயா!''... எனப் பாசத்துடன் கதறியது! மான்குட்டியை உடலோடு இழுத்து அணைத்துக் கொண்டு முகத்தைக் கனிவுடன் நக்கிக் கொடுத்தது.
மான்குட்டி, அம்மாவைக் கவனித்தது. தாய் மானின் கழுத்திலும், உடலிலும் ஏற்பட்டிருந்த கீறல்களிலிருந்து இரத்தம் வழிந்து காய்ந்து போயிருந்தது.

''அம்மா, உன் உடலெங்கும் கீறலும் ரத்தமுமாயிருக்கிறதே! எப்படி ஏற்பட்டது...?'' என்று கண் கலங்கக் கேட்டது மான்குட்டி.

அம்மா மான், கண்ணீர் வடித்தபடியே சொல்லிற்று: ''அருமை மகனே, நேற்று இரவு, நீ தண்ணீர் குடித்து விட்டு வருகிறேன் என்று பொந்தை விட்டு வெளியே போனாய். வெகுநேரமாகியும் திரும்பி வரவில்லை. நான் உன்னைத் தேடிக்கொண்டு வந்தேன். குளக்கரையில் உன்னைக் காணோம்! அப்புறம், காடெல்லாம் அலைந்து திரிந்து உன்னைத் தேடிக் கொண்டிருக்கையில், திடீரென்று — இரண்டு ஓநாய்கள் என்னைத் தாக்கின! தாவிக் கவ்வின! கவ்விக் குதறின! எப்படியோ, சாமர்த்தியமாக அந்த ஓநாய்களுக்கு இரையாகாமல், உயிர் தப்பி ஓடி வந்து விட்டேன்...!''



மழுட்டிவாயன், கூழைக்கடா


மழுட்டிவாயன், கூழைக்கடா, கங்கணம், நரையான், சரிவை, கிளுவை, டப்டட்டக், கார்கென் டெயில், பில் டெயில், அரிவாள் மூக்கு....


என்ன இவையெல்லாம்?

வேடந்தாங்கல் ஏரிக்கு ஆண்டுதோறும் வருகின்ற ஆயிரக்கணக்கான பறவை இனங்களில் சிலவற்றின் பெயர்களே இவை!

அம்மாவின் துயரக் கதையைக் கேட்ட மான்குட்டிக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்தது. அது வீறிட்டுப் புலம்பியது! அம்மாவின் கழுத்தைத் தனது முன்னங் கால்களால் சேர்த்து அணைத்தவாறே கதறி அழுதது! அழுது கொண்டே சொல்லிற்று: ''அம்மா! அம்மா! இனிமேல் உன் சொல்லை மீறி நடக்கவே மாட்டேன்...!''

ஓவியர் ஆகலாம்!





முனியம்மாவின் மனக்கணக்கு



புதுவூர் முத்து

மனோகர் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தான். அவன் கையில் புத்தம் புதிய எச். எம். டி. கடிகாரம் பளபளத்தது.

சட்டைப் பையிலிருந்த 'கால்குலேட்டரை' எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு அதன் அழகைப் பார்த்தான். அதன் பொத்தான்களை அழுத்திக் கணக்குகள் போட்டு, எண்கள் ஓடி விளையாடுவதைப் பார்த்து ரசித்தான்.

மனோகர் ஆறாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தான். அவனுடைய அப்பா செல்வநாயகம் தம் செல்வத்தின் காரணமாக கடிகாரம், கால்குலேட்டர்... இப்படி அவன் கேட்பதையெல்லாம் வாங்கிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

பள்ளிக்கூடத்துப் பையன்களிடம், ''இந்தப் புதுச் சட்டையைப் பார்த்தீர்களா? கடிகாரத்தைப் பார்த்தீர்களா? கால்குலேட்டரைப் பார்த்தீர்களா?'' என்று தன்னைப் பற்றிப் பெருமை பேசிப் பீற்றிக்கொண்டே இருப்பான் அவன்.

பாடங்களைச் சரியாகப் படிப்பதில்லை; வகுப்பில் ஆசிரியர் சொல்வதை அக்கறையோடு கவனிப்பதில்லை; விளையாட்டிலும் ஆர்வம் இல்லை; பேச்சுக் கலை, எழுத்துக்கலை, ஓவியம் போன்றவற்றிலும் அவனுக்கு ஊக்கம் இல்லை.

மடிப்புக் கலையாத சலவைச் சட்டை போட வேண்டும். அது கொஞ்சம் அழுக்கானாலும் அவன் போடமாட்டான். வேலைக்காரி அதைச் சலவை செய்து பெட்டி போட்டுத் தருவாள். வேலைக்காரி வராவிட்டால் அப்போதும் தன் துணியைத் துவைக்க மாட்டான். அம்மாதான் துவைத்துத் தர வேண்டும்.

''மனோகர், இப்படி ஆடம்பரப் புத்தியோடு இருக்காதே... சோம்பேறியாக இருக்காதே... நன்றாகப் படி''— இப்படி அவனுடைய அம்மா ருக்மிணி அவனுக்குப் புத்திமதி சொல்வாள்.

மாலை நேரம். காய்கறிகள் விற்கும் முனியம்மா தலையில் காய்கறிக்கூடையுடன் அங்கு வந்து நின்றாள்.

''தம்பீ... இந்தக் கூடையைக் கொஞ்சம் இறக்கிவிடு...'' என்றாள்.

''எனக்குக் கைவலிக்கும்; என் சட்டை அழுக்காகி விடும். வரும் போதே உன் தம்பியைக் கூட்டிவர வேண்டியதுதானே?..'' என்றான்.

''ஒரு சின்ன உதவி... இதில் நீ என்ன குறைந்துவிடப் போகிறாய்? சட்டை அழுக்காகி விடும் என்றால், நீ வீட்டை விட்டு வெளியிலேயே போக மாட்டாயா?''

''நான் படிக்கிற பையன்... நீ சாதாரணக் கூடைக்காரி... உனக்கெல்லாம் பதில் சொல்லவேண்டும் என்று ஒன்றுமில்லை...''— அகந்தையாகப் பதில் சொன்னான்.

வேறுவழியின்றி அவள் சிரமத்துடன் தானாகவே கூடையைக் கீழே இறக்கினாள். கத்தரிக்காயும் தக்காளியும் கீழே . விழுந்து உருண்டன.

சற்று நேரத்தில் மனோகரன் அம்மா ருக்மிணி வந்தாள்.

''என்ன முனியம்மா... ஏன் காய்கள் கொட்டி விட்டனவா....?''


''ஆமாம் அம்மா... இறக்கும் போது தவறி விழுந்திடுச்சு'' என்றவள் மனோகர் பற்றி எதுவும் சொல்லவில்லை.

விலையைக் கேட்டு ஒவ்வொரு காயிலும் அரை கிலோ, ஒரு கிலோ என்று வாங்கிய மனோகரின் தாய் அவனைப் பார்த்து,

''மனோகர், வெண்டைக்காய் ஒரு கிலோ 1.20, தக்காளி 1 கிலோ 3:55, காரட் அரை கிலோ 1.45, பாகற்காய் அரை கிலோ 1.80, பீட்ரூட் அரை கிலோ 1.35, மொத்தம் எவ்வளவு ஆகிறதென்று பார்...'' என்றாள்.

அவள் சொல்லச் சொல்ல கால்குலேட்டரை அழுத்திக் கூட்டிக்கொண்டு வந்தான். அவனுக்கு ஒரே குழப்ப

யானையும் தந்தமும்



ஆப்பிரிக்க யானைகளில் ஆண், பெண் இரண்டுக்குமே நீளமான தந்தம் உண்டு.

ஆசிய யானைகளில் ஆண் யானைக்கு மட்டுமே நீளமான தந்தம் இருக்கும். பெண் யானைக்கு மிகச் சிறியதாயிருக்கும்.

இலங்கையில் ஆண், பெண் இரண்டுக்குமே அநேகமாகத் தந்தம் இருக்காது. அப்படி இருந்தாலும் மிகச் சிறியதாக இருக்கும்.

மாக இருந்தது. பாகற்காய் விலையை விட்டு விட்டான். கூட்டலுக்குப் பதிலாக ஒரு முறை பெருக்கல் குறியை அழுத்தினான்.''

''அம்மா, 36 ரூபாய் ஆகிறது'' என்றான்.

''என்னடா நீ படிக்கற லட்சணம்! கணக்குப் போடுகிற லட்சணம்! இதில் கால்குலேட்டர் வேறு...'' என்றாள் ருக்மிணி.

முனியம்மா அதற்குள் மனக்கணக்காகப் போட்டு, ''ஒன்பது ரூபாய் முப்பத்தைந்து பைசா கொடுங்கள், அம்மா'' என்றாள்.

மனோகரின் தன்மானம் விடவில்லை. ஒரு தாளை எடுத்துப் பேனாவால் எழுதிக் கூட்டினான். அப்போதும் சரியாக வரவில்லை.

''அம்மா, பத்து ரூபாய்... ஐம்பத்தைந்து பைசா வருகிறது...'' என்றான்

''தம்பீ... 1 ரூபாய் 20 காசு அதிகமாகச் சொல்கிறாய். அம்மா... நீங்கள் காய்க்கு உரிய தொகையைக் கொடுத்தால் போதும்... அதிக காசு எனக்கு வேண்டாம்...''

''முனியம்மா கணக்குப் பார்த்துச் சொல்வதில் தவற மாட்டாள்'' என்று சொன்ன ருக்மணி,

''நீ பள்ளியில் எதுவரை படித்தாய் முனியம்மா?'' என்று கேட்டாள்.

''நான் மழைக்குக்கூட பள்ளிக்கூடத்திலே ஒதுங்கினது இல்லேம்மா. எல்லாம் பழக்கம்தான். எவ்வளவு பெரிய கணக்குக் கொடுத்தாலும் மனசாலேயே போட்டுச் சொல்வேன்'' என்றாள்.

அந்த நேரத்தில் பால்கார சுப்பிரமணியன் வந்தார்.

''அம்மா கணக்குப் பார்த்து வைத்திருக்கிறீர்களா?''

''இல்லையப்பா... அதனாலென்ன? இந்த மாதம் வாங்கிய பால் கணக்கு இருக்கிறது. எத்தனை லிட்டர் என்று பார்த்து அதற்குரிய தொகையையும் ஒரு நொடியில் முனியம்மா சொல்லிவிடுவாள்'' என்று சொல்லி பால் கணக்கை முனியம்மாவிடம் கொடுத்தாள் ருக்மிணி. அடுத்த இரண்டு நிமிடத்தில் ரூ. 165.50 பைசா என்று சொல்லிவிட்டாள் முனியம்மா.

''சரியாகச் சொல்லி விட்டாயே... நான் கணக்குப் போட்டு வைத்திருக்கும் தொகையும் அதுதான்'' என்று மகிழ்ச்சியோடு தெரிவித்தார் சுப்பிரமணியம்.

காணமற் போன E





ஒருமுறை குழந்தைகளுக்காக எழுதும் எழுத்தாளர்கள் வேடந்தாங்கலுக்குப் பயணம் சென்றார்கள். வழியிலுள்ள சிங்கப்பெருமாள் கோயில் என்ற ஊரிலிருந்த ஒரு ஹோட்டலின் முன்னால், காப்பி சாப்பிடுவதற்காகக் காரை நிறுத்தச் சொல்லி இறங்கினார்கள். அந்த ஹோட்டலின் பெயர்ப் பலகையில் Coffe Hotel என்று தவறாக எழுதப்பட்டிருந்தது. Coffee என்ற சொல்லில் இருக்க வேண்டிய இரண்டு E–க்களுக்குப் பதில் ஒரே ஒரு E–தான் இருந்ததைக் கண்ட கவிஞர் நாகமுத்தையா சொன்னார்: இந்தப் பலகையில் காணமற்போன ஈ, நாம் சாப்பிடப் போகும் காப்பியில் கிடந்தாலும் கிடக்கும்''

பால்காரருக்குப் பணத்தைக் கொடுத்து அனுப்பினாள் ருக்மிணி.

முனியம்மாவிடமும் காய்கறிக் குரிய பணத்தைக் கொடுத்தாள்.

'நான் போயிட்டு வர்றேம்மா'' என்றாள் அவள்.

அவளுக்கு உதவியாகக் கைகொடுத்துக் காய்கறிக் கூடையைத் தூக்கிவிட்டாள் ருக்மிணி.


முனியம்மாவின் மனக்கணக்கு அறிவைக் கண்டு வியந்து, தன் அறியாமையை உணர்ந்து, கர்வத்தை விட்ட மனேகர், தன் அம்மாவினுடைய உதவி செய்யும் பண்பையும் கவனித்தான்.

''மிகவும் படித்தவளாகவும், ஒரு செல்வந்தருடைய மனைவியாகவும் உள்ள என் அம்மாவைவிட நான் எந்த விதத்தில் உயர்ந்தவன்? எனக்கு ஏன் இந்த அகந்தை? வறட்டு கௌரவம்?'' என்று அவன் தன்னையே கேட்டுக் கொண்டான்.

அந்த நிமிடமே அவனுடைய உள்ளத்தில் புத்துணர்ச்சி பிறந்துவிட்டது. தன் வறட்டு கௌரவத்தை அகற்றி விட்டுப் படிக்கத் தொடங்கிவிட்டான். அது மட்டுமல்ல... மற்றவர்களை ஏளனமாக நினைப்பதையும் அப்போதே விட்டுவிட்டான்.

காய்கறிக்குத் தரவேண்டிய தொகையும், பாலுக்குத் தரவேண்டிய தொகையும் ருக்மிணிக்குத் தெரியும். மனேகரின் கர்வத்தை அகற்றவே அவள் முனியம்மாவைக் கணக்குப் போடச் சொன்னாள்.

அவனிடம் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டு ருக்மிணி மகிழ்ச்சியில் திளைத்தாள்.



கோட்டிலே மைனா-





திருப்பிய முள்

மிகவும் கஞ்சனான ஒரு முதலாளி வேலைக்காரர்களிடம் மணிக் கணக்குப் படி வேலை வாங்குவது வழக்கம்.

வேலைக்காரர்கள் எப்பொழுது வந்தாலும் உடனே நேரம் குறித்து வைப்பார்.

ஒருமணி நேரமானதும் கூலியைக் கொடுத்து அனுப்பி விடுவார்.

இப்படியே இருக்கையில்...

வேலைக்காரன் ஒருவனுக்கு, தான் ஒரு மணி நேரத்திற்கு மேலேயே வேலை செய்ததாகத் தோன்றியது.

அதுவும் உண்மைதான்.

முதலாளி வேலையாள் வந்தவுடன், 'எட்டுமணி' என்பார். பிறகு கடிகாரத்தில் முள்ளைத் திருப்பி, '7 மணி'யில் வைத்து விடுவார். 9 மணி ஆனதும் வேலையாளைப் போகச் சொல்லிவிடுவார்.

ஏழையானதாலும், வேறு வழியில்லாததாலும் வேலையாளால் இந்த அநியாயத்தைத் தட்டிக் கேட்க முடியவில்லை.

ஒருநாள்,

முதலாளி உடல் நலமில்லாமல் படுத்து விட்டார். டாக்டர்கள் கைவிட்டு விட்டார்கள்.

எமன் வந்து பாசக் கயிற்றை வீசப் போனான். அப்போது அந்த முதலாளி ''நான் எனது ஆயுளை பிரபல ஜோசியர் ஒருவர் மூலம் தெரிந்து வைத்திருக்கிறேன். நான் நூறு வயது வரை இந்த உலகிலே வாழ்வேன், எனது நூறுவது வயதில்தான் நான் எமலோகம் வருவேன். இப்பொழுது எனக்கு வயது ஐம்பதுதான். நான் வர மாட்டேன், நீ போகலாம்'' என்றார்.

எமன் சிரித்தான்; சொன்னான்:

''அது சரிதான்! ஆனால், உனது ஒன்றுவது வயதிலே உனது ஆயுளாகிய கடிகாரத்தில், நான் 51 என்று முள்ளைத் திருப்பி வைத்துவிட்டேன். ஆகையால், இப்பொழுது உனது வயது நூறு'' என்று கூறிக் கொண்டே எமன் பாசக் கயிற்றை முதலாளி மேல் வீசிப் பிடித்தான்.

பாவம் முதலாளி!

—ஆர். சிதம்பரம் (2505), திருச்சி—17





அவன் வைத்த வெடி

விடுவிடுவென்று இங்கும், அங்குமாக ஓடிக் கொண்டிருந்தான் ராஜேஷ். விடிந்தால் தீபாவளி. எப்பொழுது விடியும், புதுக்கால் சட்டை, மேல் சட்டை போட்டு, வெடிகளை 'டாம்... டும்' என்று போடுவோம்'' என்று இருந்தது அவனுக்கு. எல்லாவற்றையும்விட முக்கியமான மகிழ்ச்சி ஒன்று அவன் மனத்தில் தோன்றியது. அது இதோ...

ராஜேஷிற்குப் பாபுவைக் கண்டாலே பிடிக்காது. அவனும், இவனும் சரியான எதிரி. ஏதோ ஒரு காரணத்தால் இருவரும் சண்டைபிடித்துக் கொண்டார்கள். 'நாளைக்குத் தீபாவளியாதலால் எப்படியாவது பாபுவிற்குத் தெரியாமல் அவன் பின்னால் சென்று, வெடி வைத்து அவன் கைகால்களில், ஏதாவது காயம்படும்படி செய்யவேண்டும். உடனே அவன் அழுவான்; நான் சிரிப்பேன்.' இதுதான் ராஜேஷ் மனத்தில் தோன்றிய மகிழ்ச்சி.

ராஜேஷ் குளித்து முடித்து, புது உடைகளை அணிந்துகொண்டான். முதல்நாள் அவன் நினைத்ததை முடிக்கத் தீர்மானித்தான். சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு யானை வெடி ஒன்றையும் ஊதுவர்த்தியையும் எடுத்துக் கொண்டு வெளியே வந்தான். அவன் நினைத்தது வீண் போகவில்லை. பாபுவும், அவன் தங்கை மீனுவும் ஒரு கட்டைச் சுவர் ஓரமாக உட்கார்ந்து கொண்டு அவரவர்களுடைய வெடியைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

யாரும் பார்க்காத போது ராஜேஷ் மெதுவாக அவர்களின் பின்னால் சென்று பதுங்கினான். நடுவில் சுவர் ஒன்று இருந்தது. அந்தப் பக்கம் பாபுவும் அவன் தங்கையும். இந்தப் பக்கம் ராஜேஷ். மெதுவாகச் சுவர் பிரியும் இடத்தில் சென்று வெடியை வைத்தான்.

தீயைத் திரியில் பற்ற வைத்தான். அது வெடிப்பதற்கு இன்னும் சிறிது நேரம் செல்லும். தீ வைத்துவிட்டு ஓடிவந்தான். அவன் ஓடும்போது எங்கோ யாரோ போட்ட வெடிச் சத்தத்தில் மிரண்டு ஓடி ராஜேஷை நோக்கி வந்தது ஒரு காளைமாடு! முன்னால் மாடு வருவதைப் பார்த்து அரண்டு போன ராஜேஷ், பின்னுக்கி ஓடினான். அங்கேதான் அவன் வெடி வைத்திருக்கிறான் என்பது அவனுக்கு அந்த ஒரு கணத்தில் தெரியவில்லை. பின்னுக்கி ஓடியவன், கல் தடுக்கி வெடி இருக்கும் சுவர் ஓரமாக வந்து விழுந்தான். இவ்வளவு நேரமும் திரியில் இருந்த தீ, இப்பொழுது வெடிக்குள் சென்று 'டமார்' என்ற பேரோசையுடன் வெடிக்கத் தொடங்கியது. பாபு இருந்த பக்கத்திலே விழுந்து அது வெடிக்கவில்லை; ரஜேஷ் விழுந்த பக்கமே அது விழுந்து வெடித்தது! அவன் கை அடுத்த கணமே மரமரத்துப் பொசுங்கிப் போயிற்று. ஒரு மாதம் ஆயிற்று அவன் குணமடைய!

—ஆ. மோகன் (3520) அமராவதி புதூர்.

பறந்து சென்ற காண்டாமிருகம்!

இந்தியாவில் அஸ்ஸாம் மாகாணத்தில் மரங்கள் அடர்ந்த காடு ஒன்று இருந்தது. அங்கே பல பறவைகளும் மிருகங்களும் வசித்து வந்தன. அந்தக் கானகத்தில் ஒரு சிறிய காண்டாமிருகம் வசித்து வந்தது. அது ஒரு பட்டாம் பூச்சியைக் கண்டது. ''அடடா! பட்டாம்பூச்சிக்கு இறக்கை இருப்பதால் எவ்வளவு நன்றாகப் பறக்கிறது! எனக்கு இறக்கை இல்லையே! இருந்தால் ஜோராகப் பறக்கலாமே!'' என்று அது கண்ணீர் வடித்தது. அது கண்ணீர் வடித்துக் கொண்டிருப்டதைப் பார்த்த சிட்டுக்குருவி அதனிடம் சென்று, ''நண்பா, நீ ஏன் இப்படிக் கண்ணீர் வடிக்கிறாய்?'' என்று கேட்டது. காண்டாமிருகம் தன் கவலையைக் கூறியது.

சிட்டுக்குருவி சிறிது நேரம் யோசனை செய்தது. பிறகு, சிட்டுக் குருவி முக மலர்ச்சியுடன், ''நண்பா, எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. இங்கி

ருந்து கிழக்கே நூறு காத தூரம் சென்றால், ஒரு தேவதையின் கோவில் வரும். அந்தக் கோவிலுக்குச் சென்று அங்கிருக்கும் தேவதையிடம் உன் குறையைச் சொல்லி, 'எனக்கு இரண்டு இறக்கைகள் வேண்டும்' என்று பிரார்த்தனை செய்'' என்று கூறியது.

காண்டாமிருகமும் சிட்டுக்குருவி சொன்னபடியே தேவதையின் கோயிலுக்குச் சென்று பிரார்த்தனை செய்தது. மறுநாள் காலையில் அது கண் விழித்துப் பார்த்தபொழுது அதற்கு இரண்டு இறக்கைகள் முளைத்திருப்பதைக் கண்டது! அது அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. உடனே, அது 'சொய்ங்' என்று பறந்து மேலே சென்றது. ஒரு மரத்தில் போய் உட்கார்ந்தது. உடனே, அந்தப் பெரிய காண்டாமிருகம் உட்கார்ந்த மரத்தின் கிளை, பளு தாங்காமல் கீழே விழுந்து விட்டது. அந்த மரத்தில் உட்கார்ந்திருந்த பறவைகள் கோபம்கொண்டு காண்டாமிருகத்தைக் கொத்தி விரட்டின.

காண்டாமிருகம் அங்கிருந்து பறந்து போய் ஒரு மேட்டின் மேல் உட்கார்ந்தது. அது உட்கார்ந்த இடமோ ஓர் எறும்புப் புற்று. தங்களை நசுக்குவதைக் கண்ட எறும்புகள் எல்லாம் ஒன்று சேர்ந்து காண்டாமிருகத்தை நன்றாகக் கடித்தன. எறும்புகளுக்குப் பயந்து காண்டாமிருகம் உயரே பறந்தது.

அது மேலிருந்தபடியே கீழே எங்கே யாவது தண்ணீர் கிடைக்குமா என்று பார்த்தது. அது எதிர்பார்த்தபடியே கீழே ஓர் ஆறு ஓடுவது தெரிந்தது. உடனே அது கீழே இறங்கி வந்தது. அது கீழே இறங்கியதுதான் தாமதம், அந்த ஆற்றிலிருந்து ஒரு முதலை வெளியே வந்தது. அது காண்டா மிருகத்தைக் கடிக்க வாயைப் பிளந்தது. முதலையைப் பார்த்த காண்டா மிருகம் மிகவும் பயந்து விட்டது. மறுபடியும் மேலே பறந்தது. அதன் மனமும் உடலும் மிகவும் சோர்ந்து விட்டன.

அதனால் எங்கும் நிம்மதியாகத் தங்க முடியவில்லை. 'நீரில் போனாலும் ஆபத்து வருகிறது. நிலத்தில் இருந்தாலும் ஆபத்து வருகிறது. இதற்கெல்லாம் காரணம் புதியதாக வந்த இந்த இறக்கைதானே! இது நமக்கு வேண்டவே வேண்டாம்' என்று எண்ணியது. அது மீண்டும் தேவதையிடம் சென்றது.

''எனக்கு இந்த இறக்கையால் மிகவும் துன்பம் வருகிறது. நான் சென்ற இடமெல்லாம் ஆபத்து வருகிறது. எங்குமே நிம்மதியாகத் தங்க முடியவில்லை. துன்பத்தைக் கொடுக்கும் இந்த இறக்கை எனக்கு வேண்டவே வேண்டாம். என்னைப் பழைய நிலைக்கே மாற்றிவிடுங்கள்'' என்று மனம் உருகி வேண்டிக் கொண்டது.



அதன் பிரார்த்தனை பலித்தது! அது வேண்டிக்கொண்டபடியே இறக்கையும் மறைந்தது!

—எஸ். சீதா லட்சுமி (736) திருச்சி—2.

காரணம் என்ன?

இராமுவும், சோமுவும் இணை பிரியாத நண்பர்கள். இராமு தெய்வ பக்தி உடையவன். ஆனால், சோமு தெய்வ பக்தியைப் பற்றிக் கிண்டல் செய்பவன்.

அன்று அவர்கள் சினிமா பார்க்கச் சென்றனர். வழியில், ஒரு கோயில் குறுக்கிட்டது. இராமுவிற்குக் கோயில் உள்ளே சென்று சாமியைத் தரிசிக்க வேண்டும் என்று ஆசை. ஆனால், சோமு கோயிலுக்குள் வரச் சம்மதிக்க வில்லை.



இராமு மட்டும் கோயிலுக்குள் சென்று சாமியைத் தரிசித்து விட்டு, கோயிலை மூன்று முறை வலம் வந்து கொண்டு இருந்தான்.

சோமு கோயிலின் வெளியே நின்று காத்துக் கொண்டிருந்தான். அவனது காலின் கட்டை விரல் தரையைக் கிளறிக் கொண்டு இருந்தது. அப்போது, தரையில் கிடந்த எட்டணா அவன் காலில் தட்டுப்பட்டது. எடுத்துக் கையில் வைத்திருந்தான்.

இராமு வலம் வரும்போது, அங்கிருந்த ஒரு கல் அவன் காலில் இடித்து இரத்தம் வந்தது.

''கோயிலை வலம் வந்தவனுக்குக் காலில் காயம்!''

''தெய்வத்தை மதிக்காதவனுக்குக் கையில் காசு!''

''இதன் மகிமையைப் பார்த்தாயா? இதில் இருந்து நீ என்ன நினைக்கிறாய்?'' என்று என் தகப்பனார் என்னைப் பார்த்துக் கேட்டார். நான் சற்று விழித்தேன், உங்களைப் போன்று.

என் தகப்பனாரே விடையும் கூறினார்:

''அன்று இராமுவிற்கு ஒரு பெரிய கண்டம் இருந்தது. அதுவும் உயிர் போகும் அளவிற்கு. அவனது தெய்வ பக்திதான் அவனைச் சிறு காயத்துடன் விட்டது. ஆனால், சோமுவிற்கு அன்று பெரிய அதிர்ஷ்டம் கிடைக்க வேண்டிய நாள். புதையல் கிடைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவன் தெய்வத்தை வணங்காததனால், புதையலுக்குப் பதிலாக ஓர் எட்டணா நாணயம்தான் கிடைத்தது'' என்று விளக்கிக் கூறினார் என் தகப்பனார்.

—ஏ. குமரவேல், (812), பாலூர்.



ஏன் சிரித்தாள்?

புகழ் பெற்ற பாரசீக அரசர்களில் ஒருவர் சலீம் முஸ்தபா என்பவராவார். அவரது அரண்மனை செல்வச் செழிப்பு மிக்கது. அவர் மிகவும் ஆடம்பரமான வாழ்க்கை நடத்தினார்.

ஒருநாள் அரசரின் படுக்கை அறைக்குள் அரண்மனையில் வேலை பார்க்கும் பெண் ஒருத்தி ஏதோ வேலையாகச் சென்றாள். அறைக்குள் சிங்காரமான கட்டில்; அதில் பட்டு மெத்தை; மெத்தைக்கு மேலே 'கமகம' என்று மணம் வீசும் மலர்கள். இவற்றைக் கண்டதும் அவள் படுக்கையைத் தொட்டுப் பார்த்தாள். மென்மையாக இருந்தது. 'இந்த அறையில் என்னைத் தவிர யாருமில்லை' என்ற தைரியத்தில் படுக்கையில் உட்கார்ந்தாள். பிறகு அதில் படுத்துப் பார்த்தாள். அவளையும் அறியாமல் தூங்கி விட்டாள்.

சற்று நேரத்தில் அரசர் அறைக்குள் நுழைந்தார். தம் படுக்கையில் பணிப்பெண்ணைக் கண்டு மிகுந்த கோபம் கொண்டார். உடனே அவர் சேவகரை அழைத்து அவளை எழுப்பச் சொன்னார். தமது படுக்கையில் படுத்ததற்காக அவளுக்கு இருபத்து ஐந்து சவுக்கடிகள் தருமாறு ஆணையிட்டார்.

மறுநாள் காலை!

அரசர் முன்னிலையில் பணிப்பெண்ணுக்குத் தண்டனை வழங்கப்பட்டது. சவுக்குச் சுழன்று 'சுரீர் சுரீர்' என்று பணிப்பெண்ணின் உடலைத் தாக்கியது. ஆனால், அழுது புலம்ப வேண்டிய அவள் 'கலகல' வென்று சிரித்துக் கொண்டு இருந்தாள்.

அதைக் கண்ட அரசர் வியப்படைந்து, ''பெண்ணே, சவுக்கடிகள் உன் உடலை வருத்தும்போது அழுவதற்குப் பதில் ஏன் சிரிக்கிறாய்?'' என்று கேட்டார்.

''அரசே, மலர்ப் படுக்கையில் சில நிமிடம் படுத்ததற்கே எனக்கு இந்தத் தண்டனை கிடைக்கிறதே! தினமும் பல மணி நேரம் அதே படுக்கையில் உறங்கும் உங்களுக்கு என்ன தண்டனை கிடைக்கும் என்று எண்ணிப் பார்த்தேன். சிரிப்பு வந்து விட்டது'' என்றாள் பணிப்பெண்.

அதைக் கேட்ட அரசன் வெட்கித் தலைகுனிந்தான். சவுக்கடியை நிறுத்தச் சொல்லி உத்தரவிட்டான்.

—அ. கலைச்செல்வன் (2462), திண்டுக்கல்.

கொடுத்த கை!

கடும் வெயில்!

அந்தப் பிச்சைக்காரன் தன் தகரக் குவளையில் இருந்த சில்லறையைச் சத்தப்படுத்தியபடி ''ஐயா, தனவானே, தருமம் போடுங்கள்'' என்று

கெஞ்சியபடி பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான்!

காரில் வந்திறங்கிய தனவந்தர் ஒருவர், ஒரு முழு ரூபாயை அவன் குவளையில் போட்டார். பிச்சைக்காரன் கண்கள் ஆச்சரியத்தால் மலர்ந்தன.

அடுத்த நாள்!

அதே தனவந்தர்,

அதே பிச்சைக்காரன் குவளையில் ஒரு முழு ரூபாய் நாணயத்தைப் போட்டார். பிச்சைக்காரன் அவரைக் கைகூப்பி வணங்கினான்.

அதற்கும் அடுத்த நாள்!

அதே தனவந்தர்.

அதே பிச்சைக்காரன் அவரை நோக்கி ஓடினான். குவளையை அவர் முன் நீட்டினான். அவர் வழக்கம் போல் ஒரு ரூபாய் நாணயத்தைக் குவளையில் போட்டார். பிச்சைக்காரன் அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினான்.

நான்காவது நாள்!

அதே தனவந்தர் வந்தார். பிச்சைக்காரன் குவளையை நீட்டியபடி ஓடினான்.

அவர் அவனை இலட்சியம் செய்யாது நடந்தார்.

''ஐயா, தருமவானே! ஒரு ரூபாய் பிச்சை போடுங்க'' என்று அவர் பின்னால் ஓடினான்.

அவர் திரும்பிப் பார்த்தார்.

''ஏய்! உனக்கு நான் முதல் நாள் பிச்சை போட்டேன். என் முகத்தையோ, கண்களையோ உற்றுப் பார்த்தாயா? பார்க்கவில்லை... மூன்றுநாள் முயன்றேன். ஊஹூம்... ஏய்... நானும் வாழ்க்கையில் சின்னவனாக இருந்த போதே அனாதையாக்கப்பட்டவன்தான். ஒருநாள் பிச்சை எடுக்க வேண்டிய நிலை வந்த போது, என் மனம் எவ்வளவு சங்கடப்பட்டது தெரியுமா? அப்படித் தவிர்க்க முடியாத போது முதல் தடவையாகக் கை ஏந்தினேன். அந்தக் கையில் ஒரு காலணா விழுந்தது. அந்தக் காலணாவைப் போட்டவரைப் பார்த்தேன். அவர் கண்களில் கருணை இருந்தது. அவர் முகத்தில் பெருந்தன்மை தெரிந்தது. மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, ''ஐயா... நான் பிச்சை எடுப்பவனல்ல... என் பசியின் கொடுமை... வேறு வழியில்லாமல் கைநீட்டி விட்டேன்... இந்தக் காலணாவுக்கு நான் உங்களுக்கு உழைக்கத் தயார்... ஏதாவது வேலை கொடுங்கள். மானமாகப் பிழைப்பேன்'' என்றேன்!



''காலணா கொடுத்த கை என் வாழ்க்கையில் முன்னேற' உதவியது. அன்று அவர் காட்டிய வழி... இன்று நான் பெரும் பணக்காரன்.!

''உனக்கு ஒரு ரூபாய் நாணயம் போட்டால், நான் ஏழைக்கு உதவ நினைக்கிறேன் என்பதை உணர்ந்து, நீ என்னிடம் வேலை கேட்பாய் என்று நினைத்தேன். நீயோ பிச்சை எடுப்பதையே இலட்சியமாக்கிக் கொண்டு விட்டாய்! உன்னை இனி திருத்தவே முடியாது! போ! பிச்சை எடு! இந்தா ஒரு பத்துப் பைசா!'' என்றவர் பத்துப் பைசாவைக் குவளையில் போட்டுவிட்டு வேகமாக நடந்தார்!

அவர் மனம் மட்டும். 'சே... இவ்வளவு சொல்லியும், இப்போதுகூட அவன் நான் மானமாக வாழ விரும்புகிறேன்... எனக்கு வேலை தா என்று கேட்கவில்லையே!' என்று வருந்தியது.

பிச்சைக்காரன், 'தருமதுரையே, தருமம் போடுங்கள்' என்று பிச்சை எடுப்பதே இலட்சியமாக இருந்தான்.

—ந. குமார் (2197), கல்யாண்

முட்டாள் ராஜகுமாரி

வெகு காலத்திற்கு முன் ஒரு மன்னர் இருந்தார். அவருக்குப் பதினெட்டு வயதில் ஒரு மகள் இருந்தாள். எதைச் சொன்னாலும் அதை உண்மை என்று அவள் நம்பி விடுவாள்.

ஒருநாள் ஓர் அரசாங்கச் சேவகன் இளவரசிக்கு வெண்ணிலாவைக் காண்பித்து, ''இந்த நிலா இருக்கிறதே, இது வெண்ணெயால் செய்யப்பட்டது'', என்று சொல்லிவிட்டான். அதற்கு, அவள், இது பொய் என்றுதானே கூறியிருக்க வேண்டும்? அதுதான் இல்லை. ''அப்படியா? அதைப் பிடித்துத் தின்றால் நல்ல ருசியாக இருக்குமே!'' என்றாளே பார்க்கலாம். வேலையாள் அசந்து விட்டான்.



இந்த நிகழ்ச்சியை முதலில் இருந்தே கவனித்த அரசர் மிகவும் கவலைப்பட்டார் தனக்குப் பிறகு தன்ஒரே மகளான அவள்தான் பட்டத்திற்கு வர வேண்டும். 'உண்மை எது பொய் எது என்று அறிந்து கொள்ள முடியாத இவளால் எப்படி நாட்டை ஆள முடியும்?' என்பதுதான் அவரது கவலை. உடனே அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. ராஜகுமாரியை 'இது பொய்' என்று யார் சொல்ல வைக்கிறார்களோ அவர்களுக்கு அவளைத் திருமணம் செய்து வைப்பதாக நாடு முழுவதும் அறிவிக்கச் சொன்னார்.

அதைக் கேட்டுப் பலரும் மறுநாள் அரண்மனையில் கூடிவிட்டனர். அங்கு உலக மகா புளுகர்களெல்லாம் வந்திருந்தனர். முதலில் ஒரு மீனவப் புளுகன் வந்தான். அவன் சொன்னான். ''நான் ஒருநாள் மீன் பிடிக்கச் சென்றேன். அன்று எனக்குக் கிடைத்த மீனின் நீளம் என்ன தெரியுமா? 10 காத தூரம்!'' என்றான்.

அதற்கு உடனே ராஜகுமாரி, ''அப்படியா! இன்னொரு முறை அது மாதிரி மீன் பிடித்தால், எனக்கும் கொஞ்சம் கொண்டு வந்து காண்பிக்கிறாயா?'' என்றாள். உடனே அவன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு போய் விட்டான்.

அடுத்து இன்னொருவன் வந்தான். அவன் சொன்னான்: ''ராஜகுமாரி, நான் 8 கால்கள் 3 வால்கள் 4 கண்கள் உடைய ஒரு யானையை வைத்திருந்தேன். அதைத் துரதிர்ஷ்டவசமாக மலையளவு உள்ள ஒரு எறும்பு தூக்கிக் கொண்டு போய் விட்டது'' என்று புளுகினான். அதற்கு ராஜகுமாரி, ''பாவம், உனக்கு அந்த யானை திரும்பக் கிடைக்குமோ கிடைக்காதோ! அப்படிக் கிடைத்தால் எனக்குக் கொண்டு வந்து காட்டுவாயா?'' என்று ஆசையாகக் கேட்டாள். அவனும் போய் விட்டான்.

இப்படியே பல நாட்கள் ஓடிவிட்டன. அப்போது பக்கத்து ஊரில் மணிவண்ணன் என்ற ஏழை அறிவாளி வாழ்ந்து வந்தான். அவன் இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டு அரண்மனைக்கு வந்து சேர்ந்தான். அவன் அரசரின் அனுமதி பெற்று ராஜகுமாரியைப் பார்க்கச் சென்றான். அப்போது அவள் அரண்மனைத் தொழுவத்தில் மிகப் பெரிய மாட்டுக் கொட்டகை ஒன்றைக் கட்டுவதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் அவளிடம் போய் நின்றவுடன் அவள், ''இது எவ்வளவு பெரிய மாட்டுக் கொட்டகை என்று பார்த்தாயா?'' என்று கேட்டாள்.

''ப்பூ... இது என்ன மாட்டுக் கொட்டகை! எங்கள் பண்ணையில் ஒரு கொட்டகை இருக்கிறது. அதன் நீளம் எவ்வளவு என்று எங்களுக்கே தெரியாது. அவ்வளவு பெரியமாட்டுக் கொட்டகை!'' என்று சொல்லிவிட்டு, கூடவே இன்னொரு பொய்யையும் புளுகினான். 'ஒரு கன்றுக்குட்டி ஒரு நாள் எங்கள் மாட்டுக் கொட்டகையினுள் புகுந்து இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கத்துக்கு ஓடி வந்தது. அது அந்தப் பக்கமாக வெளிவந்த பொழுது, அது கிழட்டு மாடாகி விட்டது! அவ்வளவு காலமாகியிருக்கிறது கடப்பதற்கு!'' என்று ஓரேயடியாகப் புளுகினான்.

அதைக் கேட்ட ராஜகுமாரி, ''பாவம் அந்தக் கன்றுக் குட்டி நடந்து நடந்து கால் மரத்துப் போயிருக்குமே!'' என்று கூறினாள். முதல் முயற்சியிலே மணிவண்ணனுக்குத் தோல்வி ஏற்பட்டு விட்டது.

அப்பொழுது அவர்கள் ஓர் ஆள் உயரச் செம்மறியாட்டைப்பார்த்தார்கள். உடனே ராஜகுமாரி, ''எவ்வளவு பெரிய ஆடு பார்த்தாயா?'' என்று கூறினாள். உடனே மணிவண்ணன் ''இது என்ன ஆடு? என் பண்ணையில் உள்ள ஒரு பெரிய ஆட்டுக்கு இது ஒரு குட்டியைப் போல் இருக்கிறது'' என்று கூறிவிட்டு, ''அந்த ஆட்டின் உயரம் அதோ அங்கு தெரிகிறதே ஒரு பனைமரம், அதை விட உயரம்! நாங்கள் அந்த ஆட்டைப் பால் கறப்பதென்றால் ஐந்து பேர் இழுத்துப் பிடிக்க, இரண்டு பேர் ஏணியில் ஏறி, மிகப் பெரிய பாத்திரத்தில் பால் கறப்போம்'' என்று புளுகினான். அதற்கு ராஜகுமாரி, '''அவ்வளவு உயர ஆட்டிற்கு எவ்வளவு பலம்

இருக்கும்!. அது பால் கறந்தால் ஒரு கிணறு நிறைய இருக்குமே!'' என்று கூறினாள். மணிவண்ணனின் இரண்டாவது முயற்சியும் தோல்வி அடைந்து விட்டது. ஆனாலும், அவன் தளர்ந்து விடவில்லை.

அப்போது அவர்கள் ஒரு மிகப் பெரிய கோழியைப் பார்த்தார்கள். அப்பொழுது மணிவண்ணன் முந்திக் கொண்டு, ''இது என்ன கோழி! என் பண்ணையில் உள்ள ஒரு கோழிக்கு இது எல்லாம் குஞ்சுகளே ஆகும். அது முட்டையிட்டால் ஒரு முட்டையை நாங்கள் ஒரு வருடத்திற்குப் பயன் படுத்துவோம். இரண்டு முட்டை ஓடு களைச் சேர்த்தால், ஒரு மிகப் பெரிய வீடு ஒன்றைக் கட்டலாம். வீடு இல் லாதவர்களுக்கு முட்டை ஓடுகளைக் கொடுப்போம். ஒருநாள் நான் தற் செயலாக முட்டை ஓடுகளை அடுக்கி விளையாடினேன். அது சூரியன் உயரத் திற்குச் சென்றுவிட்டது. உடனே நான் சூரியனை மிக அருகில் பார்க்கும் ஆவ லுடன் அதன் மீது ஏறி சூரியனுக்குச் சென்று விட்டேன். நான் சூரியனில் கால் வைத்ததும், முட்டை ஓடுகள் சரிந்து விழுந்து விட்டன. நான் பூமிக்குத் திரும்ப வழி தெரியாமல் சூரியனைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பி விட்டேன். ஓர் இடத்தில் மிகப் பெரிய சிலந்தி வலை ஒன்று இருந்தது. நான் சிலந்தி வலையைப் பிரித்துக் கயிறு போல் திரித்தேன். அதன் ஒரு நுனியைச் சூரியனில் கட்டினேன். மறு நுனியைப் பிடித்துக் கொண்டே பூமியை நோக்கிக் குதித்து விட் டேன். நான் பூமிக்கு அருகில் பத்து மைல் தூரம் வந்த பொழுது கயிறு போதவில்லை. உடனே நான் கீழே குதித்து விட்டேன். நான் கீழே வந்த பொழுதுதான் கண்விழித்தேன். கண்ணைத் திறந்து பார்த்தால் நீ நிற்கிறாய்'' என்று பயங்கரமாகப் புளுகினான்.

இதை அவள் நிச்சயம் பொய் என்று கூறுவாள் என்று நினைத் தான். அவள் அதற்கு மாறாக, ''நீங்கள் அவ்வளவு உயரத்திலிருந்து குதித்தும் உங்களுக்கு எதுவும் அடிபட வில்லையே! நல்ல வேளை!'' என்று கூறி னாளே பார்க்கலாம்.

மணிவண்ணனுக்கு எரிச்சல் வந்து விட்டது. இவளை எப்படியாவது கிண்ட லாவது செய்து விட்டுப் போகவேண்டும் என்று நினைத்துக் கொண்டு, ''ராஜ குமாரி, நான் நேற்று என் கொட்டகை யில் ஒரு காட்சியைக் கண்டேன். அது என்னவென்றால், உங்க ளுடைய அப்பாவும் எங்களுடைய அரசரும் ஆன மன்னர், ஒரு நாட்டு ராஜகுமாரன் கால்களில் விழுந்து கெஞ்சிக் கொண்டு இருந்தார். ''என் மகளை நீதான் திருமணம் செய்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்து கொண்டால் என் நாட்டையே தந்து விடுகிறேன்'' என்று கெஞ்சினார். அதற்கு ராஜகுமாரன், ''நீங்கள் இந்த உலகத்தையே தருவதாக இருந்தாலும் நான் உங்கள் மகளைத் திருமணம் செய்து கொள்ள மாட்டேன்'' என்று கூறினான்.

இப்படி மணிவண்ணன் கூறியதும் ராஜகுமாரி கத்தினாள்: ''இது பொய்'' என்று உரக்கக் கூவிவிட்டுத் தன் அப்பா விடம் போய், ''அப்பா, இவன் மிகப் பெரிய புளுகன். இவனைச் சிறையில் அடையுங்கள்!' என்று கூறினாள். அதைக் கேட்ட மணிவண்ணன் சிரித் தான். அரசர் மகிழ்ந்தார். தன் மக ளுக்குப் 'பொய் எது? உண்மை எது?' என்று தெரிந்து விட்டது என்ற மகிழ்ச்சியில் குதித்தார். சொன்னபடி மணிவண்ணனுக்குத் தம் மகளைத் திருமணம் செய்து கொடுத்தார். அவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர்.

—பி. சத்யன் (127), கரூர்.



எனக்கு வேண்டியது?

தெருவில் ஒருவர் மயக்கம்போட்டு விழுந்துவிட்டார். கூட்டம் கூடியது. "தண்ணீர் கொண்டு வந்து கொடுங்கள்" என்றார் ஒருவர். "சோடா கொடுங்கள்" என்றார் இன்னொருவர். "எனக்கு அதெல்லாம் வேண்டாம். நல்லா ஐஸ் போட்ட கூல்டிரிங்ஸ் வேணும்" என்றார் மயக்கம் போட்டுக் கிடந்தவர்! -ஜி. ஆர். ஹரி ஆனந்

கேள்வி இங்கே, பதில் எங்கே?


38. மகாகவி பாரதியாரால் பாடப் பெற்ற ஓவியர் யார்?
39. இலங்கைக்கு 'சிலோன்' என்ற பெயர் எப்படி வந்தது?
40. ஈராக் நாட்டின் பழைய பெயர் தெரியுமா?
41. Who என்றால் என்ன?
42. வீரபாண்டிய கட்டபொம்மனின் தம்பியை ஏன் 'ஊமைத்துரை' என்று அழைத்தார்கள்? அவரது இயற்பெயர் என்ன?
43. 'ஐம்படைத் தாலி' என்று கேள்விப் பட்டிருக்கிறீர்களா? இந்தத் தாலியை யாருக்கு அணிவிப் பார்கள்?
44. நம் பிரதமர் இந்திரா காந்தியின் கூடப் பிறந்தவர் யார், யார்?



45. இதோ இப்படத்தில் சிறியவராயிருக்கும் பெரிய மனிதர் யார்?
46. ஒலிம்பிக் பந்தயம் இந்த ஆண்டு எங்கே, எப்போது நடைபெற விருக்கிறது?
47. இராமாயணத்தில் வரும் ஊர்மிளை யாருடைய மனைவி?
48. 'ஒயிற்கும்மி' என்றால் என்ன?
49. கர்நாடக மாநிலத்தில் மரப் பொம்மைகள் தயாரிப்பதில் புகழ் பெற்று விளங்குகிறது ஒரு பட்டணம். பெயர் தெரியுமா?
50. 'எஸ்கிமோ மொழி' பேசுகிறவர்கள் சுமார் எத்தனை பேர் இருப்பார்கள்?
51. புகைப்படம் என்றதும் 'கோடக் கம்பெனி' நினைவுக்கு வரும். உலகின் பல பாகங்களிலும் கிளைகளுள்ள அந்தக் கம்பெனியைத் துவக்கியவர் யார்?
52. நம் தமிழ்நாட்டு விஞ்ஞானி ஜி. டி. நாயுடுவின் முழுப்பெயர் தெரியுமா? அவர் பிறந்த ஊர் எது?
53. குளிர் சாதனப் பெட்டி (Refrigerator) யைக் கண்டுபிடித்தவர் யார்? எப்போது?
54. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் சமீபத்தில் 'இராஜராஜன் விருது' வழங்கி, ஒரு லட்ச ரூபாய் பரிசும் வழங்கியது. யாருக்கு? எதற்காக?

பதில் இங்கே

38. ஓவியர் ரவிவர்மா.
39. போர்ச்சுகீசியர்கள் 'சிங்களம்' என்பதை 'சைலோன்' என்று அழைத்தார்கள். அதுவே சிலோனாகி விட்டது.
40. மெசப்பொட்டேமியா.
41. world Health Organization (உலக ஆரோக்கிய நிறுவனம்) என்பதன் சுருக்கம்.
42. நாக் குழறிக் குழறிப் பேசியதால் 'ஊமைத் துரை' என்று அழைத்தனர். அவரது இயற்பெயர்: தளவாய்க் குமாரசுவாமி.
43. முற்காலத்தில் குழந்தைகளுக்கு அணிவிப்பது இந்தக் தாலி. காத்தல் கடவுளாகிய திருமாலின் சங்கு, சக்கரம், கதை, வாள், வில் ஆகிய ஐந்தும் அந்தத் தாலியில் இருக்கும்.
44. ஒரே ஒரு தம்பிதான். ஆனல், அந்தத் தம்பி பிறந்த சில நாட்களிலே இறந்து விட்டான்.
45. ரவீந்திர நாதாகூர்
46. அமெரிக்காவிலுள்ள லாஸ் ஏஞ்ஜெல்ஸ் நகரில் வருகிற ஜூன் மாதம் நடைபெறவிருக்கிறது.
47. இலக்குமணரின் மனைவி.
48. கும்மி என்பது பெண்கள் ஆடுவது; ஒயிற்கும்மி ஆண்கள் ஆடுவது. கையில் கைக்குட்டையை வைத்துக்கொண்டு பழைய கதை அல்லது வரலாற்றை இசையோடு பாடி ஆடுவார்கள்.
49. சென்னபட்டணம்
50. சுமார் 7200
51. ஜார்ஜ் ஈஸ்ட்மென் என்ற அமெரிக்கர்.
52. கோபால் துரைசாமி நாயுடு; கலங்கல் என்ற சிறிய ஊர்.
53. ஜாகோப் பெர்க்கின்ஸ் என்ற பிரிட்டிஷ்காரர், 1834.
54. கவியோகி சுத்தானந்த பாரதியாருக்கு அவர் எழுதிய 'பாரத சக்தி மகாகாவியம்' என்ற நூலுக்காக.



அந்த ஊருக்கு அமைச்சர் ஒருவர் வருவதாக இருந்ததால் அவரை வரவேற்க அழகாக மேடை அமைத்து, வண்ண வண்ண விளக்குகள் போட்டு, ஒலிபெருக்கி வைத்து, இசைத் தட்டுக்களை ஒலிபெருக்கிக் கொண்டிருந்தார்கள்.

''இதோ சிறிது நேரத்தில் அமைச்சர் வந்து விடுவார். அமைதியாக இருங்கள்'' என்று மைக்கில் அறிவித்துக் கொண்டிருந்தார்கள், கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர்கள்.

அப்பொழுது, மேடையில் தொங்கிக் கொண்டிருந்த ஆயிரம் வாட்ஸ் பல்பு ஒன்று மைக்கைப் பார்த்து, ''என்ன மைக் தோழரே, அனாதையாக நிற்கிறீரே! பார்த்தீரா, நான் இல்லாவிட்டால் இந்த மேடை இருக்கும் இடமே தெரியாது!'' என்று கர்வமாகக் கூறியது.

''நீ இருந்தாலும் இல்லாவிட்டாலும் இங்கு எனக்குத்தான் மதிப்பு. நான் இங்கு நிற்பதால்தான் இங்கு அமைச்சர் வரப் போகிறார் என்று எல்லோருக்கும் தெரிகிறது'' என்றது மைக்.

''யார் சொன்னார்கள் அப்படி? நானும் எனது சக தோழர்களும் வழிநெடுக ஒளி வீசி அழகு படுத்தாவிட்டால், யாராவது இங்கு கூடுவார்களா?''

''நீ அலங்காரமாகத் தொங்கிக் கொண்டிருக்கத்தான் லாயக்கு. நானும் எனது தோழர்களும் அவ்வப்பொழுது அமைச்சர் வருகையை அறிவித்துக் கொண்டிருக்காவிட்டால் கூட்டம் ஏது?''

''அதெல்லாம் வெறும் வார்த்தை. மேடையில் அமைச்சர் வந்ததும் என்னுடைய ஒளிதான் அவர் மீது விழும். நான் ஒளிவீசாவிட்டால் அவர் இருக்கும் இடமே தெரியாது.''

''சும்மா அலட்டிக் கொள்ளாதே! அமைச்சர் உன்னை ஒன்றும் தொட்டுப் பேச மாட்டார். என்னைத்தான் ஒரு கையால் பிடித்துக் கொண்டு ஸ்டைலாகப் பேசப் போகிறார்''.

''உம், அந்த அலங்காரப் பேச்செல்லாம் வேண்டாம். அமைச்சர் வரும் சமயம் பார்த்து, நான் ஒளி வீசா விட்டால் என்ன ஆகும் தெரியுமா?''

''நீ ஒளி வீசினாலும் வீசாவிட்டாலும் அவர் பேச ஆரம்பிக்கும் பொழுது, நான் சும்மா செயல்படாமல் இருந்தால் என்ன ஆகும் தெரியுமா? கூட்டத்தில் குழப்பம்தான் ஏற்படும்.''

இப்படி பல்பும் மைக்கும் சண்டை போட்டுக் கொண்டிருக்கையில் 'டக்' என்று இரண்டுக்கும் மூச்சு நின்று விட்டது.

ஐந்து நிமிடங் கழித்து மீண்டும் உயிர் வந்தபின், இரண்டும் ஒன்றை ஒன்று பார்த்து விழித்துக்கொண்டன. அப்பொழுது ஒரு குரல் கேட்டது. ''என்ன, பல்பும் மைக்கும் சண்டை போட்டு ஓய்ந்தாகி விட்டதா? நான் ஒருவன் இங்கிருப்பதை மறந்து விட்டீர்களா? உங்களுக்குள் போட்டியா?'' என்ற குரல் கேட்டு இரண்டும் ஒன்றை ஒன்று பார்த்து மறுபடியும் விழித்தன.

''என்ன, என்னைத் தெரியவில்லையா? நான்தான் உங்கள் உயிர் - மின்சாரம் பேசுகிறேன்!'' என்ற குரல் கேட்டதும் இரண்டின் முகத்திலும் அசடு வழிந்ததுடன் தற்பெருமையும் ஒழிந்தது!




இப்போதே அடிப்பது ?

முரளி: ரிஸல்ட் வரும் முன்பே உன் அப்பா உன் தம்பியை அடிக்கிறாரே ஏன்?

ஸ்ரீதர்: அவர் ஜோசியர் ஆச்சே. ஜோசியத்தில் அவர் ரிஸல்ட்டைத் தெரிஞ்சுக்கிட்டு அடிக்கிறார். அவ்வளவுதான்.


—லலிதா செல்லப்பா

புத்தகத்தை எடுக்க வழி தெரியாமல் விழிக்கும் இந்த நண்பனுக்கு வழி காட்டுங்களேன்..



அம்மாவும் பிள்ளையும்

ஆழி.வே.ராமசாமி



பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வரும்போதே முருகனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. காரணம் என்ன தெரியுமா? எல்லோரும் மகிழ்ச்சியடையும்படியான காரியத்தை அவன் செய்து விட்டான்.

பள்ளிக்கூடத்தில், குழாயடியில், முருகன் கை கழுவும்போது கீழே ஒரு மோதிரம் கிடந்தது. தங்க மோதிரம்!

யாரோ கை கழுவும்போது நழுவி விழுந்திருக்கலாம். யாருடையது என்று தெரியவில்லை.

அந்த மோதிரத்தை எடுத்தான் முருகன். கனமாக இருந்தது. ஒரு சவரன் இருக்கலாம்.

மோதிரத்தைக் கொண்டு போய்த் தலைமை ஆசிரியரிடம் கொடுத்தான்.

''குழாயடியிலே கிடந்தது. யாருடையதோ தெரியலே சார்.''

தலைமை ஆசிரியர் அவனை உற்றுப் பார்த்தார். அவர் கண்கள் மலர்ந்தன. உணர்ச்சி வசப்பட்டு விட்டார். அவனைப் பெருமிதத்துடன் பார்த்தார்.

'இப்படி ஒரு நேர்மையான பையனா!' என்று அவர் நினைத்திருக்கலாம்; பெருமைப்பட்டிருக்கலாம்.

''வெரிகுட். நல்ல பையன்! இப்படித்தான் இருக்க வேண்டும். நீ செய்தது ரொம்ப சரி'' என்று அவனை மனமாரப் பாராட்டினார்.

இதற்குள், மோதிரத்தைத் தவற விட்ட தனபாலன் தேட ஆரம்பித்தான்.

''நம்ம முருகன், ஏதோ ஒரு மோதிரத்தைத் தலைமை ஆசிரியர் கிட்டே கொண்டு போய்க் கொடுத்தான்டா'' என்றான் ஒரு பையன்.

தலைமை ஆசிரியர் எல்லோரையும் கூட்டினார். ''பாருங்கள் இந்த மாணவன் முருகனை! அவன் எவ்வளவு நல்லவனாக இருக்கிறான்! கண்டெடுத்த இந்த மோதிரத்தைத் தானே எடுத்துக் கொண்டு போய் விடாமல், என்னிடம் கொண்டு வந்து கொடுத்திருக்கிறானே! இது மாதிரியான நல்ல குணம் உங்கள் எல்லோருக்கும் வேண்டும். இவன் போன்ற மாணவர்களால் தான் நமது பள்ளிக்கே பெருமை; நமது நாட்டுக்கே பெருமை. பள்ளிக்கூடத்திலிருந்து நீங்கள் கல்வி கற்றுக் கொள்ள மட்டுமே வரவில்லை; நல்ல குணங்களையும் கற்றுக் கொள்ளவேண்டும்!'' என்றார்.

மாணவர்கள் கைதட்டினார்கள்.

எல்லோரும் முருகனைப் பற்றியே பேசிக் கொண்டார்கள்.

''அவனுக்குச் சரியான சாப்பாடு கிடையாது. நல்ல சட்டை கிடையாது. ஆனால் பார்; எவ்வளவு நேர்மையாக இருக்கிறான்!''

''பாவம், அவனுக்கு அப்பா இல்லை. செத்துப் போய்விட்டார். அம்மா தான் இருக்கிறாள். அவள்தான் நாலு வீடுகளுக்குப் பத்துப் பாத்திரங்கள் தேய்க்க, தண்ணீர் கொண்டுவந்து கொடுத்து அவனைக் காப்பாற்றுகிறாள்!''

எல்லோரும் அவனை மிகவும் பாராட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சிதான் அவனை மகிழ்ச்சியடையச் செய்தது. பள்ளிக்கூடம் விட்டதும் விடுவிடு என்று வேகமாக நடந்தான். அம்மாவிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்தான்.

நல்ல காரியம் செய்யும் போது அதனால் மனத்திற்கு அமைதியான ஒரு மகிழ்ச்சி தோன்றும் என்பதை அவன் உணர்ந்தான்.

அந்த மகிழ்ச்சியில் ஒரு பாட்டுக் கூடப் பாட வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது!

ஆனால், அவன் தன் குடிசைக்கு வந்த போது, அந்த மகிழ்ச்சி போன இடம் தெரியவில்லை!

அவனுக்கு ஓர் அதிர்ச்சியான செய்தி காத்திருந்தது!

''முருகா! உனக்குச் சேதி தெரியுமாடா...?'' என்று ஆரம்பித்தாள் பக்கத்து வீட்டுக் கிழவி.

''என்ன சேதி, பாட்டி?'' என்று கலக்கத்துடன் கேட்டான் முருகன்.

''உன் அம்மா ஜானகி வேலை செய்யறாளே, அந்த சந்நிதித் தெரு வேப்பமரத்து வீட்டிலே ஒரு வெள்ளி தம்ளரைக் காணோமாம். உன் அம்மா தான் எடுத்திருப்பாள்னு அந்த வீட்டுக்காரிக்குச் சந்தேகமாம். 'அந்த வெள்ளித் தம்ளரைக் கொண்டாந்து கொடுத்துடு. இல்லே, அது எங்கே இருக்குன்னுச்சும் சொல்லிடு. அப்படி இல்லே, அதுக்கு உண்டான பணத்தைக் கொடுத்துடு. இல்லாட்டா, உன்னைப் போலீசிலே புடிச்சுக்கொடுத்துடுவோம்'னு மெரட்டுறாளாம். இன்னும் உன் அம்மா வீட்டுக்குத் திரும்பி வரலேடாப்பா'' என்றாள் கிழவி.

முருகனுக்கு மயக்கம் வரும்போல் இருந்தது.

'அம்மாவின் மேல் திருட்டுப் பழியா! அப்படியெல்லாம் செய்யக் கூடியவளா அம்மா!

அம்மா தினமும் அவனுக்கு நல்ல குணங்களைப் பற்றியெல்லாம் சொல்லுவாளே! நல்ல பழக்க வழக்கங்களைப் பற்றியெல்லாம் சொல்லுவாளே!

''முருகா, கண்ணு. நாம கஷ்டப் பட்டுக்கிட்டு இருந்தாலும் நேர்மையா இருக்கணும். மத்தவங்க பொருளுக்கு ஆசைப்படக் கூடாதப்பா. உழைச்சு சம்பாதிக்கணும். படிப்பு, பணம் எல்லாத்தையும்விட, நல்ல குணம்தான் முக்கியம்'' என்று அவள் அடிக்கடி சொல்லுவாளே, அவளா இப்படிச் செய்திருப்பாள்?... ஒருவேளை, பண நெருக்கடியிலே...... சே! சே! அப்படியெல்லாம் இருக்காது.'

இப்படித் தனக்குள் பேசிக்கொண்டான் முருகன்.

''ம்... வயித்துக்கு இல்லாட்டிப் போனு, எல்லோரும் திருடிடுவாங்களா? என்னமோ அவமேலே சந்தேகப்படறுங்க. எல்லாம் போதாத காலம்!'' என்று பெருமூச்சு விட்டாள் கிழவி.

முருகனின் கண்களில் கண்ணீர் வழிந்தது. பசிகூட மறந்து விட்டது அவனுக்கு. கொஞ்ச நேரத்திற்கு முன்னே அவனிடம் இருந்த மகிழ்ச்சி இப்போது எங்கே போயிற்று...?

பள்ளிக்கூடத்திலே சற்று முன் அவன் நல்ல பெயர் வாங்கினான். இப்போது அவன் அம்மாவுக்குக் கெட்ட பெயர் வந்திருக்கிறது!

''பாட்டி, அம்மாவை இப்போ எங்கே பார்க்கலாம்?'' என்று கேட்டான் முருகன்.

''அவ இப்போ எங்கே இருக்காளோ, யார் கண்டது? ஒருவேளை, போலீஸ் ஸ்டேஷன்லேகூட இருக்கலாம். ஆனா, நீ எதுக்கும் அந்த வேப்ப மரத்து வீட்டிலே போய்ப் பாரு. அங்கேதான் வெள்ளித்தம்ளரைக் காணோமாம்!'' என்றாள் கிழவி.

புத்தகப் பையைக் குடிசைக்குள் போட்டுவிட்டு ஓடினான் முருகன்.

சந்நிதித்தெரு. வேப்பமரத்து வீட்டிலே, ஒரு தூணில் சாய்ந்தபடி கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள் அவன் அம்மா ஜானகி.

''சாமி மேலே சத்தியமா நான் திருடலே அம்மா. என்னை நம்புங்க...'' என்று கையெடுத்துக் கும்பிட்டுக் கொண்டிருந்தாள் அவள்.

''தெரியுமடி உன் சத்தியமெல்லாம். உன்னைத் தவிர வேறே யாரும் எடுத்திருக்க மாட்டாங்க. வந்த விருந்தாளிக்குக் காபி கொடுத்துட்டு மேஜை மேலே வச்ச அந்த வெள்ளித் தம்ளர் எப்படி மாயமா மறைஞ்சு போயிருக்கும்? என்னடி இது, அதிசயமால்லே இருக்கு! உண்மையைச் சொல்லிடு. இல்லாட்டா, ஆபீஸிலேருந்து அய்யா வந்துட்டார்னு, நீ போலீசுக்குப் போகும்படி இருக்கும். ஆமாம்!'' என்றாள் வீட்டுக்காரி.

''ஐயோ அம்மா. நான் பொய் சொன்னேன்னு, திருடினேன்னு, என் கண்ணு அவிஞ்சு போயிடும்மா!'' என்று கதறினாள் முருகனின் அம்மா ஜானகி.

''நானும் அப்போ புடிச்சுக் கேட்டுக்கிட்டு இருக்கிறேன். நீ திரும்பத் திரும்ப அதையே சொல்லிக்கிட்டு இருக்கிறியேடி! வரட்டும் அய்யா!'' என்றாள் வீட்டுக்காரி.

வாசலில் நின்று கொண்டு, ''அம்மா'' என்று கத்தினான் முருகன். அவன் குரலில் அழுகையும், ஆத்திரமும், பாசமும், பயமும் கலந்திருந்தன.

''யாருடா அது?'' என்று அதட்டினாள் வீட்டுக்காரி.

''எங்க அம்மா திருடியிருக்க மாட்டாங்க. அவங்களை விட்டுடுங்க!'' என்று கெஞ்சினான் முருகன்.

''ஓகோ! அவளோட பிள்ளையா நீ? அவ திருடினாளா இல்லையாங்கிறது உனக்கு என்னடா தெரியும்?'' என்று சத்தம் போட்டாள் வீட்டுக்காரி.

இதற்குள், வீட்டின் உள்ளேயிருந்து யாரோ ஒரு பையன் எட்டிப் பார்ப்



பது போல இருந்தது. பிறகு அந்தப் பையன், ''அடடே! முருகனா?.... வா, வா!'' என்று உற்சாகமாக வரவேற்றான்.

ஆமாம். அவன் தனபாலன்தான்! ஓ! தனபாலின் வீடா அது...?

தனபாலன் தன் அம்மாவிடம், அம்மா, இன்னிக்கு நான் போட்டிருந்த மோதிரத்தைக் குழாயடியிலே தவறவிட்டுட்டேன். இந்த முருகன் தான் அதை எடுத்துக்கிட்டுப் போய் எங்க தலைமை ஆசிரியர்கிட்டே கொடுத்தான். எனக்கு மோதிரம் கிடைச்சுட்டுது. ரொம்ப நல்லவன் அம்மா இவன்! வேறே ஒருத்தர்னா அந்த ஒரு சவரன் மோதிரத்தைத் தூக்கிக்கிட்டுப் போயிருப்பான்! இந்த மாதிரி நல்ல மனசு யாருக்கு வரும்?'' என்றான். பிறகு முருகனிடம், ''முருகா, இந்த ஜானகி உன் அம்மாவா? எனக்கு இதுவரை தெரியாதே!'' என்றான்.

அந்த வீட்டுக்காரி — தனபாலனின் அம்மா — அப்படியே திகைத்துப்போய் உட்கார்ந்து விட்டாள். சிறிது நேரம் ஒன்றும் பேசவில்லை.

பிறகு அவள் சாந்தமான குரலில் பேசினாள்:

ஜானகி, வெள்ளித் தம்ளரை நீ எடுத்திருக்க மாட்டாய்னுதான் இப்போ எனக்குத் தோணுது. ஏன்னா, இவ்வளவு நல்ல பிள்ளையைப் பெத்திருக்கிற உனக்கு, அந்த மாதிரியான திருட்டுப் புத்தியெல்லாம் வரவே வராது! நான்தான் அவசரப்பட்டு உன்மேல்சந்தேகப்பட்டுட்டேன். அதைப் பத்தி எனக்கு வெட்கமாகக்கூட இருக்கு. என்னை மன்னிச்சுக்கோ. நீ போயிட்டு வா. மனசிலே ஒண்ணும் வச்சுக்காதே!''


தனபாலனின் அம்மா, தன் அவசர முடிவுக்கு வருத்தப்பட்டாள்.

ஜானகி, தன் மகன் முருகனை அன்போடு அணைத்துக் கொண்டாள்.

''கண்ணு, உன்னாலேதான்டா, என் மேலே இருந்த சந்தேகமும் போச்சுது! எனக்கு நல்ல பேர் கிடைச்சுது. நீ கோடி கோடியா சம்பாதிச்சு எனக்குத் தர வேணும்டா. இதுமாதிரி நீ நல்ல பேர் வாங்கினாலே எனக்குப் போதும்டா'' என்றாள்.

அம்மாவும், மகனும் தங்கள் குடிசைக்கு நடந்தார்கள். அவர்களுடைய வயிறுகள் ஒட்டிக் காலியாகத்தான் இருந்தன. ஆனால், அவர்களுடைய மனங்கள் மகிழ்ச்சியால் நிரம்பி இருந்தன!

பண்பு வளர்ப்போம்




பிள்ளைகளே, கிள்ளைகளே, இங்கே
வாருங்கள் — அன்பு
முல்லைகளே, அரும்புகளே, கொஞ்சம்
கேளுங்கள்;
நல்லமனம் கொண்டவர்கள் நீங்கள்
அல்லவோ — நமது
நாட்டுநலம் காப்பதுங்கள் செயல்கள்
அல்லவோ?

உந்தினிலே நீங்களெல்லாம்
பயணம் போகும்போது — தூய
உணர்வுகளைப் பெறுவதுதான்
இனிது வாழத் தோது.
மந்தை போலக் கூட்டமாக
இடித்துச் செல்லலாமோ — உயர்
மனித இனம் நமது இனம்
மறந்து வாழ லாமோ?

முதியவர்கள் நிற்கும் போது
இருக்கையைநாம்கொடுப்போம்அந்த
மூத்தவரை மதித்து வாழும்
பண்பினை நாம் வளர்ப்போம்.
குதித்துத் தள்ளி வேகமாக
இறங்கும் போக்கு ஏனோ? — இறங்கும்
நிறுத்தம் வருமுன் எழுந்திடுவோம்;
அந்தச் செயல் வீணோ?

ப்படியில் நின்று பயணம் செய்து
உயிரி ழக்க லாமா — புதிய
பாரதத்தின் வீர ரெல்லாம்
விரைந்து மறைய லாமா?
படிப்புக் கேற்ற பண்புகளைத்
துறந்து வாழ லாமா? — பெரிய
பட்டம் பதவி பெற்ற போதும்
சட்டம் மீற லாமா?

—தமிழ்ப்பித்தன்



கருணை விழிகள்



ஆர். பொன்னம்மாள்

பாதி கிளாஸ் தண்ணீர் குடித்த அச்சிறுவன் மோகனை நிமிர்ந்து பார்த்ததும் விசித்து விசித்து அழுதான்.

''நீ.. நீ... ராமுதானே!'' என்று மோகன் கேட்டான்.

''இதில் என்ன சந்தேகம்? சாட்சாத் ராமுவேதான்!''என்றான் கபாலி.

அதற்குள் அங்கே வந்த குதிரைக்காரன், ''என்னடா பண்றீங்க?'' என்றான்.

''ஒண்ணுமில்லே... இவன் நீச்சல் கத்துக்கிட்டான். அவன் கத்துக் கொடுத்தான். கைநழுவி ரெண்டு மடக்குத் தண்ணி குடிச்சிட்டான். பயந்து போய் அழறான். வேறொன்றுமில்லே'' மோகனுக்கே தன் சமயோசிதமான பதிலை நினைத்து வியப்பாக இருந்தது.

குதிரைக்காரன் நகர்ந்ததும் மோகன், ''ராமு, எழுந்திரு. இந்தா என் சட்டை. நல்லாத் துடைச்சுக்கோ. உன் துணியைப் பிழிஞ்சு போட்டுக்கோ. இப்படியே இருந்தா வர்ரவங்க போறவங்களுக்குப் பதில் சொல்லி முடியாது. காந்தி சிலை அருகே போய் விவரமாய்ப் பேசலாம்'' என்று முடுக்கினான்.

டம்ளரைக் கொண்டு போய் பஜ்ஜிக் கடைப் பாட்டியிடம் கொடுத்துவிட்டு ஓடிவந்து அவர்களுடன் கலந்துகொண்டான் மோகன்.

''இங்கேயேஉட்காருவோம் மோகன். அங்கே ரொம்ப வெளிச்சமாயிருக்கும். நான் வரல்லே'' பதிலுக்குக் காத்திராமல் இருள் சூழ்ந்த ஓர் இடத்தில் உட்கார்ந்துவிட்டான் ராமு.

வேறு வழியில்லாமல் அங்கேயே அவனுடன் உட்கார்ந்தார்கள் மோகனும், கபாலியும்.

அங்கங்கே ஓரிருவர் இருந்தார்கள். வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்ட கார்களின் எண்ணிக்கை கணிசமாய்க் குறைந்திருந்தது.

திடீரென்று ராமு மோகனின் கைகளைப் பிடித்துக்கொண்டு கேவிக் கேவி அழுதான்.

''என்ன நடந்தது ராமு? ஏன் இந்த முடிவுக்கு வந்தே?''

ராமு பதில் சொல்லவில்லை. கபாலியை ஒருமுறை பார்த்தான். ''கபாலி நம்ம ஆள்தான். அன்னியனில்லே... எதையும் வெளியிட மாட்டான்... தயங்காமல் சொல்லு'' மோகன் தைரியம் ஊட்டினான்.

''நான் வேணுமானால் போயிடறேன்... நாளைக்கிச் சந்திக்கிறேன்'' என்று கபாலி கூறிக்கொண்டே எழப் போனான்.

ராமு அவசரமாக, ''வேண்டாம்... நீ போகாதே... நீதானே என்னைக் காப்பாத்தினே... பகட்டா டிரஸ் போட்டுக்கிட்டிருந்தவங்க என்னைப் படுகுழியிலே தள்ளிட்டாங்க...'' என்று ராமு கண் கலங்கியபடி கூறினான்.

கபாலி ராமுவை விசித்திரமாய்ப் பார்த்தான். மோகன் ஆதரவாய் ராமுவின் தோளைத் தட்டிக்கொடுத்து, ''எதுவாயிருந்தாலும் மனசில் வச்சுக்காதே, ராமு. நடந்ததைச் சொல்லு... தற்கொலை செஞ்சுக்கும்படியா உனக்கு என்ன கஷ்டம்?'' என்று கேட்டான்.

''மோகன், நீ படிக்க முடியலேன்னு வருத்தப்பட்டே... நான் படிப்பைப் பாழாக்கிட்டேன்... எனக்குப் படிப்பு வரல்லேங்கிறது உனக்குத் தெரியும்! கால் பரீட்சையிலே குறைச்சலா மார்க் வாங்கினேன்னு அப்பா ட்யூஷன் வச்சார். சாயங்காலம் ஸ்கூல் விட்டதும் ஒரு மணி நேரம் ஸ்கூலிலே எனக்குத் தனியாப் பாடம் நடத்துவார் ட்யூஷன் வாத்தியார். அதிலேயும் இங்கிலீஷ் காம்போசிஷன் வரவே இல்லே... அவரோ நாலு நாளிலே ஒப்பிக்கணுமின்னு மிரட்டுவார். கடிகாரத்தையே பார்த்துக்கிட்டிருப்பேன்! இதுக்கு இடையிலே எங்க அக்கா கலியாணம் ஏற்பாடாச்சு. அந்த மும்முரத்திலே அப்பா ட்யூஷன் பீஸை எங்கிட்டேயே கொடுத்தனுப்பினார். அப்போ தான் வாசு ஒரு வழி சொல்லிக் கொடுத்தான்.

''ஏண்டா, காசைக் கொடுத்து கஷ்டத்தை விலைக்கு வாங்கிறே...? ட்யூஷன் வாத்தியார் கிட்டே அப்பா இனிமேல் ட்யூஷன் வேண்டாம்னு சொன்னதாச்சொல்லிடு. காரணம் கேட்டால் 'செலவு அதிகம். உன் அக்காள் கலியாணம் வேறே வருது.. சமாளிக்க முடியலே'ன்னு சொன்னார்னு அடிச்சு விடேன். அந்தப் பணத்தை வைச்சு கட்டு ஜாலியாப் பொழுது போக்கலாம்'' என்றான். ட்யூஷன் பயத்திலே நானும் 'சரி'ன்னுட்டேன்.

''ட்யூஷன் வாத்தியாரிடத்திலே நான் போய் இதைச் சொல்றபோது வாசு, தினகர் எல்லோரும் கூட வந்தாங்க. அதனாலே அவருக்குச் சந்தேகம் ஏற்படல்லே.

''சினிமா பீச்சு, ஹோட்டல்னு ஜாலியாக் கழிச்ச கொழுப்பிலே அடுத்த மாசமும் இதேபோல் செஞ்சுட்டேன். அரைப் பரீட்சை நடந்தது. அக்கா கலியாண மளமளப்பும் ஓஞ்சுது. அப்பா பிராக்ரஸ் ரிப்போர்ட்டைப் பார்த்தார். எங்கிட்டே கத்தினார். அடிஅடின்னு அடிச்சார்.

''ட்யூஷன் வாத்தியார் கிட்டே மறுநாள் விசாரிக்கிறதாச் சொன்னார்.

''குட்டு வெளியான பிறகு, அந்த அவமானத்தை நான் எப்படித் தாங்குவேன், மோகன்! அன்னைக்கு என்னைக் குற்றம் செய்யத் தூண்டினவங்க இப்ப என் கூட வருவாங்களா?

''உன்னை அன்னைக்கி காலை வாரி விட்டேன்... இன்னைக்கி கடவுள் என்னைப் பழி வாங்கிட்டார்....''

மோகன் அவசரமாக மறுத்தான்.

''தப்பு... மனுஷங்களுக்குத்தான் பழிவாங்குகிற குணம் உண்டு. கடவுளுக்கு நாம எல்லோருமே குழந்தைங்கதான்... சரி, பழசையெல்லாம் ஏன் இப்போ கிளர்றே? என்கூட வா. நான் உங்க வீட்டிலே சொல்லி...''

இதைக் கேட்டதும் ராமு பலமாகக் கத்தினான்.

''மாட்டேன்... நான் எங்க வீட்டுக்கு வரமாட்டேன். யார் சொன்னாலும் சரி... எங்கப்பாவைப் பத்தி உனக்குத் தெரியாது. நான் இனிமேல் படிக்கவும் விரும்பலே... எனக்குப் படிப்பு ஏறலே... அதிலேயும் இங்கிலீஷ் கிளாஸும் கணக்கு கிளாஸும் வேப்பங்காயா இருக்கு.''

ராமு பயத்தினால் இப்படிப் பதறுகிறான் என்பதை அறிந்த மோகன், ''எங்க வீட்டுக்குப் போகலாம், வா'' என்று அழைத்தான். ராமு தயங்கினான்.

கபாலியும், மோகனுமாகச் சேர்ந்து வற்புறுத்தவே தலையைக் குனிந்தபடி ராமு மோகன் வீடு சென்றான்.


• • •



''உங்க வீட்டிலே நெய்யும், தயிருமாச் சாப்பிடுவே. எங்க வீட்டிலே மோர்தான். மாவடு போட்டுக்கறியா?''—பாட்டியின் அன்புக் கேள்வி ராமுவைச் சிந்திக்க வைத்தது.

மௌனமாய்த் தலையை அசைத்து, பாட்டி போட்ட மாவடுவைக் கடித்தபடி சிந்தனை வசப்பட்டான்.

இன்றோடு இருபத்திரண்டு நாளாகிறது, அவன் மோகன் வீட்டிற்கு வந்து. 'மோகனும், அவன் பாட்டியும்



ஹெல்மெட் எதற்கு?

அம்மா: ஏண்டா ஹெல்மெட்டைப் படுக்கைக்குப் பக்கத்தில் வைச்சுக்கறே?

முரளி: ஸ்கூட்டரில் போறமாதிரி கனவு வருது. அப்படி வரும் போது பாதுகாப்புக்கு ஹெல்மெட் போட்டுக்கத்தான்.

—லலிதா செல்லப்பா.

தான் எத்தனை நல்லவர்கள்! மோகன் தான் எத்தனை பொறுமைசாலி!

'வாசுவோடு சேர்ந்து மோகனுக்குத் திருட்டுப் பட்டம் கட்டி நையாண்டி செய்ததையெல்லாம் கொஞ்சமும் சொல்லிக் காட்டாமல், எவ்வளவு பெருந்தன்மையாய் நடந்து கொள்கிறான்!

'எத்தனை நாள் இப்படி அப்பா, அம்மாவுக்குத் தெரியாமல் மறைந்திருக்க முடியும்? அதுவும், இவர்களுக்குப் பாரமாக? வேளா வேளைக்கு விதம் விதமாய் அம்மா சமைத்துப் போட்டாளே! தேவையானதையெல்லாம் • அப்பா அப்போதைக்கு அப்போது வாங்கித் தந்தாரே! பிற்கால வாழ்க்கைக்கு அவசியமான கல்வியைக் கற்றுக் கொள்ளச் சொன்னால், கசப்பாகக் கஷ்டமாக இருந்ததே! என்ன முட்டாள்தனம்!

'இவர்கள் எப்படி உழைக்கிறார்கள்! தேனீ மாதிரி எவ்வளவு சுறுசுறுப்பாய் இருக்கிறார்கள்! இவர்களைப் பார்த்துத்தான் நானும் ஒரு வேலையிலே சேர ஆசைப்பட்டேன். நல்ல காலம்... கபாலி சிபாரிசிலே நானும் இப்போது ஒரு அச்சகத்திலே வேலை பார்க்கிறேன். நேற்று ராத்திரி அச்சகத்திலே வேலை முடிய ஒன்பதரை ஆயிடுச்சு. கபாலி என்னைத் தேடிக்கிட்டு வந்துட்டான். என் கையெல்லாம் கறுப்புக் கறை! காலையிலேயிருந்து வேலை செய்த கூலி. இப்படித்தானே அப்பாவும் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கிறார்! கஷ்டம் தெரியாமே, அவரை ஏமாற்றி, ஹோட்டல், சினிமா, பிக்னிக்கென்று விரயம் பண்ணினேனே!

'மோகன் சொன்ன மாதிரி வாழைப் பழம் தோலோடு இருக்கிறது... தோலை உரித்து விட்டுத்தான் சாப்பிடுகிறோம்! மாம்பழம் கொட்டையோடு கிடைக்கிறது... பழத்தை எடுத்துக் கொண்டு கொட்டையை வீசி எறிகிறோம்! அதைப் போல் கெட்டவர்கள் எங்கும்தான் இருப்பார்கள். நாம்தான் நல்லவர்களோடு நட்புக் கொள்ள வேண்டும். வாசு சொன்னால் என்னை யார் கேட்கச் சொன்னார்கள்? வாசுவையும், இவர்களையும் குற்றம் சொல்லிப் புண்ணியமில்லை!

'இந்த மோகன்தான் எவ்வளவு படிக்கிறான்! அடிக்கடி நூல் நிலையத்திற்குப் போகிறான். அங்கேயிருக்கிறவர் ஏவின வேலைகளைச் செய்து புத்தகங்களை அவர் பெயரிலே வாங்கி வருகிறான். என்னையும் எவ்வளவு படிக்க வைத்து விட்டான்! அவனோடு பேசிக் கொண்டிருந்தால் நேரம் தெரிவதில்லையே!'

ராமு இப்படியெல்லாம் எண்ணிக் கொண்டேயிருந்தான்.

''பாட்டி, அவனுக்குச் சாதம் பிடிக்கல்லே போலிருக்கு... பால் உறை குத்தி வைச்சிருப்பியே, அதைக் கொஞ்சம் ஊத்தேன்...'' மோகனின் குரல் அவனை நினைவுலகிற்குக் கொண்டு வந்தது.

''அதெல்லாம் ஒண்ணுமில்லே பாட்டி, ஏதோ யோசனை...'' என்றான் ராமு.

ராமு மறுத்தும், அவன் தட்டில் அரைகுறையாய் உறைந்த தயிர்ப்பாலை ஊற்றியபடியே பாட்டி சொன்னாள்:

''ராமு, மோகன் மாதிரி நீயும் எனக்கொரு பேரப் பிள்ளைதான்... அந்த உரிமையிலே சொல்றேன். நீ எத்தனை நாள் இருந்தாலும் எங்களுக்குப் பாரமில்லை. ஆனாலும், நான் இற்றுப் போன மரம்... என்னைக்குச் சாய்கிறேனோ!... மோகனுடைய எதிர்காலத்தை நினைச்சே நான் பயந்துக்கிட்டிருக்கேன். அதுக்காகத்தான் அவனுக்கு ஏராளமான புத்திமதிகளையும், தன் காலாலேயே நிற்கிற சுய புத்தியையும் சொல்லிக் கொடுத்திருக்கேன்.

''எத்தனையோ நல்ல மனுஷாளுக்கு வேணுமிங்கற ஒத்தாசையெல்லாம் அவன் பண்ணியிருக்கான். யாராவது கைதூக்கி விடுவாங்கற நம்பிக்கை இருக்கு... ஆனால், உனக்கு ஏனப்பா இந்தத் தலைவிதி? உங்க அம்மா அப்பா உன்னைக் காணாமல் எத்தனை துடிச்சிட்டிருக்காங்களோ? நீ செய்கிற தப்புக்கு நாங்களும் உடந்தையா இருக்கிற

மாதிரி ஒரு மன உளைச்சல்! உன் மனசு பக்குவப்படட்டும். அவசரப்பட்டு நீ வேறெதுவும் செய்துடக் கூடாதேன்னு பொறுமையாயிருக்கோம். ராமு, இப்ப விட்டேனே அது பாலுமில்லே; தயிருமில்லே... அந்த மாதிரி பருவம் உனக்கு... நீ பச்சைக் குழந்தையுமில்லே, பக்குவப்பட்ட வயசுப் பையனுமில்லே... இந்த வயசுலே நீ படிக்கணும். பெத்தவா, பெரியவா வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நடக்கணும். அவங்க நமக்கு நல்லதைத்தான் சொல்லுவாங்கன்னு நம்பணும். அஸ்திவாரமில்லாத கட்டடம் இடிஞ்சு விழுந்துடும். பிற்கால வாழ்க்கைக்குத் தேவையான அறிவை வளர்த்துக்கப் படிக்கணும்.''

''எனக்குப் படிப்பு வரமாட்டேங்குதே பாட்டி!'' அழமாட்டாக் குறையாகச் சொன்னான் ராமு.

உடனே மோகன் குறுக்கிட்டான்:

''ராமு வராதுன்னு ஒண்ணு உண்டா? ட்யூஷன் வாத்தியாருக்கா சம்பாதிச்சுப் போடப் போறோம்! வாங்கற சம்பளத்துக்கு அவர் பாடு படறார்! சரி, ட்யூஷனே வேண்டாம்! 'சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்; வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்''ன்னு பாடிய ஔவையார் முட்டாளா? தினமும் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் இங்கிலீஷ் காம்போசிஷனிலே ஒரு பாரா படி... வராமலா போகும்? மத்தவங்களுக்கு ஒரு நாளிலே வர்ரது உனக்கு ஒரு வாரத்திலே வந்துட்டுப் போறது! வாத்தியார், வீட்டுக் கணக்குக் கொடுக்காத நாளையிலேயும் இரண்டு கணக்குப் போடறதுன்னு உறுதி எடுத்துக்கோ... நீயே ஆச்சரியப்படற மாதிரி மார்க் வாங்குவே''

மோகனின் பேச்சைக் கேட்டு அசந்து போயிருந்த ராமுவைப்பார்த்து, ''கை காய்ஞ்சு போயிடுத்து பார்.... கையை அலம்பிட்டு வந்து பேசுங்கோ'' என்றாள் பாட்டி. அவளது உத்தரவுப்படி இருவரும் எழுந்து கைகழுவிக் கொண்டு வந்தார்கள்.

''மோகன், பாட்டி எதையும் குறையிலே விடக் கூடாதும்பாங்க; இல்லியா... அதனாலே ஔவையார் பாட்டின் பின் பகுதியையும் நான் சொல்லிடுறேன். 'நித்தம் நடையும், நடைப் பழக்கம்; நட்பும் தயையும் கொடையும் பிறவிக் குணம்.'

''மோகன், இது உனக்கு எவ்வளவு பொருத்தமா இருக்கு! என்கிட்டே என்ன அன்பு! இரக்கம்! முன்பு என் சட்டையைக் காட்டிப் பெருமையடிச்சேன். மாற்று உடை இல்லாமல் வந்த எனக்கு உன்னுடைய புது டிரஸ்ஸைக் கொடுத்து கௌரவமா நடத்தினே! பெரிய வீட்டிலே சுதந்திரமா வளர்ந்த என்கிட்டே சின்னப் புத்திதான் இருந்தது! ஒண்டுக் குடித்தனத்திலே, இந்த ஒத்தை அறையிலே வசிக்கிற உனக்கும் பாட்டிக்கும் எவ்வளவு பெரிய மனசு இருக்குது! உங்களைப் பார்க்கறப்போ எனக்கு வெட்கமா இருக்கு! எதை எதையோ அவமானமா நினைச்சேன்! என் அற்ப குணங்கள்தான் பெரிய அவமானச் சின்னங்கள்!''


''ராமு, அதைப் பத்தியெல்லாம் இப்ப என்ன பேச்சு? உன்னைக் காணுமே உன் அம்மா, அப்பா எவ்வளவு துடிதுடிப்பாங்க! எவ்வளவு நாளைக்குத்தான் இப்படி ஒளிஞ்சு வாழ முடியும்? உன்னை உன் பெற்றோரிடத்திலே சேர்த்து, உனக்கு நல்ல எதிர்காலத்துக்கு வழி செய்யுறது

லிங்கன் வேலை பார்த்த நியூசேலம்!



அமெரிக்காவிலே நியூசேலம் என்று ஒரு நகரம் இருக்கிறது. அங்கிருந்த ஒரு மளிகைக் கடையில் வேலை பார்த்தார் அமெரிக்காவின் 16—வது ஜனாதிபதியாக விளங்கிய ஆபிரகாம் லிங்கன்!







எங்க கடமையில்லையா?'' என்று கேட்டான் மோகன்.

''மோகன், உனக்காக... உன்னுடைய நல்ல குணங்களுக்காக நீ எடுக்கற முடிவுக்கு நான் ஒத்துக்கறேன். ஆனால் ஒண்ணு. முதல்லே நீ போய் எங்க வீட்டிலே எல்லாரும் எந்த மாதிரி நிலையிலே இருக்காங்கன்னு நோட்டம் பார்த்துட்டு வா... உனக்கு நான் விவரமாச் சொல்ல வேண்டாம். நீ புத்திசாலி! ஒருவழியாகத் தொலைஞ்சான்னு என்னை அவங்க கைகழுவி விட்டிருந்தால், அதையும் மறைக்காமல் எங்கிட்டே சொல்லிடணும். பேப்பர்லேகூட விளம்பரம் கொடுக்கல்லியே, பார்த்தியா...? பள்ளிக்கூடத்திலே எத்தனை களேபரம் ஆயிருக்கோ...? நான் இனிமேல் போனால் எத்தனை பேர் எத்தனை கேள்விகள் கேட்பாங்க! வாசு எல்லார்கிட்டேயும் பரப்பி இருப்பானே! தினகர் பெரிய நியூஸ் பேப்பராச்சே! ட்யூஷன் வாத்தியார்தானே கிளாஸ் வாத்தியார்! அவர் கொக்கி போடறாப் போலச் சுண்டிப் பேசுவாரே!''

''ராமு, அனாவசியமாகக் குழப்பிக்காதே! எல்லாம் நல்லபடியா முடியும். உன்னுடைய முடிவு ரொம்ப நல்ல முடிவு. எந்தக் காலத்திலேயும் எந்தச் சூழ்நிலையிலேயும் தற்கொலை செய்துக்கறது கோழைத்தனம். எதிர்நீச்சல் போடறதுதான் வீரம்! இனியாவது பொறுப்பா நடந்துக்கணும், என்ன? நான் போய்ப் பார்த்துட்டு வரேன். உன் வீட்டு விலாசத்தைக் கொடு. உன் முழு சம்மதத்தோடேதான் போறேன். நாளைக்காலையிலே போவேன், நான் திரும்பி வர்றதுக்குள்ளே நீ எங்கேயும் போயிட மாட்டியே?''

''மாட்டேன்'' என்று தலை அசைத்தபடியே தன் வீட்டு முகவரியை ஒரு காகிதத்தில் எழுதித் தந்தான் ராமு.

''அப்பாடா! எத்தனை தடவை கேட்டிருப்பேன். இன்னிக்குத்தான் உன் வீட்டு விலாசத்தைத் தந்திருக்கிறே. ராமு, தைரியமா இரு... நீ வீட்டுக்குப் போன பிறகும் நான் உன்னைப் பார்க்க அடிக்கடி வருவேன். உனக்கு எந்தப் பாடத்திலேயாவது சந்தேகம் வந்தால் சொல்லு. தெரிஞ்சதைச் சொல்லித் தர்ரேன். பக்கத்து வீட்டுப் பையனுக்கு நான் கணக்குச் சொல்லித் தரலியா? வகுப்பிலே வாத்தியார் எப்படிச் சொல்லிக் கொடுத்திருக்கார்னு அவனுடைய கணக்கு நோட்டைப் பார்த்துக்குவேன். மாதிரிக் கணக்குகளையும், விடையையும் வைச்சுக்கிட்டு கணக்கைப்

போட்டுடுவேன். சரியான விடை வரும் போது எத்தனை சந்தோஷமாயிருக்கும், தெரியுமா? இன்னொன்றையும் நீ பார்த்திருப்பியே! அவன் டிக்ஷனரியிலேயே ரெண்டு, மூணு வச்சிருக்கான்! அதைப் பார்த்து இங்கிலீஷ் சொல்லிக் கொடுப்பேன். தினமும் அஞ்சு கடின வார்த்தை யாவது அர்த்தம் தெரிஞ்சு 'மனப் பாடம் பண்ணிடுவேன். பேப்பரிலே ஐம்பது தடவை எழுதுவேன். இப்படி புதுசா எவ்வளவு வார்த்தைகளைக் கத்துக்கிட்டிருக்கேன், தெரியுமா....? முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்...

''ராமு, விளையாட்டுகளிலே உனக்கு நிறையத் திறமை இருக்கிறதை நான் பார்த்திருக்கிறேன். நீ கிரிக்கெட்லே சாம்பியனாச்சே! முதலிலே வந்துட்டு நாட்அவுட் பேட்ஸ்மேனா எத்தனை தடவை இருந்திருக்கே? 'ரன் மெஷின்'னு பட்டப் பேர் வாங்கியவனாச்சே...! நீ போல் பண்ணினா, எதிரி கையிலே கடுக்காய் கொடுத்த மாதிரி! எத்தனை விக்கெட்டை பெவிலியனுக்குத் திருப்பி இருக்கே! ஒரே நேரத்திலே ஏழு விக்கெட் எடுத்திருக்கே இல்லே! உன்னைப் பார்த்து நான் ஆச்சரியப்பட்டிருக்கேன்! உன் கிட்டே இல்லாததை நினைச்சு ஏங்குகிறதை விட, இருக்கிற திறமையை வளர்த்துக்கலாமே! ஆண்டு விழாவிலே நாடகத்திலே, ஷைலக்கா நடிச்சியே! அந்த நடிப்பை என்னாலே மறக்கவே முடியாது! எத்தனை பேர் பாராட்டினாங்க அன்னிக்கு! ராமுன்னா இதெல்லாம்தான் நினைவுக்கு வரது எனக்கு! அப்படிப்பட்ட ராமுவை எங்களுக்கு இல்லாமப் பண்ணப் பார்த்தியே! அது நியாயமா?

வான்குருவி யின் கூடு வல்லரக்குத்
தொல் கரையான்,
தேன்சிலம்பி யாவர்க்குஞ்
செய்யரிதால்;—யாம் பெரிதும்
வல்லாமே என்று வலிமை சொல
வேண்டாங்காண்!
எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது.

இந்தப் பாட்டை விளக்கி, கதை மாதிரி அர்த்தம் சொன்னாரே போன வருஷம் தமிழ் வாத்தியார், ஞாபகமிருக்கா? என்ன அழகான, அர்த்தம் பொதிந்த பாடல்!

''கம்பரைப் போலக் காவியம் பாட முடியாதுன்னு சோழன் சூளுரைக்க, ஔவையார், ''ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு காரியம் செய்கிறது கலபம். தூக்கணாங்குருவி மாதிரி கூடு கட்டவும், கரையான் மாதிரி மண்ணைக்கொண்டு அழகாய்ப் புற்று அமைக்கவும் எல்லோராலும் முடியுமா? சிலந்திக் கூடு, தேன் கூடெல்லாம் எத்தனை நேர்த்தியா இருக்கு...! அவை மாதிரி நம்மாலே கூடு கட்ட முடியுமா? முதலிலே படிக்கிற மாணவனைப் பார்த்து ஏமாறுகிறதை விடு... உன்னைப் பத்துப் பேர் பாராட்டுகிற மாதிரி நடந்து காட்டணும், என்ன?''



ராமு ஓடிவந்து மோகனை அணைத்துக் கொண்டான்.

''மோகன், என்ன ஞாபக சக்தி உனக்கு! அதோட அதைப் பொருத்தமா உபயோகப்படுத்தற புத்தி கூர்மை! நிஜமா உன் நண்பன்னு சொல்லிக்க நான் பெருமைப்படறேன். தூங்கிக்கிடந்த என் மந்தத் தனத்தை நீ தூண்டி விட்டுட்டே... நான் பிரகாசிச்சா அந்தப் பெருமை உனக்குத்தான் சொந்தம்! அடுத்த வருஷம் நீயும் என்கூடப் படிக்கணும். எங்கப்பா கிட்டே சொல்லி உனக்குப் புஸ்தகம், நோட்டெல்லாம் வாங்கித் தரச் சொல்றேன்'' என்று தொண்டை தழுதழுக்கக் கூறினான்.

''அதெல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம். வா, நேரமாச்சு, படுக்கலாம்'' என்று மோகன் பேச்சை முடித்தான்.

அழைப்பு மணியை அழுத்திவிட்டுக் காத்திருந்தான் மோகன்.

லட்சுமிகரமான முகத்துடன் ஓர் அம்மாள் ஒரு பக்கத்துக் கதவைத் திறந்தாள். முகத்தில் ராமுவின் சாயல்!

''யார் தம்பி? என்ன வேணும்?'' அன்புடன் விசாரித்தாள்.

''என் பெயர் மோகன். ராமுவைப் பற்றி ஒரு தகவல் சொல்லணும்'' மோகன் சொல்லவும் மறுபக்கத்துக் கதவையும் படீரெனத் திறந்தாள். மிகுந்த பரபரப்புடன், ''என்ன சொன்னே! ராமுன்னு... எங்க ராமுவா? அவனை நீ பார்த்தியா? உள்ளே வாப்பா... இப்படி உட்காரு'' சோபாவைக் காட்டினாள்.

மோகன் தயக்கத்துடன் உட்கார்ந்தான்.

''என்னப்பா சாப்பிடறே? காப்பியா, டீயா, போர்ன்விடாவா?'' அடுக்கிக் கொண்டே போனாள்.

''எதுவும் வேண்டாம்மா....'' என்றவன்,

''ராமுவோட அப்பா இல்லியா?'' என்று சுற்றுமுற்றும் பார்த்தான்.

''குளிக்கிறாரப்பா'' என்றவள், உட்பக்கம் திரும்பி ''சீக்கிரம் குளிச்சுட்டு வாங்கோ... நம்ம ராமுவைப் பத்தின சமாச்சாரத்தோட ஒரு பையன் வந்திருக்கான்'' என்று உரத்த குரலில் கூறினாள்.

''ராமுவைப் பார்த்தியா? அவன் இப்போ எங்கே இருக்கிறான்? எப்படி இருக்கிறான்?'' என்று ஆவலாகக் கேட்டாள்.

அரைகுறையாகத் துடைத்த சரத்தோடு வேஷ்டியைச் சுற்றியபடி 'யாரு?' என்றபடி வந்தார் ராமுவின் தந்தை. அவரைக் கண்டு மோகன் திடுக்கிட்டான்! (தொடரும்)



நானும் ஒரு கவாஸ்கராய் ஆகப் போகிறேன்!

புகைப்படம்:

எம். வி. ரமணி


விக்கிரமாதித்தன் அமர்ந்து செங்கோலோச்சிய தெய்வீக ரத்தின சிம்மாசனத்தைப் பற்றிய கதை இது.
கதை: ஆனந்தி
படம்: விஜு
கனகமணி சிம்மாசனம்
உஜ்ஜயினி பட்டிணத்திலிருந்து போஜமகாராஜன் ஆண்டு வந்தார். அவரும் நீதி வாக்கிய மந்திரியும் குடிகளின் நலத்தில் கவனமாக இருந்தார்கள்.
அஞ்ச வேண்டாம். மந்திரி! வேட்டைக்கு ஏற்பாடு செய்யுங்கள்.
ஒரு கிராமத்து ஆள் மன்னனைப் பார்க்க வந்தான்.
அரசே! துஷ்ட மிருகங்கள் நாட்டுக்குள் வந்து தொல்லை கொடுக்கின்றன.
துஷ்ட மிருகங்களைத் துரத்திக் களைத்துப் போனார்கள்.



அரசர் இளைப்பாறுவதற்குத் தகுந்த இடம் அருகிலிருக்கிறதா, நீர்நிலை தென்படுகிறதா பாருங்கள்.
காட்டை ஒட்டி ஒரு கம்பங் கொல்லை. அருகில் சுனையும் இருக்கிறது.
கம்பங் கொல்லையில் பரண் கட்டி அமர்ந்திருந்தான் சரவண பட்டன். கவண் கற்களை வீசிப் பறவைகளை ஓட்டுவான்.
வாருங்கள் அரசரே! பாக்கியம் செய்தவனானேன். வேண்டிய பழங்களைச் சாப்பிடுங்கள். பரிவாரத்தோடு தங்கி இளைப்பாறுங்கள்.
சரவணபட்டனே! நன்றி.
வீரர்கள் தோட்டத்தில் புகுந்து பழங்களையும் கம்புக் கதிர்களையும் தின்னத் தொடங்கினார்கள். அரசன் தாகம் தணித்துக் கொண்டான்.
சுனைநீர் கூட அமுதமாக இனிக்கிறதே!
சரவணபட்டன் சற்று நேரத்தில் கீழே இறங்கினான். உடனே அரசனிடம் ஓடி வந்தான்.
அரசே! இது என்ன அநியாயம்? தங்கள் வீரர்கள் இப்படிப் பயிரை நாசம் செய்கிறார்களே! ஏழை பிராமணனின் சொத்தை அபகரிக்கலாமா?


மந்திரி! இந்த அந்தணனுக்கு நாம் நஷ்டம் உண்டாக்கி விட்டோம். உடனே கிளம்பி விட வேண்டும்.
அரசர் கூறியதைக் கேட்ட வீரர்கள் குனிந்த தலையுடன் வெளியேறினார்கள்.
அதிசயம் தான். பரண் மேல் நிற்கும் போது உத்தமனாகவும், இறங்கிய உடனே சுயநலம் மிக்கவனாகவும் இருக்கிறேனே!
மீண்டும் பரண் மீது ஏறினான் சரவண பட்டன். மனம் மாறி போகிற வீரர்களை கூவி அழைத்தான்.
அரசே! ஏன் போகிறீர்கள்? களைப்பு தீர இன்னும் சற்று நேரம் தங்கி, பசியாற உண்டு செல்லுங்கள்.
இந்தப் பரணில் ஏதோ விசேடம் இருக்கிறது.
மந்திரி சரவண பட்டனை அழைத்து...
அந்தணரே! இந்தத் தோட்டத்தை நான் விலைக்கு வாங்கிக் கொள்கிறேன். இன்னும் அதிக விளைச்சலுள்ள நிலத்தை அரசர் தங்களுக்குத் தருகிறார்.
அப்படியே! தங்களுக்கு இல்லாமல் வேறு யாருக்கு?
சரவணபட்டன் போன பிறகு பரண் மீது ஏறிப் பார்த்தார் அரசர்.
இந்த இடத்தில் நிற்கும் போது மனத்தில் நல்ல எண்ணங்கள் தோன்றுகின்றன. இதன் அடியில் தோண்டிப் பார்க்க வேண்டும்.



வீரர்கள் மண்ணை
அகழ்ந்தபோது
ணங், ணங்
என்ற ஒலி கேட்டது.
பள்ளத்தில் திவ்விய ஒளி வீசும் பொன்
மயமான சிம்மாசனம். வீரர்கள்
அதை வெளியே எடுக்க முனைந்தார்கள்
முடியவில்லை.
என்ன அதிசயம்!
சிம்மாசனத்தை
நகர்த்தமுடிய
வில்லையே!
இது தெய்வத் தன்மை கொண்டது.
தகுந்த முறையில் பூஜித்து
வேண்டினால் வெளியே
எடுக்கலாம்.
உஜ்ஜயினியில்
ஒரு புதிய
மண்டபத்தில்
சிம்மாசனத்தை
வைத்தார்கள்.
நீராட்டி
ஆரத்தி
சுற்றினார்கள்.
போஜன் சிம்மாசனத்தில் ஏறி
அமர்வதற்காக வலது காலை
முதற் படியில் வைத்தான்.
படிகளின் மீது நின்ற முப்பத்
திரண்டு பதுமைகளும்
சிரித்தன.
பதுமைகளே!
ஏன் சிரிக்கிறீர்கள்?
இந்த சிம்மாசனம்
யாருக்குரியது?
அரசனே! இதில்
அமர்ந்து அரசாண்ட
மாமன்னர் விக்கிர
மாதித்தன்.
அவருக்கு நிகரான
தகுதி உங்களுக்கு
இருக்குமானால்
நீங்களும் இதில்
அமரலாம்.



விக்கிரமாதித்தனின் சிறப்புக்களை எடுத்துச் சொன்னால் கேட்கிறேன்.
விநோத ரஞ்சிதப் பதுமை சொன்ன விக்கிரமாதித்தனுடைய கதை...
சந்திரவர்ணன் என்று ஒரு பிராமணன். அறிவாளியாக இருந்தும் மேலும் படிக்க விரும்பி குருவைத் தேடிக் கிளம்பினான்.
சுற்றி அலைந்து ஒரு மலை படிவாரத்தில் அரச மரத்தடியில் படுத்துக் கொண்டான்.
அந்த மரத்தில் சாபத்தினால் பிரும்ம ராக்ஷஸன் வடிவம் அடைந்த முனிவர் தவம் இயற்றிக் கொண்டிருந்தார். அவர் பிராமண வடிவத்துடன் வந்தார்.
ஏனப்பா காட்டில் தனியே வந்தாய்?
சுவாமி! நான் தேடி வந்தவர் தாங்கள் தான் என்று தோன்றுகிறது. என் குருவாக இருந்து கற்பிக்க வேண்டும்.
நீ ஆறுமாதம் உணவு உறக்கம் இல்லாமல் இந்த மரத்தடியிலே படித்தால் உன் ஆசை நிறைவேறும். மரத்தின் மீதிருந்து ஒவ்வொரு இலையாக பறித்து எழுதிப் போடுவேன். படித்துக் கொள்.
அப்படியே செய்கிறேன்!
ஒரு நல்ல சீடனுக்கு வித்தை கற்பித்த புண்ணியத்தால் சாபம் நீங்கிய ரிஷியை அழைத்துப் போக தேவ விமானம் வந்தது.
மகிழ்ச்சியுற்ற ரிஷி வரமளித்தார்.
சந்திர வர்ணா! உன் குலத்தில் மகத்தான கீர்த்தியும் அறிவும் பெற்ற மாமன்னன் தோன்றுவான்.


சந்திரவர்ணன் கன்னியாபுரி என்ற நகரத்துக்கு வந்தான். அங்கே அரசனுடைய அன்புக்குப் பாத்திரமாகி நான்கு பெண்களை மணந்து கொண்டான்.
அவனுக்கு நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள். வல்லவரிஷி, விக்கிரமாதித்தன், பட்டி, பர்த்ருஹரி.
கன்னியாபுரி மன்னன் சந்திர வர்ணனை அரசனாக்கி விட்டு இறந்தான். ஆண்டுகள் பல சென்றன.
மூத்த மகன் தவ வாழ்க்கையை விரும்பினான். சந்திரவர்ணன் இறந்த பிறகு பர்த்ருஹரிக்குப் பட்டம் கட்டி விட்டுக் காட்டுக்குப் போய் விட்டான்
பர்த்ருஹரி பல ஆண்டுகள் கன்னியாபுரியை ஆண்டான். பிறகு தன் மனைவி மோகனாங்கி செய்த துரோகத்தால் மனம் வெறுத்துக் காட்டுக்குப் போய் விட்டான்.
அதன் பிறகு முடி சூடிய விக்கிரமாதித்தன் தம்பி பட்டியின் உதவியோடு நீதி தவறாமல் அரசாண்டான். மக்கள் கன்னியாபுரியை நாடி வந்த வண்ணம் இருந்தார்கள்.
ஒரு நாள் விக்கிரமாதித்தன் பட்டியை அழைத்து...
பட்டி! நமது நாடு சின்னதாக இருக்கிறது. ஒரு புதிய தலைநகரம் நிறுவ ஆசை. தகுந்த இடத்தைத் தேடிக் கண்டு பிடி!
உடனே புறப்படுகிறேன்.
குணவதி என்ற ஆற்றங் கரையை அடைந்தான் பட்டி.
என்ன அழகான இடம்! குளத்தின் நடுவே பளபளக்கும் ஈட்டி! மலையடிவாரத்தில் கோபுரம்.


பட்டி தடாகத்தில் ஸ்நானம் செய்து கோவிலுக்குள் சென்றான்.
ஆகா! பத்திரகாளி கோவில். அன்னையே இந்த இடத்தில் தலைநகரம் அமைக்க அருள் புரிய வேண்டும்.
கோயில் துவஜ ஸ்தம்பத்தினருகே பட்டி.
இது என்ன கல்வெட்டு?
குளத்தில் மூழ்கி ஆலமரத்தில் தொங்கும் ஏழு உறிகளையும் ஒரே வெட்டில் வீழ்த்தி
யார் குளத்தின் மத்தியில் உள்ள ஈட்டி முனையில் பாய்கிறாரோ அவருக்குப் பத்திரகாளி தரிசனம் தருவாள்.
தலைநகர் திரும்பினான் பட்டி.
அரசே! குணவதி ஆற்றங்கரை புதிய தலைநகரம் அமைக்க ஏற்ற இடம்.
கல்வெட்டினருகே விக்கிரமாதித்தன்.
பட்டி! தேவியின் அருளைப் பெற்று விட வேண்டும்.
தங்களால் இயலாதது எதுவுமே இல்லை.
ஏழு உறிகளையும் பார்த்துத் திகைத்தார் விக்கிரமாதித்தன்.
அரசே! ஏழும் முறுக்கிக் கொள்ளச் செய்தால் ஒரே வெட்டில் துணித்து விடலாம்.




மரக்கிளையிலிருந்து இனத்தின் மத்தியிலிருந்த பட்டி முனையில் பாய்ந்த விக்கிரமாதித்தனை காளிமாதா தாங்கிக் கொண்டாள்.
ஜெய் மகாகாளீ!
அன்னையே! தாங்கள் குடி கொண்டிருக்கும் இந்த இடத்தில் என் தலைநகரத்தை அமைக்க விரும்புகிறேன்.
உஜ்ஜயினி, மாகாளிப் பட்டிணம் என்ற பெயர் பூண்டு செல்வச் சிறப்புடன் திகழும். நெடுங்காலம் ஆட்சி புரிவாய்.
உன் வீரத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன். வரம் கேள்.
விக்கிரமாதித்தனும் பட்டியும் நிர்மாணித்த உஜ்ஜயினி பட்டிணத்தில் மக்கள் ஆர்வத்தோடு குடியேறினார்கள். காளி தேவியின் அருளால் தலைநகரம் கலைச் சிறப்பும் செல்வச் செழிப்பும் மிகுந்து விளங்கிற்று. விக்கிரமாதித்தன் புகழ் தேவருலகிலும் பரவியது.
இந்திர சபையில் நாட்டியக் கலையில் சிறந்தவள் ஊர்வசியா அரம்பையா என்று நிச்சயிக்க முடியாமல் தேவர்கள் திகைத்தார்கள்.
ஒரு முடிவுக்கும் வர முடியவில்லையே.
நாரதர் வந்தார்.
இந்தப் போட்டியில் நடுவராக இருப்பதற்கு விக்கிரமாதித்தனே தகுந்தவன்.
மாதலி! விமானத்தில் விக்கிரமாதித்தனை அழைத்து வா.


என்ன! ஒரு மனிதனை அழைத்து வருவதா?
மாதலி! தயங்க வேண்டாம்.
பூவுலகத்தில்
பட்டி! தேவேந்திரன் அழைக்கும்போது நான் உடனே போவது தான் முறை. நாட்டைப் பார்த்துக் கொள்.
தேரின் தட்டில் வலதுகால் பெருவிரலை வைத்ததுமே மாதலி விமானத்தை வேகமாகச் செலுத்த, உயரே கிளம்பியது விமானம். ஊன்றிய காலுடன் தடுமாறாமல் நின்றார் விக்கிரமாதித்தன்.
அரசே! மன்னிக்க வேண்டும். தங்கள் பெருமையை அறிந்து கொண்டேன்.
தேவேந்திரன் விக்கிரமாதித்தனை வரவேற்று...
வெற்றி பெற்றவருக்கு இந்தப் பாரிஜாத மாலையை நீங்கள் அணிவிக்க வேண்டும்.
ரம்பையும் ஊர்வசியும் வெகுநேரம் நடனமாடினார்கள்.
நாளை மறுபடியும் ஆடட்டும் பிறகு நிச்சயிக்கலாம்.
மறுநாள்.
என் கரங்களாலேயே கட்டிய இந்தப் பூச்செண்டுகளைப் பிடித்துக் கொண்டு ஆடினால் அழகாக இருக்கும்.


பூச்செண்டைத்
தூக்கி எறிந்து
விட்டாள் ரம்பை.
பூச்செண்டுகளில்
வண்டுகள் இருந்தன.
ஊர்வசி மென்மையாகப்
பிடித்துக் கொண்டு
ஆடியதால் தொட்ட
வில்லை. ரம்பை
அழுத்திப் பிடித்ததால்
கொட்டி விட்டது.
அதனால் தாளம்
தவறி விட்டது.
ஊர்வசியே
இலக்கண
வழுவில்லாமல்
ஆடுகிறாள்.
எப்படி
அறிந்தீர்கள்?
உன்னைப்
போன்ற
அறிவாளியை
நண்பனாகப்
பெற்றதில்
பெருமை
யடைகிறேன்.
இந்த இரத்தின
சிம்மாசனம் நான்
முடி சூடிக் கொண்ட
போது திருக்
கயிலாய மலை
யிலிருந்து
எனக்குக்
கொடுக்கப்
பட்டது. ஆயிரம்
ஆண்டுகள் இதில்
வீற்றிருந்து
அரசாண்டு
பெரும் புகழ்
பெறுவாய்.
பூவுலகம் திரும்பியதும்
பட்டி! ஆயிரம் ஆண்டுகள்
அரசாள்வேனென்று ஆசீர்
வதித்து விட்டாரே! நீ
இல்லாமல் எப்படி நான்
அரசாள முடியும்?
நான் காளி
யன்னையைக்
கேட்டு வரம்
வாங்கி வந்து
விடுகிறேன்.
வருந்தாதீர்கள்.


அர்த்தராத்திரியில் தேவி தரிசனம் கிட்டியபோது பட்டி சாதுர்ய மாக நடந்து கொண்டு இரண்டாயிரம் ஆண்டுகள் வாழ வரம் பெற்று விட்டான்.
பட்டி அரண்மனை திரும்பியதும்...
அடாடா! நான் இல்லாமல் நீ ஆயிரம் ஆண்டுகள் வாழும்படி ஆகி விட்டதே.
கவலைப்படாதீர்! சிம்மாசனத்தில் வீற்றிருந்துதானே ஆயிரம் ஆண்டுகள் அரசாள வரம் தந்தார். ஆறு மாதம் சிம்மாசனத்தை அலங்கரியுங்கள். ஆறு மாதம் நாட்டுக்குப் போய் விடுவோம். இருவரும் சமகாலம் வாழலாம்.
விநோத ரஞ்சிதப் பதுமை கூறியது.
மகாராஜனே! காளி யன்னையின் அருளைப் பெற்று, தேவர்களும் வியக்கும் படியாக விக்கிரமாதித்தன் அமர்ந்து செங்கோலோச்சிய சிங்காசனம் இது.
கதை முடியும்போது சுப வேளை தாண்டி விட்டது ஆகையால் அன்று நிகழ்ந்த அற்புதங்களை எண்ணிய படியே தூங்கச் சென்றார் போஜராஜன். இவ்வாறு ஒவ்வொரு நாளும் நடந்தது.
இன்னொரு பதுமை பேசியது.
போஜராஜனே! என் பெயர் மதனாபிஷேக வல்லி. எங்கள் அரசரான விக்கிரமாதித்தனின் பெருமையைச் சொல்கிறேன் கேளும்!



ஒன்றன் பின் ஒன்றாய் எல்லாப் பதுமைகளும் பேசின.
என் பெயர் கோமளவல்லி.
என் பெயர் சௌந்தரவல்லி.
நான் கூறும் கதையைக் கேளும்
நான் அபரஞ்சிவல்லி. கதையைக் கேளும்.
சுவர்ணகாந்தவல்லி.
ஒவ்வொரு கதையாகக் கேட்டுக் கொண்டு மேல் படி வரை ஏறி நின்றார் போஜராஜன்.
பதுமையே! உங்கள் அரசர் எப்படித்தான் முடிவை அடைந்தார்.
என் பெயர் ஞானப் பிரகாச வல்லி. எங்கள் மன்னருடைய வீரமரணத்தைக் கூறுகிறேன். சாலிவாகனன் என்ற ஒரு சிறுவன் தன் பாட்டனிடம் வளர்ந்து வந்தான்.
குயவனான பாட்டன் மண் பாண்டங்கள் செய்யும் போது சாலிவாகனன் களி மண்ணால் குதிரைகள் யானைகள் போர் வீரர்கள் ரதங்கள் முதலியன செய்வான். லட்சக் கணக்கான பொம்மைகளைச் செய்து வைத்தான்.


மிகவும் அறிவாளியாக விளங்கிய சாலிவாகனனை சைமபுரி மன்னன் அழைத்து...
எனக்கு நீங்கள் மந்திரியாக இருக்கவேண்டும்.
சில தினங்களில் விக்கிரமாதித்தனிடமிருந்து தூதன் வந்தான்.
சைமபுரி மன்னரே! தாங்கள் கப்பம் கட்டவில்லை என்பதைத் தங்களுக்கு நினைவூட்டச் சொன்னார் எனது மன்னர்.
எம்மை வெற்றி கொண்டு கப்பம் பெற்றுக் கொள்ளட்டும்.
தூதன் திரும்பியதும் விக்கிரமாதித்தன் பொங்கி எழுந்தான்.
பட்டி! படையுடன் சென்று சாலிவாகனனை வென்று வருகிறேன்.
தான் தயாரித்திருந்த மண் பொம்மைகளை நெருங்கிய சாலிவாகனன்..
வீரர்களே உயிர் பெற்றெழுங்கள். எனது மந்திர சக்தியால் வெற்றி பெற்று வாருங்கள்.

விக்கிரமாதித்தனுடைய படை நிர்மூலமாகியது.





நாங்கள் முப்பத்திரண்டு பேரும் கைலாயத்தில் உமையம்மையின் தோழிகளாக இருந்தோம். ஒரு நாள் விளையாடும் போது சிவ பெருமான் எழுந்தருளினார்.
எங்களுடைய அழகைப் பற்றிய கர்வம் மேலிட்டு, ஈசுவரனின் காந்தியால் கவரப்பட்டு நாங்கள் சிலை போல நின்றோம். உமை சபித்தாள்.
ஈசனையே மயக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்ட நீங்கள் இந்திரனுடைய சிம்மாசனத்தைக் காவல் புரியும் அலங்காரப் பதுமைகளானீர்கள்.
தேவி! மன்னித்து சாப விமோசனம் அருளுங்கள்.
தேவேந்திரனுடைய சிம்மாசனம் பூவுலகம் செல்லும். விக்கிரமாதித்தன் அரசாண்ட பின் உஜ்ஜயினி நகரம் மண்மேடிட்டுப் போகும். பல ஆண்டுகள் சென்றபின் இன்னொரு மாமன்னன் இந்த சிம்மாசனத்தைக் கண்டெடுப்பான். அப்போது நீங்கள் என்னை வந்தடைவீர்கள்.
போஜ ராஜரே! போய் வருகிறோம்! வரம் கேளுங்கள்.
நீங்கள் சொன்ன கதைகளைக் கேட்பவர்களும், சொல்பவர்களும் வீரமும் பலமும் உடையவர்களாய் மேன்மையடைய வேண்டும் என்பதே என் விருப்பம்.


நீதிவாக்கிய மந்திரி யோசனை கூறினார்.
இந்தப் பொற்சிங் காசனத்தில் பரமேசுவரனை வைத்து வழி படுவோம்.
சரி, நவ ரத்தி னங்கள் இழைத்துப் பசும் பொன் னில் செய்த சிவ பெருமானின் படிவத்தை உருவாக்குங்கள்.
ஈசன் பொற்சிலையை வைத்துப் பூஜித்தான் போஜ மன்னன். தேவ கன்னிகளாக மாறிய பதுமைகளின் உள்ளங்கள் குளிர்ந்தன.
ஆராதனை முடிந்ததும் ஒரு அற்புதம்! இனிய கீதம் ஒலிக்க அற்புத சிம்மா சனம் மெல்ல உயரே கிளம்பி தேவருலகு ஏகியது.
மாமன்னர் நீடூழி வாழ்க!
தேவ துந்துபிகள் முழங்கின. மேகக் கூட்டங்கள் திரண்டு வந்தன. மின்னல் கொடிகள் ஒளி வீசின. மன்னன் மீது புஷ்பங்களைத் தூவி ஆசி கூறிய தேவ கன்னிகள் சிம்மா சனத்துடன் வானில் சென்று மறைந்தனர்.

கலைப்பொருள் விற்பனைக் கடை

உலகப் புகழ்பெற்ற சிறுவர் கதை - 14

மூலம்: சார்லஸ் டிக்கன்ஸ்



தமிழ்ச் சுருக்கம்: எச். கிருஷ்ணமூர்த்தி

லண்டன் நகரத்தில் ஏழைகள் வாழும் பகுதி. அதில் பழைய கலைப் பொருள்களை விற்கும் ஒரு கடை. அங்கு தொன்மையான ஆயுதங்களும், அலங்காரப் பொருள்களும் நிறைய இருந்தன. அந்தக் கடைக்குச் சொந்தக்காரர் ஒரு தாத்தா. அவருக்கு நெல் (Nell) என்ற பெயருள்ள ஒரு சின்னப் பேத்தி. அவளுக்குச் சுமார் பத்து வயது இருக்கும். ரொம்ப அழகு. படுசுட்டி. எப்போதும் ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும் கடையில் சுற்றிக் கொண்டிருப்பாள். கடையின் மாடியில் அவர்கள் குடியிருந்தனர். ஓய்வு நாட்களில் நெல் தாத்தாவை உலாவ அழைத்துச் செல்வாள். அவருக்குக் கதைகள் படிப்பாள்.

நெல்லுக்கு அம்மா, அப்பா இல்லை. தாத்தா மட்டும்தான் அவளுக்குத் தெரிந்த ஒரே உறவு — தாத்தாவும், பேத்தியும் பாசமாக இருந்தனர். வாழ்க்கை இன்பமாக ஓடியது

சில நாட்களுக்குப் பிறகு, தாத்தாவின் பழக்க வழக்கங்களில் சில மாறுதல்கள் காணப்பட்டன நெல்லைத் தனியாக விட்டுவிட்டு அவர் இரவு நேரங்களை வெளியே கழித்தார். அதிகாலையில்தான் வீடு திரும்பினார். சிவந்த கண்களோடும், ஒளியிழந்த முகத்தோடும் அவர் சோகமாகக் காட்சி அளித்தார். நெல்லுடன் கலகலப்பாகப் பழகவில்லை. ஒரு பைத்தியக்காரனைப் போலத் தோன்றினார். தாத்தாவின் திடீர் மாறுதலுக்கான காரணம் நெல்லுக்கு விளங்கவில்லை. அவள் மனத்திற்குள்ளேயே புழுங்கினாள். ஆனாலும், அதை வெளிக்காட்டாமல் எப்போதும் போலத் தாத்தாவிடம் பழகி வந்தாள்.

ஒருநாள் தாத்தா குவில்ப் என்னும் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதி, அதை நெல்லின் மூலம் அனுப்பினார். குவில்ப் வயதானவன். அவனுக்கு வெள்ளைத் தலைமுடி; குள்ள உருவம்; கள்ளச் சிரிப்பு; கபட உள்ளம். பிறர் துன்பங்களில் அவன் இன்பம் கண்டான். அதிக வட்டிக்குக் கடன் கொடுத்துப் பணம் சேர்த்தான். நெல்லின் தாத்தாவுக்கு ஏற்கெனவே அவன் கடன் கொடுத்திருந்தான். மறுபடியும் கடன் கேட்டுத் தாத்தா எழுதிய கடிதத்துடன் நெல் குவில்ப்பைக் காண வந்தாள்.

கடன் வாங்கும் பணத்தையெல்லாம் தாத்தா என்ன செய்கிறார் என்று தெரிந்து கொள்ள விரும்பினான் குவில்ப். எனவே, தன் மனைவியைக் கூப்பிட்டுச் சிறிது நேரம் நெல்லுடன் பேசச் சொன்னான். அந்த இனிய பேச்சை நம்பிய நெல், மனம் திறந்து தன்னுடைய கஷ்டங்களையெல்லாம் விவரித்தாள். குவில்ப் அவற்றை மறைந்திருந்து கேட்டான். பிறகு, அவன் நெல்லின் முன்னால் வந்து கடிதத்தை வாங்கிக் கொண்டான் ''இரண்டு நாட்கள் கழித்து நானே

தாத்தாவை நேரில் வந்து பார்க்கிறேன்'', என்றான்.

நெல் திரும்பி வந்து தாத்தாவிடம் தகவல் சொன்னாள். பணம் கிடைக்கவில்லை என்று அறிந்ததும், அவர் ஏமாற்றமடைந்தார். இரண்டு நாட்கள் காத்திருந்தார். குவில்ப் வரவில்லை. அவர் பொறுமை இழந்தார். ''குவில்ப் ஏன் இன்னும் பணம் கொண்டுவரவில்லை? அவன் வருவதற்குள் நாம் எல்லாப் பொருள்களையும் இழந்து பிச்சைக்காரர்களாகி விடுவோம் போலிருக்கிறதே!'' என்று கதறினார்.

''இந்தஊரே எனக்குப்பிடிக்கவில்லை, தாத்தா. மனசுக்கு ரொம்பக்கஷ்டமாக இருக்கிறது. இப்போதே நாம் வேறு ஊருக்குப் போகலாம். பிச்சை எடுத்தாலும் பரவாயில்லை. அங்கு நிம்மதியாக வாழலாம்'' என்று சொல்லிவிட்டு நெல் அழுதாள்.

அப்போது குவில்ப் அந்த அறையில் நுழைந்தான். தனியாகப் பேச வேண்டுமென்று தாத்தாவைஅழைத்துச் சென்றான். ''நண்பரே! வற்றாத வருமானம் இருக்கிறது என்று பொய் சொல்லி, என்னிடம் கடன் வாங்கினீரே! உம்முடைய ரகசியத்தை நான் அறிந்துகொண்டேன். ஒவ்வொரு இரவும் நீர் விடுதிக்குச் சென்று, சூதாடிப் பணத்தை இழக்கிறீர். இனிமேல் என்னை ஏமாற்ற முடியாது. என்னிடமிருந்து பணம் எதுவும் எதிர்பார்க்க வேண்டாம்'' என்று கோபமாகக் கூறினான். பேத்தியின் எதிர்கால நலனுக்காகவே அவர் சூதாடுவதாகவும், அதில் ஜெயிக்க முடியுமென்று நிச்சயமாக நம்புவதாகவும், இன்னும் என்னென்னவோ சொல்லிக் கெஞ்சினார், தாத்தா. குவில்ப் மசியவில்லை. ''இந்த வீட்டையும், இதிலுள்ள பொருள்களையும் ஏற்கெனவே என்னிடம் அடமானம் வைத்திருக்கிறீர்கள். இவற்றைக் கைப்பற்றும் உரிமை எனக்கு உண்டு. நினைவிருக்கட்டும்.'' என்று குவில்ப் மிரட்டிவிட்டுப் போனான்.

குவில்ப் போனதும் தாத்தாவுக்கு உடம்பு படபடத்தது. தலை சுற்றியது. அவர் கீழே சரிந்தார். நெல் சிரமப்பட்டுத் தாத்தாவைப் படுக்கையில் எடுத்துப் போட்டாள். அண்டை வீட்டாரிடம் சொல்லி மருத்துவரை வரவழைத்தாள். பல நாட்கள் தாத்தா படுக்கையிலேயே கிடந்தார். அவருக்கு நோய் முற்றியது. நெல் பொறுமையோடும், அன்போடும் பணிவிடைகள் செய்தாள். அவர் குணமடைய வேண்டுமென்று தினமும் தெய்வத்தைத் தொழுதாள். நோய் படிப்படியாகத் தீர்ந்தது.

மாடிப்பகுதியில் தாத்தா நோயுற்றுக் கிடந்த போது, அந்த வீட்டின் கீழ்ப்பகுதியை குவில்ப் ஆக்கிரமித்துக் கொண்டான். கடையையும் அதிலிருந்த பொருள்களையும் அவன் கைப்பற்றினான். அவனுக்கு பிராஸ் என்ற கீழ்த்தரமான ஒரு வக்கீல் துணையாக இருந்தான். குவில்ப்பும், பிராசும் அந்தக் கடையிலேயே வசிக்கத் தொடங்கினர்.

தாத்தாவுக்கு உடம்பு சரியானதும் குவில்ப் ஒருநாள் மாடிக்குச் சென்று அவரைப் பார்த்தான். ''நண்பரே! என்னிடம் நீங்கள் வாங்கிய கடனுக்கு ஈடாக உங்கள் கடையை எடுத்துக் கொண்டுவிட்டேன். மேலும் உங்கள் வீட்டில் இருக்கும் பொருள்களையும் நான் விற்றுவிட்டேன். ஆகவே, சீக்கிரத்தில் வீட்டைக் காலி செய்யுங்கள்'' என்று இரக்கமில்லாமல் சொன்னான். ''அடுத்த வெள்ளிக்கிழமை காலி செய்கிறேன்'', என்று தாத்தா அமைதியாகப் பதிலளித்தார். அந்தச் செய்தி நெல்லுக்குத் தெரியாது.

வியாழக்கிழமை வந்தது. தாத்தா நெல்லை அழைத்துக் கண்ணீர் சொரிந்தார். ''என்னை மன்னித்து விடு, அம்மா! உனக்குப் பெரிய கஷ்டத்தை வரவழைத்து விட்டேன்'' என்று சொல்லி அவள் முன்னால் மண்டியிடப் போனார். நெல்லுக்கு ஒன்றும்

பாம்பு எங்கே?

பார்வதி: என்ன, உங்க கழுத்திலே கிடந்த பாம்பைக் காணோம்!

பரமசிவன்: கைலாசத்திலே ஒரு ஷூட்டிங்காம். அதுக்குத் தேவைப்படுதுன்னு வாங்கிப் போயிருக்காங்க.

-சிவ. கனகசபை



விளங்கவில்லை. அவள் அவரைத் தடுத்து நிறுத்தி, ''தயவு செய்து இப்படி எல்லாம் பேசாதீர்கள், தாத்தா. வேறு ஏதாவது பேசுங்கள்'' என்று கெஞ்சினுள்.

''சில மாதங்களுக்கு முன்பு அயலூருக்குப் போகலாம் என்று ஆலோசனை சொன்னுயே, நினைவிருக்கிறதா, நெல்? இப்போது அதற்கு வேளை வந்து விட்டது. நான் இந்த மாதிரிப் பேசுவது யார் காதிலாவது விழுந்தால் என்னைப் பைத்தியம் என்று நினைப்பார்கள். உடனே, உன்னை என்னிடமிருந்து பிரித்து விடுவார்கள். ஆகவே, யாருக்கும் தெரியாமல், நாம் கடவுள் மீது பாரத்தைப் போட்டுவிட்டுக் கண்காணுத ஊருக்குப் போய்விடுவோம். நாளை விடியற் காலையிலேயே இந்தத் துன்பமான ஊரைவிட்டுத் தொலை தூரம் போவோம்'' என்று தாத்தா மளமள வென்று பேசினுர். நெல் இசைந்தாள்.

அன்றிரவு தாத்தா நன்ருகத் தூங்கினுர். நெல் தனக்கும், தாத்தாவுக்கும் வேண்டிய துணிமணிகளையும், உணவுப் பொருள்களையும் எடுத்து வைத்துக் கொண்டாள். வெள்ளிக் கிழமை அன்று விடியற்காலையிலேயே நெல் எழுந்தாள். தாத்தாவிடம் கைத்தடியையும் ஒரு சிறிய தோல் பையையும் கொடுத்தாள். தான் ஒரு கூடையைக் கையில் எடுத்துக்கொண்டாள். வீட்டின் கீழ்ப் பகுதியில் குவில்ப்பும், பிராசும் தூங்கிக் கொண்டிருந்தனர். அவர்களை எழுப்பாமல் தாத்தாவும், பேத்தியும் தெருவை அடைந்தனர்.

''எந்த வழியாகப் போகிறேம், தாத்தா?'' நெல் கேட்டாள். தாத்தா ஒன்றும் புரியாமல் விழித்தார். தாத்தாவின் ஆதரவற்ற நிலையையும், தான் இனிமேல் அவருக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டிய அவசியத்தையும் நெல் நொடியில் உணர்ந்தாள். ஆனல், அவள் சிறிதும் பயப்படவில்லை. தன் பிஞ்சுக் கையால் அவருடைய முதிர்ந்த கையைப் பிடித்துக் கொண்டு மெதுவாக அவரை அழைத்துச் சென்ருள். தாத்தாவை அழைத்துக்கொண்டு நெல் நீண்ட பாதையில் நம்பிக்கையோடு நடந்து கொண்டிருந்தாள்.

களைப்பு வந்த போது அவர்கள் ஆங்காங்கே தங்கி இளைப்பாறினர். பிறகு பயணத்தைத் தொடர்ந்தனர். சில நாட்களில் லண்டனிலிருந்து வெகு தூரத்தில் இருந்த ஒரு கிராமத்தை அடைந்தனர். அங்கிருந்த மாதா கோவிலின் தோட்டத்திற்குச் சென்று ஓய்வெடுத்தனர். ஏற்கெனவே இரண்டு பொம்மலாட்டக்காரர்கள் அங்கு வந்திருந்தனர். அவர்கள் மாலை ஆட்டத்திற்காகப் பொம்மைகளைச் சீர்ப்படுத்திக் கொண்டிருந்தனர். பொம்மைகளின் ஆடைகளைத் தைக்க அவர்களிடம் ஊசியும், நூலும் இருக்கவில்லை. அதைக் கண்ட நெல், தானே முன்வந்து ஆடைகளைத் தைத்துக் கொடுத்தாள். அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில், நெல்லும், தாத்தாவும் இரண்டு நாட்கள் அவர்களுடன் தங்கிப் பொம்மலாட்டங்களைக் கண்டு களித்தனர்.

லண்டனில் உள்ள யாருக்கோ பயந்து கொண்டு தாத்தா தப்பிச் செல்வதாகப் பொம்மலாட்டக்காரர்கள் சந்தேகித்தனர். தாத்தாவையும், பேத்தியையும் காட்டிக் கொடுத்தால் நல்ல பரிசு கிடைக்கும் என அவர்கள் பேசிக் கொண்டனர். நெல் தற்செயலாக அதைக் கேட்டாள். அவர்கள் அயர்ந்திருந்த வேளையில் தாத்தாவை அழைத்துக்கொண்டு அவள் நழுவினுள்.

காடு, மேடுகளைக் கடந்து அவர்கள் இருவரும் அடுத்த ஊரை அடைந்



டாக்டர்கள் கூட்டம்

“என்ன இது! கண் டாக்டர்களெல்லாம் கூட்டமாக் கூடிப் பேசுறுங்களே!”

“ராவணனுக்குக் கண் சரியாத் தெரியல்லியாம். பத்துத் தலைக்கும் சேர்ந்து ஒரே கண்ணுடியாப் போடுறதா அல்லது தலைக்கு ஒண்ணு வீதம் போடுறதான்னு ஆலோசனை பண்ணுறுங்க”

-சிவ. கனகசபை

தனர். அங்கு ஒரு சிறிய பள்ளிக் கூடம் இருந்தது. அதன் ஆசிரியர் இனிய குணம் படைத்தவர்; பண்பாளர். அவர் ஏழையாக இருந்தாலும், நெல்லையும், தாத்தாவையும் வரவேற்று உபசரித்தார். அவருடன் இரண்டு நாட்கள் தங்கிவிட்டு அவர்கள் இருவரும் அடுத்த ஊரை நோக்கி நடந்தனர்.

வழியில் அவர்கள் ஒரு விநோதமான குதிரை வண்டியைப் பார்த்தனர். சக்கரங்களுடன் கூடிய ஒரு வீட்டைப் போல அது தோன்றியது. வண்டியின் பின்புறம் ஒரு வயதான அம்மையார் அமர்ந்து தேனீர் பருகிக் கொண்டிருந்தார். அவர் நெல்லையும், தாத்தாவையும் அழைத்து அன்போடு விசாரித்தார்; உணவளித்து உபசரித்தார். நெல் அந்த வண்டியை நோக்கினாள். சமையலறை, புகைபோக்கி, படுக்கை அறை, ஜன்னல் — எல்லாம் அழகாகவும், கச்சிதமாகவும் இருந்தன. இங்கிலாந்தின் புகழ் பெற்ற ஜார்லி மெழுகுப் பொம்மைக் காட்சியின் உரிமையாளர் அந்த அம்மையார்.

அவருடைய பெயர் திருமதி ஜார்லி. அந்த விநோத வண்டியில் அவர் ஊர் ஊராகச் சென்றார். மெழுகுப் பொம்மைகள் வேறு இரண்டு வண்டிகளில் வந்தன. அவருக்கு உதவி ஆட்கள் தேவைப்பட்டனர். நெல்லையும், தாத்தாவையும் தனக்கு உதவியாக அமர்த்திக் கொண்டாள். இருவரும் அந்த அம்மையாருடன் பயணத்தைத் தொடர்ந்தனர்

அடுத்த ஊரில் மெழுகுப் பொம்மைக் காட்சி அமர்க்களமாக நடந்தது. பார்வையாளர்களுக்கு வழிகாட்டியாக நெல் பணியாற்றினாள். அந்தக் காட்சியில் ஏராளமான பொம்மைகள் இருந்தன. ஒவ்வொரு பொம்மைக்கும் ஒரு கதை இருந்தது. ஜார்லி அம்மையார் அந்தக் கதைகளை நெல்லுக்கு விரிவாகச் சொன்னார். நெல் விரைவில் கற்றுக் கொண்டாள. நெல்லின் அழகான தோற்றமும், தெளிவாகக் கதை சொல்லும் திறமையும் பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்தன. அவர்கள் பொம்மைகளின் அழகைவிட நெல்லின் அழகைப் பாராட்டிச் சென்றனர். கூட்டம் கூடியது. வசூல் அதிகரித்தது. ஜார்லி அம்மையார் சந்தோஷமடைந்தார். நெல்லுக்கும், தாத்தாவுக்கும் வருமானம் கூடியது. நெல் தன் வருமானத்தைச் சேமித்தாள். அவளுடைய துன்பங்கள் தீர்ந்தது போலத் தோன்றியது.



நெல்லின் அதிர்ஷ்டம் நீடிக்கவில்லை. துன்பம் அவளைத் தொடர்ந்தது. ஒரு விடுமுறை நாளில் நெல்லும், தாத்தாவும் வெகு தூரம் உலாவச் சென்றனர். திடீரென்று பெருமழை பிடித்துக் கொண்டது. மின்னல் வெட்டியது. இடிஇடித்தது. இருவரும் நன்றாக நனைந்து விட்டனர்; சாலை ஓரம் இருந்த ஒரு விடுதியில் ஒதுங்கினர். விடுதியின் சொந்தக்காரர் அவர்களை வரவேற்றுத் தணல் சட்டிக்கு அருகில் அழைத்துச் சென்றார். அவர்கள் குளிர் காய்ந்தனர். தணல் சட்டிக்கு அருகில் ஒரு திரை தொங்கியது. திரைக்குப் பின்னால் சில ஆட்கள் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய குரல் நன்றாகக் கேட்டது. மேசையிலிருந்த பணம் கைமாறிக் கொண்டிருந்தது.

''நெல்! அவர்கள் சீட்டு ஆடுகின்றனர். அவர்கள் பேசுவது உன் காதில் விழவில்லை?'' — தாத்தா உற்சாகமாகக் கேட்டார். நெல் அமைதியாக இருந்தாள். மேசையில் பணம் புரளும் சப்தம் அதிகரித்தது. தாத்தாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அவருடைய ஆசையும் அதிகரித்தது.

''ஏனம்மா நெல்,இன்னுமா உனக்குக் கேட்கவில்லை?'' — தாத்தா பரபரப்பாகக் கேட்டார். அவருடைய பேச்சில் ஓர் ஆவேசம். முகத்தில் ஒரு வெறி. அவர் முற்றிலும் ஒரு புதிய மனிதனாக மாறியிருப்பதைக் கண்டு நெல் அதிர்ச்சியடைந்தாள்.

''உன்னிடம் எவ்வளவு பணம் இருக்கிறது நெல். அதைக் கொடு'', —தாத்தா கேட்டார்.

''பணம் என்னிடமே இருக்கட்டும். மழையில் நனைந்தாலும் பரவாயில்லை, வாருங்கள், இங்கிருந்து போகலாம்'', என்று நெல் அழைத்தாள்.

''மரியாதையாகப் பணத்தை எடு'' தாத்தா மிரட்டினார். நெல் அழத் தொடங்கினாள்.

''அழாதே, நெல். சும்மா வேடிக்கைக்காக அப்படிப் பேசினேன். உன்னை ஒரு பெரிய பணக்காரி ஆக்குவதற்காகத்தானே இப்போது பணம் கேட்கிறேன், கொடு அம்மா'' என்று தாத்தா இனிமையாகக் கேட்டார்.

''வேண்டாம், தாத்தா. இந்த ஆட்டத்தில் பணத்தை இழப்பதை விட வேறு எங்காவது எறிந்து விடுவதே மேல். முதலில் இந்த இடத்தை விட்டு நகருவோம்; வாருங்கள்'', என்று கெஞ்சினாள் நெல்.

தாத்தாவின் கண்டிப்பு அதிகரித்தது. நெல்லுக்கு வேறு வழியில்லை. அவள் தன்னுடைய பணப்பையை வெளியே எடுப்பதற்குள் தாத்தா அதைப் பிடுங்கிக்கொண்டு சீட்டு ஆடும் மேசைக்கு விரைந்தார். அங்கிருந்தவர்கள் சீட்டாட்டத்திலேயே ஊறியவர்கள். தாத்தாவை ஏமாற்றி எளிதில் காசு பறிக்கலாம் என்று தெரிந்ததும், அவர்கள் அவரை உற்சாகமாக வரவேற்றனர்.

விடுதிக்கு வெளியே புயல் அடித்தது. மழை கொட்டியது. சிறுமி நெல் தாத்தாவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, அவர் சீட்டு ஆடுவதைக் கவனித்தாள். அவர் ஒரு பைத்தியக்காரனைப் போல வெறி பிடித்து ஆடிக் கொண்டிருந்தார். நெல்லின் பணப்பை காலி ஆகியது. சூதாடிகள் தாத்தாவின் முழுப் பணத்தையும் ஜெயித்து ஏப்பம் விட்டனர்.

இரவு வெகு நேரமானதால் நெல்லும், தாத்தாவும் அந்த விடுதியிலேயே தங்கினர். அவர்களுக்குத் தனித் தனி அறைகள் ஒதுக்கப்பட்டன. தனியாக நெல் கொஞ்சம் பணம் வைத்திருந்தாள் அதிலிருந்து அறைக்கு வாடகையைக் கட்டிவிட்டு மீதிப் பணத்தைப் பையில் வைத்திருந்தாள். வெகுநேரம் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. திடீரென்று ஓர் ஆள் அவளுடைய அறைக்குள் நுழைந்து அந்த இருட்டில் அவளுடைய பணத்தைத் திருடிச் சென்றான். அது வேறு யாருமல்ல; தன்னுடைய தாத்தா தான் என்று அறிந்ததும் நெல் மிகுந்த அதிர்ச்சி அடைந்தாள். மறுநாள் காலை அவர்கள் ஜார்லி அம்மையாரின் வீட்டுக்குப் புறப்பட்டனர்.

முந்தைய இரவு திருட்டைப் பற்றி நெல் எவ்வளவு நாசூக்காகக் கேட்டும், தாத்தா, சரியாகப் பதில் சொல்லவில்லை. ''இன்னும் எவ்வளவு பணம் வைத்திருக்கிறாய்?'' என்று திருப்பிக் கேட்டார். ''ஒரு காசுகூடக் கிடையாது'' என்றாள் நெல் தீர்மானமாக.

அன்று முதல் சூதாட்ட விடுதிக்குத் தாத்தா தினந்தோறும் போனார். இரவுப் பொழுதை அங்கேயே கழித்தார். கைப்பொருளையும் இழந்தார். நெல்லுக்குத் துக்கம் தாங்க முடியவில்லை. ஆனால், அந்த விஷயத்தை வெளியே சொல்லவும் முடியவில்லை. சொன்னால் அவருக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது என்று கூறி அவரைப் பைத்தியக்கார விடுதியில் சேர்த்துவிடு

வார்கள். ஆகவே, நெல் மனத்துக் குள்ளேயே கஷ்டப்பட்டாள்.

ஒருநாள் நெல் தனியாக உலவச் சென்றாள். திரும்புவதற்குள் நன்றாக இருட்டி விட்டது. ஒரு செடியின் மறைவில் சிலர் பேசுவது கேட்டது. தாத்தாவின் குரலும் அங்கு ஒலித்தது. எனவே, நெல் கூர்ந்து கேட்டாள். ஜார்லி அம்மையாரின் பணப்பெட்டியைத் திருடிக்கொண்டு வருமாறு சூதாட்ட நண்பர்கள் தாத்தாவைத் தூண்டினர். முதலில் மறுத்தாலும், தாத்தா, பின்பு அதற்கு ஒப்புக் கொண்டார். நெல் விரைவாக வீடு திரும்பினாள்.

நெல்லுக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியாக இருந்தது. உறக்கம் கொள்ளவில்லை. இரவெல்லாம் தாத்தாவைப் பற்றிய பயங்கர எண்ணங்கள் அலைமோதின. தலைவிரி கோலமாகத் திடீரென்று அவள் தாத்தாவின் அறையில் நுழைந்தாள்.

''தாத்தா, தாத்தா., பயங்கரக் கனவு கண்டேன். எழுந்திருங்கள். உங்களைப் போன்ற முதியவர்களெல்லாம் பிறர் பொருளைத் திருடுவது போலக் கனவு கண்டேன். இந்த இடத்தில் கெட்ட சொப்பனங்களாகவே வருகின்றன. உடனே புறப் படுங்கள்; போகலாம்'' என்று நெல் அவசரப்படுத்தினாள்.

''இப்பொழுதேயா, அம்மா.'' தாத்தா கேட்டார்.

''ஆம், இப்பொழுதேதான்!'' நெல்லின் குரலில் உறுதி தொனித்தது. தன்னுடைய கூடையையும், பையையும் எடுத்துக்கொண்டு நெல் தயாரானாள். ஜார்லி அம்மையார் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார். அறைக் கதவு திறந்திருந்தது. அங்கு பணப் பெட்டியும் பத்திரமாக இருந்தது. அவரை எழுப்பித் தொந்தரவு செய்யாமல் இருவரும் வீட்டை விட்டு வெளியேறினர்.

தெருவை அடைந்ததும் தாத்தாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு நெல் அழுதாள். தாத்தா அவமானத்தால் குறுகிப் போய்விட்டார். தன்னைக் காப்பாற்ற வந்த தேவதையாகவே நெல் அவருக்குத் தோன்றினாள். தவறிழைக்க இருந்த தாத்தாவைக் காப்பாற்றிய பெருமையோடு கம்பீரமாக நெல் முன்னே நடந்தாள். அவளுடைய கையைப் பிடித்துக் கொண்டு தாத்தாவும் பின்னால் தொடர்ந்தார். எங்கே போகிறோம் என்று தெரியாமலேயே இருவரும்



நடந்தனர். வழியில் கிராம வாசிகளின் அன்பு உபசாரங்களைப் பெற்றுக் கொண்டு அவர்கள் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர்.

பட்டணத்துத் திமைகளெல்லாம் இல்லாத ஓர் அமைதியான கிராமத்திற்குச் சென்று உழைத்துப் பிழைக்கலாம் என்று நெல் தீர்மானித்தாள். அத்தகைய கிராமத்திற்கு வழியையும் விசாரித்து அறிந்து கொண்டாள்.

தொலைவில் இருந்த அந்தக் கிராமத்தை நோக்கித் தாத்தாவையும் அழைத்துக்கொண்டு நெல் நடந்தாள். நடந்து, நடந்து அவளுடைய கால்கள் வீங்கின. அவளுக்கு உடம்பெல்லாம் ஒரே வலி. களைப்பும் சோர்வும் அவளை வாட்டின. ஓர் அடி எடுத்து வைப்பதுகூடக் கஷ்டமாக இருந்தது. அவளை ஏதோ ஒரு நோய் பிடித்து ஆட்டி வைப்பதைப் போலத் தோன்றியது. தான் இறந்து விடுவோமோ என்று நினைத்தாள். தான், இறந்துவிட்டாலும் தாத்தாவைநன்றாகப் பார்த்துக் கொள்ள ஒரு நல்ல துணையை அனுப்பும்படி அவள் கடவுளை வேண்டினாள். தாத்தாவுக்காக அவள் துன்பங்களை எல்லாம் பொறுத்தாள். சிரித்த முகத்துடன் அவருக்கு உதவிகள் செய்தாள்.

அடுத்த நாள் நெல்லின் உடம்பு பலவீனமாகியது. அவளால் நிற்க முடியவில்லை. தள்ளாடினாள். கையில் உணவும் இல்லை. காசும் இல்லை. வழியில் இருந்த மக்கள் பரம ஏழைகளாக இருந்தனர். ஆகவே, நெல் அவர்களிடம் ஒன்றும் கேட்கவில்லை. நம்பிக்கையோடு நடந்தாள். தாத்தா தன்னுடைய கஷ்டங்களை எல்லாம் சொல்லி முணுமுணுத்துக்கொண்டே அவளைத் தொடர்ந்தார்.

தனக்கு முன்னால் சாலையில் ஒருவர் போய்க் கொண்டிருப்பதை நெல் கவனித்தாள். விரைந்து சென்று அவரிடம் ஏதோ சொல்ல முயன்றாள்; முடியவில்லை. ஓவென்று அழுது அவருடைய காலடியிலேயே மயங்கி விழுந்தாள். ஏற்கெனவே நெல்லைச் சந்தித்திருந்த ஏழை ஆசிரியர்தான் அவர். நெல்லை அருகிலிருந்த ஒரு விடுதிக்குத் தூக்கிச் சென்றார். அந்த ஆசிரியர், தாத்தாவும் பின் தொடர்ந்தார். பசியினாலும், நீண்ட தூரம் நடந்த களைப்பினாலும் நெல்லின் உடம்பு பலவீனமாக இருந்தது. இரண்டு நாட்கள் அந்த ஆசிரியர் நெல்லுடன் தங்கி, அவளுக்கு வேண்டிய உதவிகளை அன்போடு செய்தார். நெல் குணமடைந்



பில் எவ்வளவு?

ஹோட்டல் முதலாளி: ஏ சர்வர், பீமனுக்கு எவ்வளவுப்பா பில்லு?

சர்வர்: ஆயிரத்துத் தொண்ணூறு ரூபாய் ஐம்பது பைசாங்க.

-சிவ. கனகசபை

தாள். அவருக்கு நன்றி தெரிவித்தாள்.

ஆசிரியர் நெல்லிடம் தம் கதையைச் சொன்னார். அவருக்கு மேற்குப் பகுதியில் இருந்த ஒரு கிராமப் பள்ளியில் ஒரு புதிய வேலை கிடைத்திருந்தது. நல்ல சம்பளம். அந்த வேலையை ஏற்றுக் கொள்ள அவர் போய்க் கொண்டிருந்தார். நெல்லும், அவரிடம் தன் சொந்தக் கஷ்டங்களை எடுத்துச் சொன்னாள். ஆசிரியருக்கு ஆச்சரியமாக இருந்தது. ''நேர்மையாக வாழ வேண்டும். தாத்தாவைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இந்தக் குழந்தை எத்தனை துன்பங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறது!'' என்று எண்ணி அவர் வியந்தார்.

நெல்லையும், தாத்தாவையும் தம்மோடு அந்தக் கிராமத்திற்கு வரும்படி அழைத்தார். அவர்கள் மூவரும் ஒரு வண்டியேறிப் புறப்பட்டனர்.

அந்தக் கிராமம் சிறியது. ஆனால், அங்கு ஒரு புகழ் பெற்ற மாதா கோவில் இருந்தது. பள்ளிக்கூடம் அதன் அருகிலேயே இருந்தது. மாதா கோவிலை ஒட்டி இரு பழைய வீடுகள் இருந்தன. ஒன்று ஆசிரியருக்கும், மற்றது நெல்லுக்கும், தாத்தாவுக்குமாக ஒதுக்கப்பட்டன. மேலும், ஆசிரியரின் சிபாரிசில் நெல்லுக்கு ஒரு வேலை கிடைத்தது. வேளா வேளைக்குக் கோவில் கதவுகளைத் திறப்பதும், அங்கிருந்த கலைப் பொருள்களைப் பயணிகளுக்கு எடுத்துரைப்பதும் அவளுடைய வேலை, கிராம

வாசிகள் நெல்லிடம் மிகவும் அன்பாக இருந்தனர். அவளுடைய வாழ்வில் அமைதியும் சந்தோஷமும் நிறைந்தன. இவ்வளவுக்கும் காரணமாயிருந்த ஆசிரியரை நெல் மனமார வாழ்த்தினாள்.

நெல்லின் உடம்பு மெலிந்து பலவீனமாகியது. குளிர் காலம் வந்ததும் அவள் படுத்த படுக்கையாகி விட்டாள். தாத்தாவும் ஆசிரியரும் அவளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தனர்.

காரணம் என்ன?

"என்ன, சுரேஸர் வீட்டு வாசலிலே ஏரே காரா நிற்குது?"

"எலெக்ஷன் நேரமாச்சே. அவர் வீட்டிலே 29 ஓட்டு இருக்காம்!"

-சிவ. கனகசபை



பழைய கலைப்பொருள் அங்காடியைக் கைப்பற்றிய குவில்ப்புக்குப் பணம் தேவைப்பட்டது. பணத்திற்காக அவன் தாத்தாவையும், நெல்லையும் தேடினான். ஆனால், திடீரென்று அவன் தற்செயலாக ஓர் ஆற்றில் விழுந்து முழுகிப் போனான். உடல் கிடைக்கவே இல்லை.

இன்னொரு மனிதரும் தாத்தாவையும், நெல்லையும் தேடினார். அவர் தாத்தாவின் சொந்தத் தம்பி. வெகு நாட்களுக்கு முன்பே அயல் நாடு சென்று அப்போதுதான் திரும்பியிருந்தார். தன் அண்ணனும், பேத்தியும் பட்ட கஷ்டங்களைக் கேட்டு அவர் மனம் உருகினார். அவர்களைக் கண்டுபிடித்து உதவி செய்வதற்காக அவர் தம் நண்பர்கள் பலருக்கும் கடிதங்கள் எழுதினார். நெல் குடியேறியிருந்த கிராமத்தில் அவருடைய நண்பர்களில் ஒருவர் இருந்தார். அவர் நெல்லையும், தாத்தாவையும் விவரித்து, அவர்களுக்கிடையே நிலவும் பாசத்தையும் விளக்கி ஒரு பதில் கடிதம் அனுப்பினார்.

தாத்தாவின் தம்பி தன் அண்ணனையும், பேத்தியையும் காண்பதற்காக அந்தக் கிராமத்தை நோக்கி விரைந்தார். அந்தக் கிராமத்தை அடையும் போது இரவாகி விட்டது. தம்முடைய நண்பரையும், பள்ளி ஆசிரியரையும் சந்தித்தார். பிறகு எல்லோரும் தாத்தாவையும் நெல்லையும் காண்பதற்காக அவர்களுடைய வீட்டுக்குச் சென்றனர். கதவு திறந்தே இருந்தது. கூப்பிட்டால் பதில் வரவில்லை. நண்பர் முதலில் உள்ளே நுழைந்தார். ஒரு சிறிய மெழுகுத் திரி எரிந்து கொண்டிருந்தது. அறையின் ஓரத்தில் தணல் அணைந்து கொண்டிருந்தது. அருகில் தாத்தா அமர்ந்திருந்தார்.

''ஐயா, நெல் எங்கே?'' என்று நண்பர் கேட்டார். தாத்தா அமைதியாக அடுத்த அறையைக் காண்பித்து, ''அங்கே தூங்குகிறாள்'' என்றார். அதற்குள் ஆசிரியரும் தாத்தாவின் தம்பியும், இன்னும் சிலரும் அறையில் நுழைந்தனர்.

தாத்தா பகலெல்லாம் நெல்லுக்குப் பணிவிடைகள் செய்திருந்தார். இரவெல்லாம் அவளுக்காகப் பிரார்த்தனை செய்திருந்தார். ஆசிரியரைப் பார்த்து, ''எத்தனை சுறுசுறுப்பாக இருந்த நெல் எப்படி ஆகி விட்டாள்! பார்த்தீர்களா?'' என்று கவலையோடு கேட்டார்.

ஆசிரியர் அவருக்கு ஆறுதல் கூறிவிட்டு வெளி நாட்டிலிருந்து ஆவலாக அவர்களைக் காண வந்துள்ள தம்பியைச் சுட்டிக் காட்டினார். தாத்தா கவனிக்கவே இல்லை. ''நெல்லைத் தவிர எனக்கு வேறு உறவினர் கிடையாது'' என்று சொல்லிக் கொண்டே அவர் நெல்லைப் பார்ப்பதற்காக அடுத்த அறைக்குச் சென்றார். அவரைப் பின் தொடர்ந்து மற்றவர்களும் அடுத்த அறைக்குச் சென்றனர். துக்கம் நெஞ்சை அடைக்க அவர்கள்


விம்மி விம்மி அழுதனர். தாத்தாவுக்குத் தெரியாத ஒன்று அவர்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

நெல் இறந்து விட்டிருந்தாள்! தன்னுடைய சிறிய படுக்கையில் அவள் ஓய்வாகக் கண் அயர்ந்திருந்தாள். உலகத் துன்பங்களை எல்லாம் கடந்த ஓர் அமைதியான, இன்பமான, தூக்கத்தில் அவள் ஆழ்ந்திருந்தாள். பிறந்து, வளர்ந்து, கஷ்டப்பட்டுக் கடைசியில் உயிரை விட்ட ஒரு வெறும் உடலாக அவள் காணப்படவில்லை. அன்புக் கடவுளின் அமுத விரல்களால் படைக்கப்பட்டு, மூச்சுக் காற்றுக்காகக் காத்திருக்கும் ஒரு புத்தம் புதிய ஜீவனைப் போல அவள் பொலிவுடன் காணப்பட்டாள்.



அந்தோ! அன்பான நெல், பண்பான நெல், மென்மையான நெல் இனிமையான நெல், பொறுமையான நெல் — இறந்து விட்டாள்! இலைகளையும், பூக்களையும், பழங்களையும் கொண்டுவந்து நெல்லின் படுக்கையை நண்பர்கள் அலங்கரித்தனர். சோகமே உருவான தாத்தா, படுக்கையின் அருகில் உட்கார்ந்திருந்தார். நெல்லினுடைய பூப்போன்ற சிறிய கையை, அன்போடு தனக்கு உதவிகள் செய்த அந்தக் கையை, வையத்தில் வழிகாட்டியாக இருந்து அழைத்துச் சென்ற அந்தக் கையை — தாத்தா ஆசையோடு முத்தமிட்டுக்கொண்டே இருந்தார். ஆண்டவனின் நீதி இந்த மண்ணோடு மட்டும் முடிவடைவதில்லையே! விரிந்து பரந்திருக்கும் அவருடைய அருள் உலகத்திற்கு, இளம் நெல்லின் ஆவி பறந்துவிட்டது! அதைத் திரும்ப அழைக்கும் சக்தி யாருக்கு உண்டு?

CHARLES DICKENS எழுதிய THE CURIOSITY SHOP என்ற ஆங்கிலக் கதையின் சுருக்கமே இது.





எம். ஆர். ராஜன்

"அடேய், காத்தமுத்து. யானை எங்கேடா இருக்குதாம்?"

"பள்ளத் தெரு தேசிகர் தோட்டம் இருக்குதில்லே, அங்கேதான் மாமா ஊரட்டி பண்ணிக்கிட்டிருக்குதாம் — பள்ளத் தெரு சனங்கெல்லாம் மேலண்டைப் பக்கத்தாலதான் தெருவுக்குள்ளே வாராகளாம்."

"என்னடா இது வம்பாப் போச்சது — ரெண்டு மூணு நாளா யானை மதம் பிடிச்சு நம்ம கிராமத்தையே கலக்கிட்டு இருக்குது. கிராமத்துப் பெரிய மனுசங்க இப்படிச் சும்மா கெடக்கிறானுவளே."

கிராமத்துப் பெரியவர் பெரியசாமியின் மனக்குமுறல் மட்டுமல்ல; கிராமமே கலங்கி நின்று கொடுக்கும் குரல் இது.

நத்தம்பட்டி பெருமாள் கோயில் யானை மாதவன் மதம் பிடித்து இரண்டு மூன்று தினங்களாய்க் கட்டுப்பாடில்லாமல் இங்குமங்கும் ஓடி, ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருக்கிறது. அதை மடக்கிக் கோயிலுக்குள் கொண்டு போவது சுலபமான காரியமல்ல.

"அட என்னப்பா — அது காலிலே புண் இருக்குதில்லே, அதைச் சொகப்படுத்தாமே சீழ் பிடிச்சு பெரிசாயிட்டுது. அது நோவு தாங்காமத் துள்ளுது. புண்ணை ஆத்தி மருந்து போட்டுச் சொகப்படுத்தினா, அது ஏன் இந்தத் துள்ளுத் துள்ளப் போவுது?"

"வீராசாமி சொல்றதும் சரிதானுங்க — அந்தப் புண்ணுக்குப் பச்சிலைப் போடலாமுங்களே — நம்ம வைத்தியரய்யா காளிங்கராயரைப் பார்த்துச் சொல்லிப்புடுவோம்."

'நீங்க ஒண்ணு... அது நம்ம மாரியம்மன் கோயில் திருவிழாவிலே எதையோ பார்த்து எப்படியோ மிரண்டிருக்கு. அதுதான் ஒரு மாதிரியா நடந்துக்குது. இதுக்கு மருந்தாவது மாயமாவது... ரெண்டு நாள் சும்மா கெடந்துதுன்னுலே சரியாயிடும். நாம யாரும் அதைப் போயி தொந்தரவு பண்ணுமே இருந்துட்டம்னு அது என்ன செய்யப்போவுது? தானு அடங்கிடும்."

"நாராயணசாமியண்ணே... நீங்க சொல்றதும் சரிதான். ஆனு ஒண்ணு மட்டும் நாம கவனிக்கணுமுங்க. அதன் காலிலே புண்ணு ஒண்ணு இருக்கிறது உண்மைதாங்க. அது சீழ் புடிச்சு கொஞ்ச நாளாவே மாதவனுக்குத்

தொந்தரவு கொடுக்கிறப் போலே தெரியுது. ஒத்தைக் காலே சாய்ச்சுச் சாய்ச்சு நடக்குது. நான்கூட நம்ம பாகன் பாபு கிட்டே சங்கிலியைக் காலே மாத்திக் கட்டுடான்னு சொன்னேன். அவன் கேட்க மாட்டேங்கறுன்.''

''நீங்க எல்லோர் சொல்றதும் சரிதான். இப்படியே பேசிக்கிட்டேயிருந்தால் முடிவு என்ன? கோயில் பட்டாச்சாரி சீனிவாஸ பட்டர் அன்றாடம் ஆறுகால பூசை செய்ய வேணுங்களா? கோயில் அலுவலேக் கவனிக்க அதிகாரிங்க போக வேணுமா? யாத்திரிகர்கள் வந்தா. - நேர்ந்துக்கிட்டு வந்தா பிரார்த்தனே செலுத்த வேணுமா? கோயிலேப் பூட்டியா வைக்க முடியும்? திருவிழா வேறே வருது... இதுக்கு நீங்க எல்லாம் பஞ்சாயத்துலே ஒரு யோசனே சொல்லுங்க... முடிவு எடுப்போம்.''

''இன்னும் ரெண்டு நாள் பார்த்துட்டு — கேரளாவுக்கு ஆளே அனுப்பி மாவுத்தங்களேக் கூட்டியாரச் சொல்லிப் பார்ப்போம் — இல்லே — அரசாங்கத்துக்கும், போலிசுக்கும் சொல்லி உதவி கேப்போம்.''

''அரசாங்கத்திலே கூடச் சொல்லி முடிவு எடுத்துட்டாங்கன்னு?''

ஐயப்பாட்டைக் கிளப்பினுர் கௌரவ தர்மகர்த்தா ஐய்யாசாமி.

''அப்போ தர்மகர்த்தாங்ககிட்டே பஞ்சாயத்து முடிவைச் சொல்லி, கேரளாவுக்கு ஆளே அனுப்பி மாவுத்தங்களே வரவழைச்சுப் பார்ப்போம். செலவு ஆகட்டும். பாதியைக் கோயில் போடட்டும் — மீதியை நாம ஊர் சனங்க கிட்டே வசூல் பண்ணுவோம்.''

நாட்டாண்மை முடிவு ஒத்துக் கொள்ளப்பட்டது.

அதற்குள் திடீரென சின்னுன் ஞாபகம் வந்தது நாட்டாண்மைக்கு...

''எதுக்கும் நம்ம சின்னுனே முயற்சி பண்ணிப் பார்க்கச் சொல்லுவமே...'' என்றுர் நாட்டாண்மை.

''அட, ஏங்க நீங்க ஒண்ணு.... சின்னுன்... சின்னுண்ணுக்கிட்டு....ஒரு மாட்டுக்காரப் பயலேப் போய் பெரிய மனுஷனுக்கிறியளே... நாமெல்லாம் அப்புறம் என்னத்துக்குத்தான் பெரிய மனுஷனு ஊர்லே இருக்கிறதாம்?''

''அய்யா பங்காரு... நீங்க சொல்றதும் சரிதான்... ஊர்லே நாம பெரிய மனுஷரா இருக்க லாயக்கே இல்லேதான்! இந்த மாட்டுக்காரப் பயல் தானேய்யா ஊரையே பயமுறுத்திக்கிட்டு — இனி ஏற்படுத்திக்கிட்டிருந்த புலியை உயிரோட ஆட்டுக்குட்டியைப் பிடிக்கிற மாதிரி பிடிச்சுக்கிட்டு வந்தான்! நம்மாலே முடிஞ்சுதா?'' நாட்டாண்மை நன்முகச் சூடு கொடுத்தார்.

''தி ற மை எங்கேயிருந்தாலும் பாராட்டணுங்க... அதுவும் அந்தத் திறமையும் அறிவும் நாட்டுக்கும், ஜனங்களுக்கும் பயன்பட்டா ரொம்ப சந்தோஷப்படணுங்க... அதுலேயும் தனக்கு ஒரு பைசாக்கூடப் பிரயோசனமில்லாமே,சுயநலமில்லாமேபொதுத் தொண்டு செய்கிறுனே, அவனேப் பார்த்து ஊர்ப் பெரிய மனுஷங்கன்னு சொல்லிக்கிற நாம எல்லாம் தலே குனியணுங்க...'' பொரிந்து தள்ளினுர் பெரியசாமி.

''எலேய் முனியா... போய்ச் சின்னுனேக் கூட்டியாடா...''

சின்னுன் பவ்யமாய் — அடக்கமே உருவாய் வந்து எதிரில் நின்று கொண்டிருந்தான்.

''சின்னுன்...., நீ என்ன செய்வியோ ஏது செய்வியோ தெரியாது. உன்னே நம்பி ஒரு பெரிய பொறுப்பை ஒப்படைக்கப்போறேன். நல்லாக் கேட்டுக்க'' — நாட்டாண்மை விவரமாய்ச் சொன்னுர். அவனுக்கு என்ன பணம், உதவி வேண்டுமானுலும் தருவதாகவும் சொன்னுர்.

''பணம் என்னத்துக்குங்க..? யானே பணமா கேட்கப் போகுது?... நான் கேட்கறப்போ வெல்லம், கரும்பு, வாழைப்பழம் மட்டும் கொடுங்க போதும்... நான் யானேயைச் சொன்ன படி கேட்க வைக்கிறேன்... ஊர் சனங்க யாரும் அதுக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாது.''

சின்னுன் பள்ளத் தெருப் பக்கம் போனுன்.

பஞ்சாயத்து கலேந்தது.

''ஏலேய் பங்காரு, சின்னுனேக் கூட்டியார வேணும்னு எதிர்த்து நின்னியாமில்லே... பஞ்சாயத்துக்காரங்க சொல்றுங்க. உனக்கு ஏண்டா இதெல்லாம்? அந்த மாட்டுக்காரப் பயல் இந்த ஊரிலே பெரிய மனுஷனுகிட்டே வர்ருன். இந்தக் 'கையாலாகாத பஞ்சாயத்துப் பெரியமனுஷனுங்க எதை எடுத்தாலும் அவனேப் போய்க் கலந்து பேசுறுங்க... அவனேக் கூட்டியாராணுக... இதுகூட என்ன, ஒரு புலிக்குட்டி புடிச்சாந்தானே அது மா தி ரி நினேச்சுக்கிட்டாணு......

போகட்டும்... யானைக் கிட்டே இவன ஜம்பம் சாயாது கண்ணா... அதுவும் மதம் புடிச்சிருக்கு... இவன் வேலை காட்டினான்னா...தும்பிக்கையாலே தூக்கி போட்டு ஒரே மிதி... மிதிச்சு நசுக்கப் போகுது...''

''அத்தோட இந்த ஊர் ஜனங்களுக்குச் சின்னான் மோகம் தீர்ந்துடும்.''

''ஆமாம் சாத்தப்பா... அவன் நம்ம இரண்டு பேருக்கும் எதிரா தீர்ப்புச் சொல்லி, நம்ம மானத்தை வாங்கிப் புட்டான்... நம்ம கவுரவமே போயிடுச்சு...!''

''போவுறான் விடு... இந்த யானையோடே இவன் கதி தீர்ந்தது. பார்ப்போமே இவன் எப்படிச் செய்யறான்—என்ன செய்யறான்னு..?''

பேசிக் கொண்டேயிருக்கையில் திபு, திபுவென இரண்டு கிராமவாசிகள் தலைதெறிக்க ஓடி வந்தனர்.

''அண்ணே... அண்ணே... எங்கே யாச்சும் பதுங்கிக்கிடுங்க... யானை சின்னானைத் துரத்திக்கிட்டு வருது.... சின்னான் இப்படித்தான் வர்றான்...''

கபகபவென கண்ணுக்குத் தெரிந்த, தட்டுப்பட்ட வீட்டுக்குள் புகுந்து கொண்டார்கள்.

சிறிது நேரத்தில் சின்னான் ஓடிவந்தான். அவனை யானை துரத்திக் கொண்டு வந்தது. யானைக்குப் போக்குக் காட்டிப் போக்குக் காட்டி கோவிலுக்குள் புகுந்தான் சின்னான்... யானையும் கோவிலுக்குள் புகுந்தது. யானை கட்டும் மண்டபத்திற்குள் நுழைந்து மேலே வேயப்பட்டுள்ள சிமெண்டுக் கூரையின் இரும்புக் கிராதிகளில் தொற்றிக் கொண்டான்.

மண்டபத்தில் தயாராய் வைக்கப்பட்டிருந்த கரும்பை யானை ருசி பார்த்துக் கொண்டிருந்தது. மேலே கூரையில் கட்டியிருந்த வாழைப் பழத்தாரை மெதுவாக இறக்கினான். யானை தும்பிக்கையை நீட்டி எட்டியது...



எட்டும் உயரத்தில் குலையை நிறுத்திக் கட்டி விட்டான். மெதுவாக அவனே பிய்த்துத் தர ஆரம்பித்தான். யானை மெதுவாகக் கோபம் குறைந்து அவனிடம் பழம் வாங்க ஆரம்பித்தது. வெல்லமும் அரிசியும் கலந்து உருண்டையாக்கித் தந்தான்; சாப்பிட ஆரம்பித்தது.

சின்னான் மெதுவாகக் கீழே இறங்கி—நெருங்கி, நெருங்கி வந்தான். நிறையத் தென்னை மட்டைகளைப் போட்டுவைத்திருந்தான் — அது ஓலைகளைக் கிழித்துச் சாப்பிட ஆரம்பித்தது.

புண்ணில்லாத பின்னங்கால் ஒன்றில் சங்கிலியை மாட்டினான்.

அதற்குள் செய்தி கிராமத்திற்கு எட்டியது. எல்லோரும் மெதுவாக வந்து எட்டிப் பார்த்தார்கள். சின்னான் முன் ஏற்பாடு செய்திருந்தபடி வைத்தியர் காளிங்கராயர் நிறையப் பச்சிலைகளை அரைத்து ஒரு கூடை நிறைய எடுத்து வந்தார்.

சின்னானும் காளிங்க ராயரும் சேர்ந்து பச்சிலைக் களிம்பை ஈ மொய்க்காதவாறு புண்ணின் மேலே வைத்துப் பெரிய கட்டுப் போட்டார்கள். யானை அசையாமல் காலைக் கொடுத்துக் கொண்டு நின்றது. அதற்கு அந்தக் களிம்பு ரொம்பவும் இதமாக இருந்தது. சின்னானையும் ராயரையும் யானை தன் தும்பிக்கையால் தடவிக் கொடுத்தது.

இந்த யானையா இரண்டு தினங்களாய் அமளி செய்தது என்று ஆச்சரியப்படும்படி சமர்த்தாக அடங்கிக் கொட்டிலில் ஆடிக் கொண்டே நின்றதைப் பார்த்த ஊரார், இப்போது தைரியமாக வந்து யானையிடம் தேங்காய் கொடுக்க ஆரம்பித்தனர். பாகன் பாபுவைவிட சின்னானிடம் யானை ரொம்பவும் பழக ஆரம்பித்தது. சின்னானும், ராயரும் தொடர்ந்து ஒரு வாரமாகப் போட்டு வந்த பச்சிலைக் களிம்பில் யானையின் கால் புண்ணும் குணமாகி விட்டது!

அப்போதுதான் ஊரார் சின்னானைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள்.

''ரெண்டு நாளிலே எவ்வளவு சேதம் ஆயிடுச்சு தெரியுமா? சாமிக் கண்ணுவோட வாழைத்தோப்பு சின்னாபின்னம் ஆயிடுச்சு... துரைக்கண்ணு கரும்பு போட்டிருந்தாரு... அதுவும் காலி...! நம்ம தேசிகர் தோட்டத்துப் பம்பு செட்டு தூளாயிடுச்சு. நல்ல காலம், நம்ம சின்னான் ரொம்ப சாமர்த்தியமா மடக்கிக் கோவிலுக்குள்ளாறே கொண்டு வந்து — அதனுடைய புண்ணையும் ஆத்திட்டான்...''


''ஆமாம் — அவன் — எப்படி அதைக் கோயிலுக்குள்ளே போக வச்சான்?''

''அதுவா? யானைக்குப் பின்பக்கமாகப் போய்க் கோலியளவு சின்னக் கல்லைத் தூக்கி எறிவான் — அது துரத்தும்... இவன் ஓடுவான். திரும்பவும் செய்வான்... அது துரத்தும்.... இவன் ஓடுவான்... அப்படியே மடக்கி இவன் கோயிலுக்குள்ளே போயி அதைக் கோயிலுக்குள்ளாறே வர வழைச்சுட்டான். நான்தான் அப்பவே சொன்னேனே, நோவு தாங்காமல் துள்ளுதுன்னு...''

''எனக்கு நெனைச்சாலே பயமா இருக்குப்பா... பையன் எப்படித்தான் தைரியமா செய்தானோ! பையன் தைரியசாலியப்பா..'' சின்னானை எதிர்த்து வந்த சாத்தப்பனே இப்படிச் சின்னான் புகழ் பேச ஆரம்பித்து விட்டான்! கோயில் காரியங்கள் வழக்கம்போல் நடக்க ஆரம்பித்தன.

செலவே இல்லாமல் யானை சகஜ நிலைக்குத் திரும்பி விட்டதை எண்ணி எண்ணி எல்லோரும் வியந்தனர்.

பாடும் விஞ்ஞானி



அம்மை நோய் வராமல் தடுக்கும் முறையைக் கண்டுபிடித்தவரான எட்வர்ட் ஜென்னர், ஒரு விஞ்ஞானி என்பது எல்லாருக்கும் தெரியும். ஆயினும், அவர் நன்றாகப் பாடுவார்; கவிதை இயற்றுவார்; பறவைகளைப் பற்றியும் ஆராய்ந்து வந்தார் என்பவையெல்லாம் பலருக்குத் தெரியாது.

அவருக்குக் கிராம வாழ்க்கைதான் மிகவும் பிடிக்கும். உலகப் புகழ்பெற்ற பிறகும், அவர் கிராமத்தில் இருந்துகொண்டே ஆராய்ச்சிகள் செய்து வந்தார்!





நாடோடிப் பாடல்கள்

கிழமைப் பாட்டு

திங்கட் கிழமையிலே
தேர் பார்க்கப் போகையிலே,

செவ்வாய்க் கிழமையிலே
செவந்திப் பூ வைக்கையிலே,

புதன் கிழமையிலே
பூந்தி லட்டுத் தின்கையிலே,

வியாழக் கிழமையிலே
வீட்டுக் குள்ளே இருக்கையிலே,

வெள்ளிக் கிழமையிலே
விளக் கேத்திப் பார்க்கையிலே,

சனிக் கிழமையிலே
சந்தோ ஷமா யிருக்கையிலே

ஞாயிற்றுக் கிழமையிலே
ஞாயவழி நடப்போமே,
—எம். சித்ரா, கோயில்பட்டி.

அண்ணாமலை, அண்ணாமலை

அண்ணாமலை, அண்ணாமலை;
அண்ணாந்து பார்த்தால் ஒண்ணுமில்லை.
போகப் போக ஜவுளிக்கடை;
போய்ப் பார்த்தால் இட்லிக்கடை.
இட்லிக்கும், சட்னிக்கும்
சண்டை வந்துச்சாம்.
அரை கிளாஸ் காப்பி வந்து
விலக்கி விட்டுச்சாம்.
—ராம. உமையாள், காரைக்குடி.



இடி இடித்த சத்தம்

இருமக்கூடச் சத்தில்லையே,
கண்ணே உனக்கு
இடிஇடிச்ச சத்தத்திலே!

நெஞ்சுச் சளி பிடிச்சிருக்கே!
கண்ணே உனக்கு
நிற்கக் கூடச் சத்தில்லையே!

மண்டையிடி பொறுக்கலையா?
கண்ணே, உனக்கு
மருந்தரைச்சுப் போடட்டுமா?

உடம்பெல்லாம் நோகிறதா?
கண்ணே, உனக்கு
ஒத்தடம்நான் கொடுக்கட்டுமா?

ஏலமும் இஞ்சிச்சாறும்
கண்ணே, உனக்கு
எட்டுச் சொட்டுக் கொடுக்கட்டுமா?

தொந்தரவு செய்திடாமே
கண்மணி, நீ
தூங்கிடுவாய் தூங்கிடம்மா.
—சி. டி. லலிதா, மதுரை.

சண்டைக்கு வாரியா?

சண்டைக்கு வாரியா
கண்டைக்காய்ப் பயலே?
என்னிக்கு வருவாய்
எலுமிச்சங்காய்ப் பயலே?
இன்னிக்கு வாரியா
இஞ்சி மாங்காய்ப் பயலே?
நாளைக்கு வாரியா
நார்த்தங்காய்ப் பயலே?
சண்டைக்கு வாரியா
கண்டைக்காய்ப் பயலே?
—ப. சுப்பிரமணியன் (5003).



திருடன் திருந்தினான்!



டி. ஜானகி

பூபதி மிகவும் சோம்பேறி. உழைத்து வேலை செய்வது என்றால் அவனுக்கு வேப்பங்காய். பசி அதிகமானால் எங்கேயாவது திருடச் செல்வான். திருடி வந்த பொருட்களை வைத்தே வாழ்க்கை நடத்தி வந்தான். அவன் மனைவி அவனுக்கு எத்தனையோ அறிவுரைகள் கூறினாள். அப்படியும் அவன் திருந்தவில்லை.

ஒருமுறை அவன், நீதிபதியின் வீட்டுக் குழந்தையான அரவிந்தனின் சங்கிலியைத் திருடியதோடு கழுத்தை நெறித்துக் கொல்லவும் முயன்றான். இரண்டு வயதுக் குழந்தையான அரவிந்தன் வலி பொறுக்காமல் பலமாகக் கத்தினான். தன் குழந்தையின் கதறலைக் கேட்டு நீதிபதி, அவர் வீட்டு வேலைக்காரர்கள், அக்கம் பக்கத்தில் உள்ளோர் அனைவரும் அங்கு வந்து பூபதியைக் கையும் களவுமாகப் பிடித்து விட்டனர். அவனுக்கு ஐந்து வருடம் சிறைத் தண்டனை கிடைத்தது.

எப்படியோ சிறையில் ஐந்து வருடங்களைக் கழித்த பூபதி பழிவாங்கும் எண்ணத்தோடு வெளியே வந்தான்!

ஆம்! எந்த நீதிபதியினால் அவனுக்குத் தண்டனை கிடைத்ததோ, அதே நீதிபதியின் மகனை அரவிந்தனைக் கடத்திச் செல்ல வேண்டும் என்று உறுதி பூண்டான். சாமியார் போல் வேடம் அணிந்துகொண்டு நீதிபதியின் வீட்டிற்குச் சென்றான்.

நீதிபதிக்குத் துறவிகளைக் கண்டால் மிகுந்த மரியாதை உண்டு. பூபதியை உண்மையான சன்னியாசி என்று நினைத்து மகிழ்ச்சியோடு வரவேற்றார். தம் வீட்டிலேயே இரண்டு நாட்கள் தங்கிச் செல்ல வேண்டும் என்று நீதிபதி வற்புறுத்தவே பூபதியும் மனமில்லாதவன் போல் ஏற்றுக்கொண்டான்.

மறுநாள் இரவு மணி பத்து. பூபதி தனக்குள்ளாகவே, ''இன்று இரவு ஒரு மணிக்கு அரவிந்தன் படுத்து உறங்கும் அறைக்குள் சென்று அவனைக் கடத்திச் சென்று விட வேண்டும். இன்னும் அதற்கு நேரம் இருப்பதால் சற்றே கண் அயரலாம்'' என்று முணுமுணுத்தபடியே படுத்துக் கொண்டான்.

நல்ல சாப்பாடு. இதமான காற்று. சுகமாகத் தூங்கி விட்டான். திடீரென்று யாரோ கத்தும் ஒலி கேட்கவே திடுக்கிட்டுக் கண்விழித்தான்.. எழுந்து உட்கார்ந்தான். எதிரே அவன் கண்ட காட்சி அவனையே திடுக்கிட வைத்தது!

ஒரு பெரிய விஷமுள்ள பாம்பு அவனுக்கு அருகில் இறந்து கிடந்தது. அதன் பக்கத்தில் ஒரு பெரிய விறகுக் கட்டை. சிறுவன் அரவிந்தன் அவனைப் பார்த்துக் கூறலானான்:

''சுவாமிஜி. எனக்குத் தண்ணீர்த் தாகம் அதிகமாக இருந்ததால் தண்ணீர் குடிக்கலாம்' என்று சமையல் அறைக்குப் போக எழுந்தேன். ஹாலில் நீங்கள் தூங்கிக் கொண்டிருந்தீர்கள். அப்போது இந்தப் பாம்பு உங்களை நோக்கி வந்துகொண்டிருந்தது. உங்கள் தூக்கத்தைக் கலைக்கக் கூடாது என்று மெதுவாக சமையல் அறைக்குள் சென்று விறகை எடுத்து வந்து, இந்தப் பாம்பின்மீது போட்டு விட்டேன். நான் அப்படிச் செய்யாமல் இருந்தால், ஒருவேளை இந்தப் பாம்பு உங்களைக் கடித்திருக்கலாம். உங்கள் உறக்கத்தைக் கலைத்ததற்கு என்னை மன்னித்து விடுங்கள்.''

பூபதி அரவிந்தன் கூறியதைக் கேட்டுத் திடுக்கிட்டான். தன்னைப் பற்றி எண்ணி வெட்கித் தலைகுனிந்


தான். வாழ்க்கையில் அப்பொழுது தான் தான் செய்த தவற்றை எண்ணி வருத்தப்பட்டான்.

'நீ தவறு செய்தாய். அதனால் உனக்குத் தண்டனை கிடைத்தது. யாரை நீ கடத்திச் செல்ல வேண்டும் என்று நினைத்தாயோ அவனே உன் உயிரைக் காப்பாற்றி விட்டான். அரவிந்தன் உன்னைக் காப்பாற்றி இருக்காவிட்டால் உன் கதி என்ன வாயிருக்கும்? போ! இனிமேலாவது உன் மனைவி சொல்லியபடி ஆண்டவன் கொடுத்த கை,கால்களை வைத்துக் கொண்டு உழைத்துச் சாப்பிடு' என்று அவன் உள்ளம் அவனை இடித்துரைத்தது.

அழுக்கு உள்ளத்தோடு அரவிந்தனின் வீட்டிற்குச் சென்ற பூபதி, திருந்திய உள்ளத்தோடு, 'உழைத்துத் தான் இனி சாப்பிடப் போகிறேன்' என்ற உறுதியோடு வெளியே வந்தான்



கதை முடிந்தது! செடி மடிந்தது!



நம் தமிழ் மொழியில் வழங்கி வரும் நாடோடிப் பாடல்களைப் படித்து மகிழும் உங்களுக்கு, வங்காளி மொழியில் பரம்பரை பரம்பரையாகவங்கக் குழந்தைகள் பாடிவரும் ஒரு நாடோடிப்பாடல், மேலும் மகிழ்ச்சி தரும் என்று நம்புகிறோம். —ஆசிரியர்.

செடியே, செடியே! தினமும்நீ
சிதைந்து வாடும் காரணமேன்?

அடங்காப் பசியால் வெள்ளாடு
அழித்தே என்னைத் தின்கிறது!

ஆடே, ஆடே! நீ செடியை
அழித்துத் தின்னும் காரணமேன்?

பாடி வாழும் இடையன் — என்
பசிக்குத் தீனி தரவில்லை!

இடையா, இடையா! ஆட்டுக்கு
இரையைத் தராத காரணமேன்?

அடங்கா மனைவி, என்பசிக்கு
ஆகா ரத்தைத் தரவில்லை!

பெண்ணே, பெண்ணே! கணவனுக்கு
உண்ணத் தராத காரணமேன்?

என்னே செய்வேன் வாழைமரம்?
இலைதர வில்லை, பரிமாற.

வாழையே, வாழையே! நீ இலையை
வழங்கா திருக்கக் காரணமேன்?

வீழும் பருவ மழையில்லை
வானம் பொய்த்துப் போயிற்று!

மழையே, மழையே! பருவத்தில்
வராமல் போன காரணமேன்?

பழைய பாட்டைத் தவளைகளும்
பாட மறந்து போனதனால்!

தவளையே, தவளையே! நீ பாடத்
தவறிப்போன காரணமேன்?

புவியில் எங்களைப் பாம்புஇனம்
புசித்து ஏப்பம் விடுவதனால்!

பாம்பே, பாம்பே! தவளையைநீ
பாய்ந்து உண்ணக் காரணமேன்?

சோம்பலினாலே தவளைகளைச்
சொகுசாய் விழுங்கிக் களிக்கின்றேன்!

கதை முடிந்தது!
செடி மடிந்தது!!

'சித்ரரதன்'

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543)

Editor: K. Rajendran



கோபால கிருஷ்ண கோகலே

பிறந்த நாள்- மே 9

STERED No. QD MS (S) 288
ered as a Newspaper in Sri Lanka

